# புதுமைப் பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்

டாக்டர் நா. ஆறுமுகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# புதுமைப்பித்தன் கதைகளில்
# சமுதாய விமரிசனம்

டாக்டர் நா. ஆறுமுகம்
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி
தமிழ்மொழி & இலக்கிய உயராய்வு நிறுவனம்
புதுவைப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை-600113

முனைவர் மு. வரதராசனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு—6
(20, 21-12-93)

Dr. M. Varatharacanar Endowment Lecture—6
Endowment Lectures Publication No—47

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Putumaip Pittaṉ Kataikaḷil Camutāya Vimaricaṉam |
| Author | : | Dr. N. ARUMUGAM<br>Reader, Subramaniya Bharathi School of Tamil Lang & Lit,<br>Pondicherry University.<br>Pondicherry-605 014 |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies,<br>CIT Campus, Taramani,<br>Madras-600 113 |
| Publication No | : | 184 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | April 1994 |
| Edition | : | First |
| Paper used | : | Tamil nadu Creamove(m) 16 kg |
| Size | : | 21X14 cms |
| Printing types | : | 10 point |
| No. of Copies | : | 1200 |
| No. of pages | : | VIII + 126 |
| Price | : | Rs. 20/- |
| Printers | : | Kavinkalai Achagam<br>2/141 Kandhasami Nagar,<br>Palavakkam, Madras-600041<br>Ph. No. 41 71 41 |
| Artist | : | Sathya |
| Subject | : | Sociological Criticism on the Shortstories of Puthumaip Pithan |


---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல,

# பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் மதிப்புறு இயக்குநரும் தமிழறிஞருமான முனைவர் மு. வரதராசனாரைச் சிறப்பிக்குமுகமாகத் தோற்றுவிக்கப்பட்டது, 'முனைவர் மு. வரதராசனார் அறக்கட்டளை'. அதன் ஆறாவது சொற்பொழிவு இந்நூல்.

தமிழ்ச் சிறுகதை முன்னோடியும் மணிக்கொடி இதழ்க் கதாசிரியருமான புதுமைப்பித்தன் படைப்புகள் மீதான ஆய்வுகள் மிகமிகக் குறைவு. அதனை ஓரளவு நிறைவு செய்யும் வகையில் இன்றைய ஆய்வுப்போக்கான சமூகவியல் பார்வையில் 'புதுமைப் பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்' எனும் இந்நூல் அமைந்துள்ளது. நிறுவனத்தின் அழைப்பை ஏற்று, தம் பணியைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்துள்ள நூலாசிரியர் முனைவர் நா. ஆறுமுகம் அவர்களை நிறுவனம் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ் அறக்கட்டளை நிறுவ உதவிய சான்றோர்; சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் களமமைத்த இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத்திருத்திய திரு. சு. சண்முகவேலாயுதம்; சொல்லகராதி தயாரித்தளித்த ஆய்வாளர் பு. பாலாஜி; சிறப்பாக அச்சிட்டுத்தந்துள்ள கவின் கலை அச்சகத்தார் ஆகிய அனைவருக்கும் நன்றி.

**ச. சிவகாமி**

சென்னை-113 அறக்கட்டளைப் பொறுப்பாளர்
8-4-94 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



# ஆசிரியர் அறிமுகம்

## முனைவர் நா. ஆறுமுகம் (15-6-1934)

பாண்டிச்சேரிப் பல்கலைக் கழக, சுப்பிரமணிய பாரதி தமிழ் உயராய்வு மையத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் ஆசிரியர் பல்வேறு கல்வி நிறுவனங்களில் பொறுப்பான பல பதவிகள் வகித்தவர். உலகளாவிய நிலையிலும், தேசிய நிலையிலுமான கருத்தரங்குகள் பலவற்றில் பங்கேற்றவர். மலேசியா, சிங்கப்பூர் சென்றுள்ளவர்.

மனோன்மணீயம் (1967), மொழிகாப்பீர் (1968), திருநாராயண குரு (1969), கலித்தொகை - ஓர் ஆய்வு (1985) முல்லை வாழ்க்கை (1989), செங்கோலுக்கு மிஞ்சிய சங்கீதமா (1990), மானுடம் போற்றும் பாவேந்தர் (1991), ஐரோப்பிய முல்லைப் பாடல்கள் (1992), கவிஞரும் அறிஞரும் (1993) முதலான நூல்களையும் படைத்துள்ளார். சுமார் 25 கட்டுரைகள் பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன. சில இதழ்களுக்குப் பதிப்பாசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.

சிறந்த பேச்சாளருமான இவரை, 1976இல் ஈரோடு, கல்விச் சங்கம் 'காஞ்சி நாவலர்' எனப் பாராட்டியுள்ளது.

# முன்னுரை

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை என்றும்,

ஒரு சிறுகதை ஆசிரியர் கைக்கடியார அமைப்பாளரைப் போல மிகத்நுல்லியமான விளக்கங்களில் ஆழ்ந்த கவனம் செலுத்தும் திறன் கொண்டவராய் இருத்தல் வேண்டும் என்றும் கூறுவர்.

மிக உயர்ந்த சிறுகதை எழுத்தாளரான புதுமைப்பித்தன், முக்கியமற்ற சிறிய சூழலிலும் அதன் சரியான பொருளைப் புரிந்து கொள்ளும் பார்வையைப் பெற்றிருந்தார். அந்தச் சூழல் நம் உள்ளத்தைத் தொடவேண்டும் என்பதற்காக அதை விறுவிறுப் புடனும் நெஞ்சத்தில் பதியுமாறும் விவரிப்பார். இருட்டையும் மர்மத்தையும் அசிங்கத்தையும் அவலத்தையும் சுட்டிக்காட்டுவ தற்கு எப்போதும் பொருத்தமானதும் வேகமானதுமான சொல்லீட் டிகளைப் படைத்துக்கொள்வார்; அவை சில நேரங்களில் மரபை மீறியனவாக அமைந்திருக்கும்!

புதுமைப்பித்தன் கதைகளைவிட, கதைக்கு ஆதாரமான ஆணி வேர்களும் வித்துக்களுமான கதை மாந்தர்களைப் பற்றியும் அவர் களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பது பயன்தரத் தக்கது.

* ''அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா, மிருகங்களா? நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட்டு, உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி—எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான், ரொம்ப ஜம்பமாக நாசுக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் இந்த வயிற்றுக்காகத்தான்'' என்று கவந்தனும் காமனும்' கதையிலும்,

* ''பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்று வெகு ஒய்யாரமாக உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே! அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்'' என்று 'பொன்னகரம்' கதையிலும் புதுமைப்

பித்தன் கூறும் முன்னிலை உத்திச் சொற்றொடர்களைப் படிக்கும் போதெல்லாம், அவர் செய்யும் சமுதாய விமரிசனம் முற்றிலும் சரியானதாகத் தோன்றும்.

உலக இலக்கியத்தில் அவருக்கிருந்த தேர்ச்சியைப் போலவே பழந்தமிழ் இலக்கியத்திலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. ஆனால் ஆங்கில இலக்கியப் பாணியைக் கையாளாமல் தமிழுக்கென ஒரு பாணியைத் தமிழ் எழுத்தாளர்கள் கைக்கொள்ள வேண்டும் என்பது அவர் கொள்கை. அதனால் கதைக் கருவிற்காக எடுத்துக் கொண்ட பொருள்களிலும், அவைகளை உருவாக்கும் வடிவத்திலும், வெளிப்படுத்தும் நடையிலும் தனித்தன்மையான வேகத்தையும் துணிச்சலையும் புகுத்தினார். பழமையில் ஊறித் தோய்ந்து பண்பட்டைந்த அவர் உள்ளம் வியக்கத்தக்க இலக்கிய நோக்கைப் பெற்றிருந்தது,

25-4-1906 இல் தோன்றி 30-6-1948இல் மறைந்த புதுமைப் பித்தன் 42 ஆண்டுகளே வாழ்ந்தார்; 1933முதல் 1946 வரையிலான 12 ஆண்டுகளே இலக்கியப் படைப்புகளை உருவாக்கினார்!

தன்னுடைய கதைகள் ஊருக்கு உபதேசம் செய்யும் நிறுவனமோ, பிற்கால நல்வாழ்வு நலந்தேடும் ஆயுள் காப்பீட்டுக் கழகமோ அல்ல என்று புதுமைப்பித்தன் கூறினாலும், அவருடைய கதைகள் சமுதாயக் கொடுமைகளை எதிர்க்கும் போர்க்கருவிகளாயிருக்கின்றன என்பது உண்மை.

திக்கற்றவர்க்காக, புறக்கணிக்கப்பட்டவர்க்காக, கொடுமை செய்யப்பட்டவர்க்காகத் தம் எழுத்தின் மூலம் வாதாடினார் புதுமைப்பித்தன். அவை சமுதாய விமரிசனமாய் வீறுபெற்று விளங்குகின்றன!

—சமயத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் உயர்ந்த தத்துவங்களைப் பேசிக்கொண்டே பொழுது போக்குகிற பெரிய மனிதர்களின் வேடங்களும் செயல் முரண்களும்,

—விதி விபசாரத்திற்குக் காரணமான சமுதாயம்,

—ஆண் பெண் உறவுகளையும் உணர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் மரபுமீறல்,

—பணக்காரர்களின் பூலோகத் தெய்வத்தன்மை,

—இடைத்தர வர்க்கத்து உழைப்பாளியின் ஆசைகள், கனவுகள் ஏக்கங்கள், நடப்பியல் வாழ்க்கை நிலைகள்,

—மனிதன், விதி, தெய்வம் ஆகியவற்றின் உறவுகள்,

—புராணக் கதை வழி கற்பு பற்றிய புது விளக்கம்,

—நந்தனார் வழிபாடு நடக்கும் தமிழகத்தில் அவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் உள்ள தீண்டாமைக் கொடுமை,

—கலப்புத் திருமணங்களால் ஏற்படும் முரண்பாடுகள் ஆகியவை பற்றிய விளக்கங்களைக் கிண்டலாகச் சுட்டிக்காட்டி வேகமாகவும் விறுவிறுப்பாகவும் தேவைப்பட்ட இடங்களில் நெருப்புத் தொடர்களாலும் விமரிசனம் செய்கிறார்.

வணக்கத்திற்குரிய என் பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு வரதராசனார் அவர்களின் திருப்பெயரில் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள அறக்கட்டளையின் சார்பில் 1993 ஆம் ஆண்டு திசம்பர் 20, 21 ஆகிய இரு நாள்களிலும் நிகழ்த்திய சொற்பொழிவுகளே இந்நூலாக உருவாக்கம் பெறுகின்றன.

சொற்பொழிவு நிகழ்த்தும் நல்வாய்ப்பை நல்கியதுடன், விரைந்து நூலையும் வெளிக்கொணர்ந்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும், அறக் கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

சொற்பொழிவுகளுக்கு வருகைதந்து கலந்துரையாடலில் பங்கேற்றுக் கருத்துரைகளை வழங்கிய சான்றோர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், நிறுவனத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்க ளுக்கும் ஆய்வாளர்களுக்கும் என் நன்றி.

புதுச்சேரி

**நா. ஆறுமுகம்**

# உள்ளே

பக்கம்

புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் 1-122

புதுமைப்பித்தன் 15, பேசுவது மானம், இடை பேணுவது...? 34, வாட்டி எடுக்கும் வறுமையின் கொடுமை 37, மரபு மீறல் 45. பூலோகத் தெய்வங் கள் 52. ஏழ்மை நிலை54, மனிதன், விதி, தெய்வம் 60. கற்பு 65, தீண்டாமை 74, தலைப்பிலேயே சமுதாய விமரிசனம் 78, கலப்புத் திருமணம் 95, கயிற்றரவு 110, கதைமாந்தர் வருணனை 115, முடிவுரை 121

துணை நூற்பட்டியல் 123

சிறப்புச் சொல்லகராதி 124

# புதுமைப் பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்

''மனிதனின் மனத்தை உயர்த்துவதன் மூலம் அவனை மேலும் உரம் கொண்டவனாக ஆக்குவதுதான் எழுத்தாளனின் சிறப்புரிமை. மனிதனுடைய கடந்த காலத்து உன்னத உணர்வுகளான மதிப்பு, தன்னம்பிக்கை, பேராற்றல், பேராண்மை, இரக்கம், அவலம், தியாகம் ஆகியவற்றை அவனுக்கு மீண்டும் நினைவுபடுத்துவதன் மூலம் மிக உயர்ந்த தளத்திற்கு அவனுடைய மனத்தை அழைத்துச் செல்ல இயலும்.

எழுத்தாளனின் குரல் மனிதனைப் பற்றிய வெறும் பதிவுகளாக இருக்க வேண்டிய இன்றியமையாமையில்லை. எத்தனை இடர்கள் வந்தாலும் அவன் அவற்றையெல்லாம் தாங்கியும், தாண்டியும் வாழ்ந்து விடுவதற்கு உதவி செய்யும் தாங்கு கம்பங்களில் ஒன்றாக அல்லது தூண்களில் ஒன்றாக அது இருக்க இயலும்''.

1949ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபெல் பரிசைப் பெற்ற வில்லியம்ஃபாக்னர் சிறந்த படைப்பின் இயல்பு பற்றிக் கூறிய கருத்துரையே மேலே கண்டது.

மனித இயல்பு பற்றியும் அவர் கூறுகின்ற கருத்து ஆழ்ந்து எண்ணிப்பார்க்கும் சிறப்புக்குரியது. 'மனிதன் எதையும் சகித்துக் கொள்பவனாக மட்டும் இருக்கமாட்டான் என்று நம்புகிறேன்.

அதையும் தாண்டி வெற்றிபெற்று விடுவான். அவன் அழிவில்லாதவன். ஏனெனில், உயிரினங்களிடையே அவன் மட்டும்தான் வற்றாத குரலுடையவன். அதுமட்டுமன்று; அவனுக்கென்று ஒரு இதயம் இருக்கின்றது. இரக்கம், தியாகம், தாங்கிக்கொள்ளும் சக்தி இவையாவுமுள்ள ஒரு துடிப்பும் அவனுக்கு உள்ளது. இந்தச் செய்திகளை எழுதுவதுதான் ஒரு எழுத்தாளனின் கடமை'.

மிசிசிபி மாநிலத்தில் ஆக்ஸ்போர்டு நகரின் உழவர் குடும்பத்தைச் சேர்ந்தவர் வில்லியம் ஃபாக்னர். 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் நாளில் ஸ்டாக்ஹோம் நகரில் நிகழ்ந்த மாநில அளவிலான மிகப்பெரிய விருந்தில் உரையாற்றினார். அந்தச் சீரிய உரைக்காக அவர் என்றென்றும் நினைந்து பார்க்கப் பெறுகிறார். அந்த உரையில் எழுத்தாளரின் கடமை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"இன்றைய இளம் எழுத்தாளன் சிலவற்றைக் கற்றுணர வேண்டும். ஆக்கப்படுவது என்பது எல்லாவற்றிலும் மிகக் கேவலமானது என்னும் கருத்தை அவன் தனக்குத்தானே உணர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்துகொண்ட பின் அதை என்றென்றும் மறந்துவிட வேண்டும். அதன் பிறகு அவனுடைய எழுத்துப் பட்டறையில் மனித மனத்தின் நிலையான உண்மைக்காட்சிகளும், உண்மைகளைத் தவிர வேறெந்தப்பொருள்களும் (செய்திகளும்) உள்ளே நுழைந்துவிடா வண்ணம் படைக்க வேண்டும். உலகளவிலான பழம்பெரும் உண்மைகளைப் பேசாத எந்தக் கதையும் அற்ப ஆயுளில் அழிந்துபோகும். அன்பும் கண்ணியமும் அவலமும் பெருமையும் இரக்கமும் தியாகமும் இவைகளை வெளிப்படுத்தாத வரையிலும் அவனுடைய உழைப்பெல்லாம் படைப்பெல்லாம் - எழுத்தெல்லாம் - ஒரு சாபக்கேடே"

(தினமணி, 12-12-92)

மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்

என்றும்,

மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன்னிரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்

என்றும் மானிடச் சமூகத்தின் மேன்மையை முழங்கும் பாவேந்தர்,

இருக்கும்நிலை மாற்றுமொரு புரட்சி மனப்பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடமை
(பா. க. தொ. 2)

என்று எழுத்தாளரின் இலக்கணம் பற்றி இயம்புவது நினைவுக்கு வருகிறது :

பத்தொன்பதாம் நூற்றாண்டின் (1840) முற்பகுதியில் அமெரிக்காவில் நெதானியல் ஹாதார்ன் (Nathaniel Hawthorne) மீண்டும் சொல்லப்பட்ட கதைகள் (Twice told tales) என்னும் கதைத் தொகுப்பை வெளியிட்டார். அதை மற்றொரு சிறுகதை ஆசிரியராகிய எட்கர் ஆலன் போ (Edgar Alan Poe) திறனாய்வு செய்தார். அவரைத் தொடர்ந்து பிரரண்டா மேத்தியூஸ் (1901) (Branda Mathews) என்பவரும் ஆங்கிலச் சிறுகதையின் இலக்கணத்தை விளக்கியுள்ளார்.

'ஒரே அச்சில் சொல்லக்கூடிய அல்லது கேட்கக்கூடிய சுருக்கமான கதைதான் சிறுகதை. சிறுகதையைப் படிக்கும் நேரத்தில் அதைப் படிக்கும் வாசகர் அக்கதையைப் படைத்த எழுத்தாளரின் ஆதிக்கத்துக்குள்ளாகி விடுகிறார். புறச்சூழ்நிலைகளோ அல்லது படிக்கும்போது ஏற்படும் சலிப்போ அந்த ஆதிக்கத்தைத் தடுப்பதில்லை'.

During the hour of the perusal the reader is at the writer's control. There are no external or extruisic influences resulting from weariness or interruption.
(தஇ கொ, 9. பக் ! 212)

இவ்வாறு ஆலன் போ சிறுகதையின் இலக்கணத்தை வரையறுத்தார். அவருக்குப்பின் ஐம்பது ஆண்டுகள் கழித்து வந்த பிராண்டர் மேத்தியூஸ் தம்முடைய சிறுகதையின் தத்துவம் (The philosphy of the short story) என்னும் நூலில் நாவலுக்கும் சிறுகதைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறார். 'சிறுகதை ஒருமையானதும் முழுமையானதுமான மெய்ப்பாட்டைத் தருவது. நாவல் பல நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் (மெய்ப்பாடுகளையும்) கொண்டது; நாவல் காவியம் இதிகாசம் போன்ற வகையிலமைய சிறுகதை தனி நிலைச் செய்யுளாகிய அகப்பாடல் போன்றது'. மேலும், சுருக்கியெழுதப்பெற்ற கதை என்னும்

பொருளிலிருந்து வேறுபடுத்தி சிறுகதை (Short story) என்னும் புதிய இணைச்சொல்லை வகுத்துக் கொடுத்தார்.

'சிறுகதை என்பது ஒரேயொரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனி நிகழ்ச்சியைப் பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சி தரும் விளைவைப் பற்றியோ எடுத்துக்கூறும் இலக்கிய வடிவம். சிறுகதை என்னும் வடிவம் தன்னளவில் முழுமை பெற்ற ஒரு தனிப் பிண்டம். அதை விரிவுபடுத்தினாலோ அல்லது விரிந்த ஒரு பெரும் படைப்பினுள் நுழைத்தாலோ அந்த வடிவத்தின் அழகும் சுவையும் கெட்டுவிடும், என்னும் உணர்வைத் தருவதுதான்' என்பது அவருடைய சிறந்த விளக்கமாகும்.

பிராண்டர் மேத்தியூசைத் தொடர்ந்து வந்த ஜேம்ஸ் கூபர் லாரென்ஸ் (James Cooper Lawrence - 1917), 'ஒரே மூச்சில் படித்து முடிக்கக்கூடிய கதைதான் சிறுகதை' என்னும் ஆலன் போ கூறிய கருத்தை ஏற்கவில்லை. சிறுகதை, பொருள் அடிப்படையில் இரண்டாகவும் அமைப்பு அடிப்படையில் மூன்றாகவும் கொள்ளப் பெறும் என்றார்.

மெய்ம்மைக் கதைகள், கற்பனைக் கதைகள் (Stories of fact and stories of fancy) என்னும் இரண்டு வகைகளாகவும்,

வரலாற்றுக் (முறை) கதைகள், நாடகக் (முறை) கதைகள், நீதியறிவுரைக் (முறை) கதைகள் (Stories told Historically, Dramatically and Didactically) என்னும் மூன்று வகைகளாகவும் அவர் பாகுபாடு செய்தார்.

சிறுகதை என்பது ஒரு தனி உணர்வை ஏற்படுத்துவது என்னும் கொள்கை கதை முழுவதற்கும் பொருந்தாது. அன்றியும் சிறுகதையை ஒரு புதுமையான மரபு என்று கூறுவதைவிட, மிகவும் பழமையானது என்றும், இந்த இலக்கிய வகையிலிருந்து தான் பெரும்பாலும் எல்லா இலக்கிய வடிவங்களும் கிளைத்தெழுந்தன என்றும் முடிவு கட்டுகிறார் ஜேம்ஸ் கூபர் லாரென்ஸ்.

(தஇகொ, தொ. 9, ப: 213)

'அமெரிக்காவில் பிறந்து பிரான்சிலும் சோவியத் ரஷ்யாவிலும் படர்ந்து, அயர்லாந்தில் செழித்து வளர்ந்து, ஆங்கில மொழி இலக்கியத்தில் ஊடுருவி நிற்கும் சிறுகதை, தமிழில் இன்றும் அன்றும் படைப்பாளிகளுக்கு ஒரு கைவந்த கலையாக அமைந்ததில்

வியப்பில்லை' என்று கருதும் கோ. சிவபாத சுந்தரம், பல்லாயிர மாண்டு காலமாக வாய்மொழி மரபில் தமிழில் கதை வழங்கி வந்தது என்பதை விளக்குகிறார்.

''தமிழ் மக்கள் தங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே பாட்டி களிடம் கதை கேட்டு வளர்ந்தவர்கள்; நாட்டை ஆண்ட மன்னர் கள் கூட கதை சொல்லுவதற்கென்றே புலவர்களை நியமித்திருந் தார்கள். மிகப்பழைய காலத்திலிருந்த இந்த முறையைத் தொல்காப்பியரே எடுத்துச் சொல்லியிருப்பது, அவர் காலத்துக்கு முன்பே வழக்கிலிருந்த மரபாகக் காணலாம். தொல்காப்பியம் செய்யுளியலில் வரும் ''பாட்டிடை வைத்த குறிப்பினாலும்'' என்னும் நூற்பாவில்,

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்

என்னும் உரைவகைகள் இக்காலப் புனைகதைகளாகிய நாவல் சிறுகதைக்குப் பொருந்தும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். அன்றியும் இதற்கு அடுத்த நூற்பாவில், ''ஒன்றே மற்றும் செவிலிக் குறித்தே'' என்று விளக்குவதால், 'பொருள்மரபில்லாப் பொய்ம் மொழியும், பொருளொடு புணர்ந்த நகைமொழியும்' செவிலி அல்லது பாட்டி சொல்லும் புனைகதை மரபெனத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுவதே, அவருக்கு முன்னிருந்த மரபு தொடர்ந்து வந்ததென்பதை விளக்குகிறது''. (தஇகொ, தொ. 9; பக்-210)

சங்கத் தனிப்பாடல்களின் அமைப்பு சிறுகதைக் கருவினைக் கொண்டதாகச் சிலர் கருதுவர். (கதைக்கலை, அகிலன், பக்-21,24) சிலப்பதிகாரத்தில் வரும் கிளைக்கதை, துணைக்கதை பிற்காலத் தில் வழங்கப்படும் தனிப்பாடல்கள் ஆகியவையும் சிறுகதையின் அமைப்புக்குப் பொருத்தமானவை என்போரும் உண்டு.
(தமிழ் இலக்கிய வரலாறு, மீ.ப.சோ. பக்-9 20)

ஆனால், கா. சிவத்தம்பி மாறான கருத்தைக் கூறுகிறார். ''புனைகதை என்பது நாவல், சிறுகதை என்னும் இரு இலக்கிய வகைகளையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். பாரம்பரிய வழிவரும் கதைகளிலிருந்து வேறுபட்டவை புனைகதைகள். மேனாட்டார் வருகையை அடுத்துத் தமிழ்நாட்டு அரசியல் சமூக அமைப்புகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியதும் சிறுகதை நாவல் என்னும் இலக்கிய வகைகள் தமிழில் வந்து புகுந்தன''. (பக்-14)

அவர் மேலும் விளக்குவார்: "தமிழில் தொடர்நிலைச்செய்யுள் மரபு இருந்துவந்ததெனினும் சோழர் காலத்தில் தோன்றும் சாம்ராச்சியப் பெருமையையும், ஆட்சிச் சிறப்பையும் தக்க முறையில் பிரதிபலிப்பதற்கு வடமொழி மரபிலுள்ள காவியத்தை, அம்மொழியில் அது இயற்றப் பெறும் இலக்கணத்திற்கியையத் தமிழிலும் அமைத்தது போன்று, மேனாட்டர் வருகைக்குப் பின்னர் தமிழ்நாட்டின் சமூகப்பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவதற்குப் புனைகதையையே கையாண்டனர். முன்பு தொட்டுக் கதை மரபு இருந்து வந்ததெனினும் அதனை விடுத்து அதன்வழிவரும் புனைகதைகளை எழுதத் தொடங்கினர்". (பக்.14)

1879ஆம் ஆண்டில் முதல் தமிழ் நாவல் தோன்றியது என்பர் அதன் பிறகு அதைப் போன்ற நீண்ட உரைநடைக் கதைகளாகிய நாவல்களைப் படைப்பதில்தான் அந்நாளைய எழுத்தாளர்கள் கவனம் செலுத்தினார்கள். மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி கதை, இராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் ஆகியவை நாவல்களே.

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதை என்னும் அங்கத நூலை எழுதினார். அது அக்காலத்திலிருந்த மடாதிபதிகளின் இழிநிலையை எடுத்துக்காட்டியது. மூளையற்ற அக்குருவும் அவருடைய மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்னும் ஐந்து சீடர்களும் செய்த நகைப்பிற்கிடமான செயல்களை நிகழ்ச்சிவாரியாக விளக்கிக் காட்டியது. பரமார்த்த குரு கதை, தமிழ் உரைநடையில் படைப்பிலக்கியத் தோற்றத்திற்கான அடிக்கல்லாகும் என்பர். இது வெளிவந்த ஆண்டு 1845.

இதைத் தொடர்ந்து பல கதைத் தொகுப்பு நூல்கள் வெளிவந்தன 1875இல் சந்திர வர்ணம் பிள்ளை, கதாசிந்தாமணியையும், 1877இல் செல்வக்கேசவராயர், அபிநவக்கதைகளையும், வெளியிட்டார்கள்.

தமிழ்நாட்டில் அச்சுப்பொறி பயன்பாட்டிற்கு வந்ததும் பல வாய்மொழிக் கதைகள் அச்சிடப்பட்டுப் புழக்கத்திற்கு வந்தன. அவ்வாறு முதன் முதலில் அச்சில் வெளியானது தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்த பஞ்ச தந்திரக் கதைகள் ஆகும்.

மொழிபெயர்ப்புக் கதைகளாயிருந்தாலும் இந்தக் கதைகளில் விலங்குகளே பாத்திரமானதால் இவை எல்லா மக்களும் புரிந்து கொள்ளும் கதைக்கூறு கொண்டனவாயிருந்தன. இதையடுத்து,

தமிழ் மக்களுக்கு விளங்கக்கூடிய இடப்பெயர்கள், மக்கட்பெயர்க ளடங்கிய பூலோக வினோதக் கதைகள், திராவிட பூர்வ காலக் கதைகள் போன்ற தொகுப்புகள் வெளிவந்தன. வீராசாமிச் செட்டியாரது (1877) விநோத ரச மஞ்சரியும் குறிப்பிடத்தக்க சிறப்புடைத் தொகுதியாகும். தமிழ்ப் புலவர்கள் வாழ்வில் நிகழ்ந் தனவாகக் கருதப்பட்டவற்றை நிகழ்ச்சிகள் வரிசையாகவே இது கூறுகிறது. இவை சிறுகதையின் தோற்றத்திற்கு ஒரு ஏந்தான சூழ் நிலையைத் தோற்றுவித்தன எனலாம். விவேக சிந்தாமணி போன்ற இலக்கிய ஏடுகளும் அதற்குக் களம் அமைத்துக்கொடுத்தன என்பதை மறக்கவியலாது.

இவ்வாறு சென்ற நூற்றாண்டின் இறுதியில் வெளியான கதை சிந்தாமணி, விநோதரச மஞ்சரி, திராவிட பூர்வ காலக் கதைகள், விவேக மஞ்சரி, பூலோக வினோதக் கதைகள் போன்ற நூல்களில் கற்பனை நிறைந்த புராண இதிகாச அடிப்படையிலான கதைகள் தொகுக்கப்பட்டன.

பூலோக வினோதக் கதைகள் என்னும் நூலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் தம்முடைய இலக்கியக் கொள்கையாகக் கூறும் கருத்து ஆழ்ந்து எண்ணுதற்குரியது.

''அனுபவத்துக்கு மிஞ்சிய ஞானமும் அதிலும் மேம்பாடான படிப்பினையும் வேறு எதுவுமில்லை. அனுபவமே குரு; அனுபவமே அரசன்; அனுபவமே சாஸ்திரம்; அனுபவமே சாட்சி; அனுபவமே உத்தம சிநேகிதன். இவ்வாறே மற்றை எல்லாவற்றிற்கும் எல்லாமு மாயிருப்பது அனுபவமே. அல்லாமலும் உலகமே அனுபவ திருஷ்டாந்தமாயிருக்கிறதுடன், அனுபவமே ஒவ்வொரு வினோத மாகவும் காணப்படுகிறதால் இக்கிரந்தத்துக்குப் பூலோக விநோதக் கதைகள் என்று பெயர் கொடுத்திருக்கிறோம்.'' (தஇகொ, தொ. பக். 215)

இதைப் படிக்கின்ற நமக்கு, இன்றைய சிறுகதை ஆசிரியர்கள் அனுபவத்தின் உதவியைக் கொண்டு சிறுகதைகளைப் படைக்கும் போது வெற்றிபெறுவது நினைவுக்கு வருகிறதல்லவா? மேலும், வெறும் கற்பனைக் கதைகள் இயற்றப்பட்ட அந்நாள்களில்கூட அனுபவத்தின் சாயல் அவசியமென்று உணரப்பட்டது, பிற்காலத் தில் சிறுகதைப் படைப்புக்கு முன்மாதிரியாக அமைந்தது என்று கருதுவார் சோ. சிவபாத சுந்தரம்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விவேக சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் பல புதிய அனுபவச் சிறுகதைகள் வெளிவந்தன. கே.எஸ். வைத்தியநாதய்யர், டி.எஸ். வெங்கட்ராமய்யர், எம்.எஸ். இராகவன், அம்மணியம்மாள் போன்றவர்கள் சிறுகதைகள் எழுதினார்கள்.

1902இல் சபாபதி முதலியாரின் பன்னிரு நீதிக்கதையும், 1910இல் இராமாநுஜலு நாயுடுவின் ஆசையின் முடிவு என்னும் சிறுகதையும், 1911இல் நமச்சிவாய முதலியார் புனைந்தும் தொகுத்தும் தந்த புலவர் வறுமையும் தக்காணத்துப்பூர்வ கதைகளும், 1912இல் வி. பகவந்தராவின் ஐங்கதைக் கொத்தும், 1913இல் கா. நமச்சிவாய முதலியார் பெயரில் விநோதக்கூற்றுகளும், 1914இல் ஜே.எஸ். வைத்தியநாதய்யரின் விநோத விகட சிந்தாமணியும், 1915இல் தாண்டவராய முதலியாரின் கதாமஞ்சரியும் வெளிவந்தன.

நாவலிலிருந்து சிறுகதை தோன்றியதற்கு வடிவ அமைப்பு நெறியில் இவ்வாறு காரணம் கூறுவதைப் போல, சமுதாய வரலாற்றியல் பார்வையில் கா. சிவத்தம்பி வேறு காரணம் கூறுகிறார்.

"புனைகதை (Fiction) எனப்படும் இலக்கிய வகை, மேனாடுகளில் நிலமானிய அமைப்புச் (Feudalism) சிதையத் தொடங்கிய காலத்துத் தோன்றிய இலக்கிய வகையாகும். வணிக விவசாயமும், கைத்தொழில் வளர்ச்சியும் நிலமானிய அமைப்பின் சிதைவுக்குக் காரணமாக அமைந்தன. நிலமானிய முறை மாறத்தொடங்க அம்முறையின் சிறப்பம்சமான கூட்டு வாழ்க்கை சிதையத் தொடங்கிற்று. குடும்பம் குலம் என்ற சமூக நிறுவனங்களின் முக்கியத்துவம் குன்றத்தொடங்கிற்று. தனிமனிதன் முக்கியமானவனானான். புதிதாகத் தோன்றிய பொருளாதார உறவுகள், புதியசமூக உறவுகளை ஏற்படுத்தின. இப்புதிய சமூக உறவுகளை எடுத்துக் காட்டுவதற்கு வழக்கிலிருந்த இலக்கியங்கள் வலுவற்றவையாகவிருந்தன. இருக்கவே பாரம்பரியக் கதைகளின் வழியாகப் புதிய இலக்கிய வகையொன்று தோற்றுவிக்கப்பட்டது. அப்புதிய இலக்கிய வகையே புனைகதை. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமுள்ள பாரம்பரிய உறவு பிறழும் நிலையிலேயே புனைகதை தோன்றும்.

சமுதாய அமைப்பிலும் மனித உறவிலும் மாற்றங்கள் தோன்றி வளர்ந்து பெருகும் காலக் கட்டத்தில் வாழும் படைப்பு இலக்கிய கர்த்தாக்களின் உணர்வினைத் தாக்குவது புதிய சூழ்நிலையில்

தோன்றும் மனித இன்னல் அல்லது புதிய சூழ்நிலையால் ஏற்படும் நடைமுறையே. இதுவே, சிறுகதையின் கருவாக அமையும். குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை.'' (பக். 16)

தமிழ்ச் சிறுகதையின் தோற்றம் குறித்து மேலும் விரிவாக சமுதாய வரலாற்றுப் பார்வையோடு அவர் விளக்குவார். "இரண்டாம் பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலம் முதல் இந்தியா சுதந்திரம்பெற்ற நாள்வரை அந்நியரே தமிழ்நாட்டின் பேரிறைமையாளராகவிருந்து வந்தனர். அவ்வாறு பிறர் ஆட்சி நடத்தினரெனினும் உள்ளூர் ஆட்சி நிலமானிய முறைப்படியே நடத்தப் பெற்று வந்தது. எனவே பெரும்பாலும் மத்திய அரசின் ஆட்சி பொதுமக்களிடையே நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. நாயக்க மன்னர்கள் காலத்தில், தெலுங்கர்கள் நிலக்கிழார்களாக நியமிக்கப்பட்டதால் நாட்டுமக்கள், சிறப்பாக விவசாயிகள், பாதிக்கப்பட்ட வகையினை அக்கால இலக்கியம் பிரதிபலித்தது.

ஆனால், பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே உண்மையான மாற்றம் ஏற்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆட்சி முழுவதும் ஆங்கிலேயர் கைக்கு வந்ததும் உள்ளூர் நிலையிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தோமஸ் மன்றோவின் நிர்வாக மாற்றங்கள் இதற்குக் காரணமாகவிருந்தன. அரசியல் மாற்றங்கள், ஆங்கிலக் கல்வியின் வருகை முதலியன தமிழ்ச் சமுதாயத்தைத் தாக்கின. சமுதாயத்தின் மேல் தளத்திலிருந்தோரே இம்மாற்றத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆங்கிலக் கல்வியினாலும் மேனாட்டுத் தொடர்பினாலும் மேனாட்டு இலக்கிய வகைகள் தமிழ்நாட்டிற் கையாளப்பட்டன.'' (பக். 21)

இந்தச் சூழ்நிலையில் புதுச்சேரியில் தங்கியிருந்த வ.வே.சு. ஐயர் எனக் குறிப்பிடப்பெறும் வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் 1913ஆம் ஆண்டில் குளத்தங்கரை அரசமரம் என்னும் கற்பனைக் கதையை எழுதினார். இது விவேகபோதினி என்னும் இதழில் அவருடைய பெயரில் வெளிவராமல் அவருடைய மனைவி பாக்கிய லட்சுமி அம்மாள் பெயரில் வெளிவந்தது. இது தமிழ்நாட்டுப் பிரச்சினைகளை பிரதிபலிப்பதாய், தமிழ்நாட்டையே முற்று முழுதாய்ப் பிரதிபலிக்கிறது.

"தமிழ்நாட்டுப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து அதற்கு முன்னர் கதைகள் எழுதப்பட்டிருப்பினும், அத்தகைய பிரச்சினையொன்றினை முற்றிலும், தமிழ் நாட்டிற்கும் வாழ்வு முறைக்கும் மரபுக்கும் இயைய எடுத்துக் கூறுவது குளத்தங்கரை அரசமரமே யாகும்" என்பார் கா. சிவத்தம்பி. (பக். 26)

"பார்க்கப்போனால் நான் மரம்தான். ஆனால், என் மனதி லுள்ளதையெல்லாம் சொல்லுகிறதானால், இன்னைக்கெல்லாம் சொன்னாலும் தீராது" என்று இவ்வாறு ஒரு திடீர் அறிவிப்புடன் தொடங்கிக் குளத்தங்கரை அரசமரம் சொன்னதாகக் கதை எழுதியது தமிழ்ச் சிறுகதைக்கு புதிய உத்தியாகும்!

புதுச்சேரியில் வாழ்ந்தபோது பிரஞ்சுமொழி இலக்கியத்தாக்கம் ஏற்பட்டிருந்தாலும் அவர்தம் முன்னோடிகளாக மாப்பசான் போன்ற பிரஞ்சு ஆசிரியர்களைக் கொள்ளவில்லை. "வங்கப் படைப்பாளி இரவீந்திரநாத் தாகூரின் சிறுகதை உத்தியை முன் மாதிரியாகக் கொண்டு சுயமான கதை" எழுதினார் என்பர் இந்தக் கதையுடன் பின்னர் எழுதிய ஏழு கதைகளையும் சேர்த்து "மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்னும் கதைத் தொகுப்பு வெளியாயிற்று. 1917இல் புதுச்சேரியில் கம்ப நிலையம் என்னும் பதிப்பகத்திலிருந்து வெளியிடப்பட்ட இந்நூல்தான் இன்றைய தமிழ்ச் சிறுகதையின் முதல் தொகுப்பு என்று கருதப் பெறுகிறது.

பின்னர் இந்தத் தொகுப்பு இராஜாஜி அவர்களின் முன்னுரை யுடன் சென்னையில் இரண்டாம் பதிப்பாக 1927இல் வெளியிடப் பட்டது. 1917இல் வெளியான முதல் பதிப்பை அறியாத பலர், 1924இல் வெளியான மாதவய்யாவின் குசிகர் குட்டிக்கதைகள் என்னும் தொகுப்பே முதல் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு என்று குறிப்பிடுவார்கள் என்கிறார் சோ. சிவபாத சுந்தரம். (பக். 217) ஆகவே, வ. வே. சு. ஐயர் தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

பிரஞ்சு நாட்டு விடுதலைக்காகப் போராடிய வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க் வாழ்க்கை வரலாற்றைத் தழுவி எழுதப்பெற்ற மங்கையர்க்கரசி தமிழ்ச் சிறுகதை உலகில் முன்னோடியாக விளங்கியது மட்டுமல்லாமல், நாட்டுப்பற்றை ஊட்டுவதாகவும் அமைந்தது என்பார் கா. திரவியம். (பக். 181)

ஆகவேதான் "பேச்சுக்குச் சிதம்பரம் பிள்ளை; பாட்டுக்குப் பாரதியார்; எழுத்துக்கு ஐயர். இம்மூவரும் தமிழ்நாட்டின் மும் மணிகள்; பாரத மாதாவின் வீரத்திரிசூலங்கள்" என்று சுத்தானந்த பாரதியார், 'வீர விளக்கு வ.வே.சு. ஐயர்' என்னும் தமது நூலில் புகழாரம் சூட்டுகின்றார். (கா. திரவியம், பக். 140)

இலத்தீன், கிரேக்கம், செருமானியம், பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய மேனாட்டுமொழிகளை நன்கு அறிந்திருந்த வ.வே.சு. ஐயர் ஆங்கில மக்களுக்குத் தமிழ் இலக்கியத்தினை அறிமுகஞ் செய்வதில் ஈடுபட்டார். அதைப் போலவே சிறுகதை என்னும் மேனாட்டு இலக்கிய வடிவத்தை, புதிய ஓர் இலக்கிய வகையைப் படிக்கிறோ மென்ற உணர்வில்லாது, தமிழுக்கு இயல்பான ஒன்றையே படிக் கிறோமென்ற உணர்வுடன் தமிழ் மக்கள் ஏற்கும் வகையில் எழுதி னார் என்பர். இவர் எழுதியனவாக இன்று எட்டுக் கதைகள் கிடைத்துள்ளன. அவற்றுள் நான்கு கதைகள் - அழேனிழக்கே, எதிரொலியாள், அனார்க்கலி, லைலாமஜ்னூன் - மேனாட்டு இலக்கியப் பழக்கத்தால் எழுந்தவை.

அவருடைய முன்னுரை அவருடைய இலக்கியக் கொள்கையை எடுத்துக் காட்டும் : "மங்கையர்க்கரசியின் காதலும், காங்கேயனும் கயேலிக் மகாகவியான ஒஸ்லியனுடைய காவியங்களின் பந்தாவில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை தமிழ்நாட்டுப் பழைய வீரத் தன்மையையும் பழக்க வழக்கங்களையும் ஒருவாறு விளக்கிக் காட்டும். இவைகளின் தலைப்பில் எழுதியிருக்கும் சூசிகைகளைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தெரியும். ஆனால், ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமற் போனாலும் போகலாம், என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்... கதைகள் கவிதை நிரம்பியனவாய், ரசபாவோ பேதமாய் இருக்க வேண்டுமென்பது எனது அபிப்ராயம். இக்கதைகளை அவ்வாறே செய்ய முயற்சிக்கின்றேன்......" (தஇகொதொ, பக். 217-218)

கதை எழுதுதலை ஓர் இயக்கமாக உருவாக்கும் நோக்குடைய வராக இவர் விளங்கினார் என்பர் (சாலை இளந்திரையன், புதுத் தமிழ் முன்னோடிகள், பக்-52). அத்துடன் சிறுகதைக்கான கருப் பொருள் இடம் காலம் கடந்து வரும் என்பதை இந்த ஒரே தொகுதி யின் மூலமாகக் காட்டுகின்றார். ஏனெனில் நிகழ்கால இடப் பின்னணியில் குளத்தங்கரை அரசமரமும் கமலவிஜயமும் அமைய, அழேனிழக்கே பாரிசிலும், லைலாமஜ்னூன் அரேபியாவிலும்,

நிகழ்ந்ததாகக் கற்பனை செய்யப்பட, எதிரொலியாள் கிரேக்க தேவதைகளின் காலத்ததாகவும், அனார்கலி அக்பர் காலத்ததாகவும் அமைந்துள்ளன. வரலாற்றுப் பின்னணியில் அமைந்தவைகளாகப் பிறகதைகள் கூறப்பட்டுள்ளன.

வ.வே.சு. ஐயரின் சிறுகதைகளைத் தொடர்ந்து சிறுகதை எழுதியவர் பத்மாவதி சரித்திரம் என்னும் நாவலை எழுதிப் புகழ் பெற்ற அ. மாதவய்யா. அவருடைய குசிகர் குட்டிக் கதைகள் என்னும் தொகுப்பு அவர் ஆங்கிலத்தில் எழுதிய கதைகளின் மொழி பெயர்ப்பு ஆகும். குட்டிக்கதைகள் மூலம் சீர்திருத்தக் கருத்துகளைக் கல்வியறிவு குறைந்த எளிய மக்களுக்கு எடுத்துச் சொல்லும் நோக்கத்தில் எழுதினார். சமூக இன்னல்களைக் கண்டு ஆற்றாத உணர்ச்சி நெகிழ்வுடன் எழுதினார்; தமிழ்நாட்டில் அக்காலத்தில் பெரும் சிக்கலாயிருந்த பெண்ணின் இழிநிலை, வரதட்சிணை முதலியன பற்றி எழுதினார். தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் இவர் கதைகளுக்கு முக்கிய இடமுண்டு என்று கூறுவார் புதுமைப்பித்தன். (சிவத்தம்பி. பக். 24)

1920ஆம் ஆண்டில் காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம், ஆங்கில எதிர்ப்பியக்கமாக நிற்காது, தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற இந்திய மக்களின் மறுமலர்ச்சி வாழ்வுக்கு வழிகாட்டும் இயக்கமாகவும் விளங்கியது. காந்திய வழி நின்ற இதழ்கள் சாதி ஒழிப்பின் அவசியம், இந்திய ஒற்றுமை, கள்ளுக்கடை மறியல், அந்நியத்துணி எதிர்ப்பு ஆகியவற்றைப் பற்றி எழுதத்தொடங்கின. கவிதைகளைப் போல கதைகளும் பயன்படுத்தப்பட்டன. இதனால் சிறுகதை செழிப்புக்கு வழி ஏற்பட்டது.

தமிழில் பல இதழ்கள் இப்பணியில் ஈடுபட்டன. டாக்டர் வரதராஜுலுநாயுடுவின் 'தமிழ்நாடு', திரு வி.க.வின் 'தேசபக்தன்', 'நவசக்தி', டி.எஸ். சொக்கலிங்கத்தின் 'காந்தி', சங்கு கணேசனின் 'சுதந்திரச் சங்கு', சீனிவாசனின் 'மணிக்கொடி', வாசனின் 'ஆனந்த விகடன்' முதலியனவும், 'ஹனுமான்', 'பாரத தேவி', 'பாரதமணி', 'ஆனந்த போதினி', 'சுதேசமித்திரன்', 'கலைமகள்' முதலியனவும் சிறுகதைகளை வெளியிட்டன.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இது முக்கியமான காலக்கட்டமாகும். ஆங்கில அறிவு இல்லாத எளிய மக்களிடத்துச் சிறுகதை

பரவிய காலம் இது. சிறுகதையின் வளர்ச்சி அகலமானதாகவும் ஆழமானதாகவும் அமைந்தது. அகலவளர்ச்சிக்குக் கல்கியும் ஆழ வளர்ச்சிக்கு மணிக்கொடிக் குழுவினரும் காரணம் என்பர். 1930ஆம் ஆண்டின் காலக்கட்டத்தில் ஆங்கிலச் சிறுகதையின் முக்கிய சாதனங்களான Strand, Pearsons Magazine, Argosy போன்ற பத்திரிகைகள் தமிழ்நாட்டில் பரவின. அதனால் ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், பிரஜானுகூலன், பத்திரிகைகளுக்கு வேண்டிய கதைக் கருக்களும் புதிய உத்திகள் சிலவும் கிடைத்தன. விமோசனம், நவசக்தி முதலிய பத்திரிகைகளில் பணியாற்றிய இளம் எழுத்தாளரான கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி ஆனந்தவிகடனில் துணை ஆசிரியராகச் சேர்ந்தார்; ஆங்கிலச் சிறுகதை இதழ்களின் உதவியை நாடிப் பல சிறுகதைகளை எழுதினார். இவ்வாறு தமது இதழின் மூலம் சிறுகதை வளத்தைப் பெருக்கியதில் கல்கியின் சாதனை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்கியின் சிறுகதைகள் பெரும்பாலும் நீண்டனவாகவே இருக்கும். சிறிய உருவத்தினவாய் அமைந்த கதைகள் மிகக் குறைவு. எழுத்து வாசனை வளர்ந்துவரும் மக்களுக்கே எழுதுகிறோம் என்பதை உணர்ந்த அவர், அதற்கேற்ற முறையில் தாம் நேரே நின்று உரையாடுவது போன்ற நடையினைக் கையாண்டார். அவரது நகைச்சுவையுணர்வு இந்நடைக்கு மேலும் அழகூட்டியது என்பார் சிவத்தம்பி (புக். 34).

தாம் மாத்திரம் எழுதியதல்லாமல் மற்ற எழுத்தாளர்களையும் ஊக்குவிக்க கல்கி, ஆனந்தவிகடன் மூலம் 1933இல் ஒரு சிறுகதைப் போட்டி நடத்தினார். போட்டியின் முடிவாக அறிவிக்கப்பட்ட பரிசு கிடைக்காததனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் ஆர்ப்பரித்து எழுந்த வேகத்தில் தோன்றியதுதான் புத்திலக்கியக் குழுவான மணிக்கொடிக் குழு.

காந்தி, சுதந்திரச் சங்கு போன்ற பத்திரிகைகள் சிறுகதை வெளியிட்டன எனினும் அவை இலக்கியச் சோதனையைத் தம் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொள்ளவில்லை. மணிக்கொடியே இந்த இலட்சியத்துடன் தோன்றிய முதல் பத்திரிகை. "முழுக்க முழுக்க அரசியல் விஷயங்களையே வெளியிட்டு வந்த காலத்தில் மணிக்கொடிப் பத்திரிக்கை அரசியலை மட்டுமல்லாமல் இலக்கியத்தையும் வளர்க்க எண்ணிப் பிறந்தது. இதனால்தான் மணிக்கொடிப் பத்திரிகைக்காரர்கள் தங்கள் பத்திரிகையைத்

'தமிழ்நாட்டின் வெள்ளி முளைப்பு' என்றார்கள்.'' 1933 முதல் 37 வரை சில இடைவெளிகளுடன் வெளிவந்த இந்த இதழ், பல ஆசிரியர்களின் பல்வகைச் சிறுகதைகளை வெளியிட்டது.

1933இல் தோன்றிய மணிக்கொடியின் பொறுப்பாசிரியர் கே.சீனிவாசன், வ. ரா. அவருக்குத் துணையாகவிருந்தார். பி. எஸ். இராமையா, நா. பிச்சமூர்த்தி, கு.ப. இராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன், மௌனி, புதுமைப்பித்தன் முதலியோர் அதில் எழுதினர். இவர்கள் பல சோதனைகள் செய்து புதிய புதிய வடிவங்களில் புதிய புதிய கருப்பொருள்களையும் கதை மாந்தர்களையும் உருப்படுத்தினார்கள்; ஆங்கில மரபில் புதியதோர் இலக்கியக் கொள்கையை நிறைவேற்றி வைத்தார்கள்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி எழுத்தாளர்களுக்கு நிலையான ஓர் இடமுண்டு. சிறுகதையின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு இவர்கள் பெருந்தொண்டாற்றியுள்ளனர். கதைப் பொருளிலும் கதை சொல்லும் வகையிலும் இராமையா சிறப்புற்று விளங்கினார். சி சு. செல்லப்பா, பெ.கோ. சுந்தரராஜன், இருவரும் கதையமைப்பில் பல சோதனைகளைச் செய்தார்கள். கதை மாந்தரின் உரையாடல் மூலம் இயல்பான மனித உணர்ச்சிகளை மறைத்து, நற்பண்புகளை வெளிக்காட்டும் வகையில் நடந்து கொள்வதை இவர்கள் தமது கதைகளில் படைத்தார்கள். சிதம்பர சுப்பிரமணியன், மனிதனின் அடிப்படை நாணயத்தைத் தம் கதைகளில் வெளியிட்டார். இவர்கள் யாவரும் நிகழ்ச்சிகளைக் குறைத்து மன உணர்வுகளை வெளிப்படுத்தி எழுதியதால், சிறுகதையின் உருவம் புதிய சிறப்புப் பெற்றது,

பிச்சமூர்த்தி தம் கதைகளில் கையாளும் முறைகளிலும் பயன்படுத்தும் சொற்களிலும் ஒரு மெய்ப்பொருள் அறிவு நிலை தோன்றுமாறு செய்வார், நமது பண்பாட்டில் ஆழ்ந்த பற்றும் அக்கறையும் கொண்டிருந்ததால், கடவுள் பக்தி முதல் தத்துவ ஆராய்ச்சி வரை கதைக் கூறோடு சேர்ந்த அனுபவ உணர்வாக அவர் கதைகள் திகழும்.

கு. ப. இராஜகோபாலன் உணர்ச்சி முனைப்பு நிலைகளே மனித வாழ்வில் முக்கியமானவையென்றும் அவையே மனிதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றன என்றும் நம்பினார். அதனால் நிகழ்ச்சிகளை விட உணர்வுகளையே கதையில் முக்கிய வெளிப்பாடுகளாக காண்பித்தார். இத்தகைய உணர்ச்சி நிலைகள் தோன்று

வதற்குச் சிறந்த களமாக அமைவது ஆண்-பெண் உறவே. அவருடைய பெரும்பான்மையான கதைகள் ஆண்பெண் உறவுக் களத்தின் அடிப்படையில் தோன்றியமைக்கு இது காரணம்.

சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனுக்கு அடுத்த முக்கிய இடத்தைப் பெறுபவர் கு.ப ரா. என வழங்கப்பெறும் கு.ப. இராஜ கோபாலன். புதுமைப்பித்தனைக் காட்டிலும் கு.ப.ரா. சிறுகதையில் உருவப் பரிசோதனை செய்திருக்கிறார் என்றும், அப்பரிசோதனை யில் முன்னையவரைவிட இவர் வெற்றி பெற்றுள்ளார் என்றும் க நா. சுப்பிரமணியம் கருதுவார். (கா.சி.பக். 65).

1944இல் கு.ப.ரா. அவர்களும், 1948-இல் புதுமைப்பித்தனும் மறைய, இவர்கள் மறைவுடன் மணிக்கொடிக்காலம் முடிவடை கிறது. மணிக்கொடி எழுத்தாளர்களில் முதன்மையானவராகப் புதுமைப்பித்தன் திகழ்ந்தார்.

இந்தப்பின்னணியில் புதுமைப்பித்தன் படைத்த கதைகளையும் அந்தக் கதைகளில் வெளியாகும் சமுதாய விமரிசனங்களையும் பார்க்கலாம்.

அதற்கு முன்னே புதுமைப்பித்தனுடைய வாழ்க்கை வரலாற் றைச் சிறிது காண்போம்.

### புதுமைப்பித்தன்

''மணிக்கொடி'க்குழுவினருள் ஒருவரான புதுமைப்பித்தன் மிக உயர்ந்த சிறுகதை எழுத்தாளராவார். உணர்த்த விரும்பும் செய்தியை-அப்படி ஏதேனும் இருந்தால்-கலையின் முழு உருவ மாக்குவார்; ஆகவே தன்னுடைய கதைகளின் பொருள் தனக்கே தெரியாது என்று அவர் கூறிக்கொள்வது உண்மையாயிருக்கலாம். அவர் மிகுதியாகப் படைக்கும் எழுத்தாளர்; ஆனால் அவருடைய சில கதைகள் சிறந்த இலக்கியமாக நிலைபெற்று வாழும் வல்லமை பெற்றுத்திகழும். எவ்வளவு முக்கியமற்ற சிறிய சூழலாயிருந்தாலும் அதில் கவிதைத் தன்மையைக் காணும் பார்வையை அவர் பெற்றிருந்தார்; அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளுகின்றோமோ இல்லையோ அந்தச் சூழல் நம் உள்ளத்தைத் தொடவேண்டும் என்பதற்காக அதை விறுவிறுப்புடனும் மனத்தில் பதியுமாறும் விவரிப்பார். இருட்டையும் மர்மத்தையும் விளக்கும் உரைநடைக் கவிஞராகிய அவர், எப்போதும் பொருத்தமானதும் வேகமானது மான சொற்களைப் படைத்துக்கொள்வார்; அவை சில நேரங்களில் மரபை மீறியனவாக இருக்கும்,

''நவீன வாழ்க்கைச் சூழல்களைத் தம் கதைகளில் கையாண்ட அவர், அகலிகை அல்லது சிவபெருமான் தொழிலாளியாக வருதல் போன்ற புராணக் கதைகளுக்குத் தம்முடைய பார்வைக்கு ஏற்ப மறுவிளக்கம் தருவார். கடவுள் சாதாரண எளிய மனிதனாக வரும் கதைகளில் நகைச்சுவையும் இரக்கமும் இருப்பதைப் போல சில நேரங்களில் வேகமான அங்கதமும் இடம்பெறும்''

(A History of Tamil Literature, P. 184-185)

''மேல் நாட்டுப் புனைகதை இலக்கியத்தையும் அதனுடைய கோட்பாடுகளையும் கற்றறிந்த புதுமைப்பித்தன் அவைகளைத் தமிழில் படைப்பதற்கும் பயன்படுத்தினார். அவருடைய சிறுகதை களை அழகான கவிதைகள் என்று கூறலாம். சில நேரங்களில் புராணக்கதைகளின் மூலம், அவைகளின் அழகையும் உட்பொருளை யும் ஆழத்தையும் புகழையும் நமக்கு உணர்த்தி உணர்ச்சி யூட்டச் செய்வார். அதன் வழி தமிழின் வளத்திற்கும் வழிவகை செய்வார்''

(The Pageant of Tamil Literature, P. 83-84)

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் இவ்வாறு கூறுகிறார். ''இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கவிதைக்குப் புதுமையும் புத்து யிரும் கொடுத்தவர் பாரதி - தமிழ் வசனத்துக்குப் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் புதுமைப்பித்தன். ஆனால் பாரதிக்கு முன் தமிழில் மிகச் சிறந்த கவிச் செல்வங்கள் இருந்தன. புதுமைப் பித்தனுக்கு முன் மிகச் சிறந்த வசனச் செல்வங்கள் இருந்தன என்று சொல்ல முடியாது. புதுமைப் பித்தனின் இலக்கியம் தமிழ்நாட்டு வசன இலக்கியத்தின் சொத்து. அவர் வசன இலக்கிய மன்னர்''.

புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழ்ச் சிறுகதையுலகில் குறிப் பிடத்தக்க சாதனை புரிந்துள்ள சிறந்த எழுத்தாளர்களுள் ஒரு வரான கு. அழகிரிசாமியின் கருத்து இது. ''புதுமைப் பித்தன் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஒரு மைல்கல்; ஒரு திருப்பு முனை; ஒரு சகாப்தம், அதில் சந்தேகமில்லை. எவ்வாறு பாரதி தமிழ்க் கவிதை யுலகில் நடை, வடிவம், உள்ள டக்கம் முதலியவற்றில் புதியன புகுத்தி இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கவிதைக்குத் தலைமகனாக விளங்கினாரோ, அதேபோல் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்குச் சிறப்புமிக்க தலைமகனாக விளங்கியவர் புதுமைப்பித்தன்''

சிறந்த எழுத்தாளரும் இலக்கிய விமரிசகருமான ரகுநாதன் இவ்வாறு கருதுகின்றார்: ''பாரதியார் தற்காலத் தமிழின் மறு மறுமலர்ச்சிக்குப் புதிய எளிய கவிதைகள்மூலம் வளம் சேர்த்ததைப் போல, அவருக்குப் பிறகு உரைநடை வாயிலாக, சிறப்பாகச் சிறு கதைகள் மூலம் தமிழ் மொழிக்கு வளமும் வனப்பும் பெருமையும் சேர்த்தவர் புதுமைப்பித்தன் ஆவார்''.

இவ்வளவு புகழுக்கும் உரிமையானவரான புதுமைப் பித்தன் 1906ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் நாளில் தென்னாற்காடு மாவட்டம் கடலூரை அடுத்த திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தந்தையார் தென்னாற்காடு மாவட்டத்தில் நிலப்பதிவு தாசில் தாராகப் பணியாற்றிய சொக்கலிங்கம்பிள்ளை; தாயார் பர்வதம் மாள். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் விருத்தாசலம். அது அவருடைய தாத்தாவின் பெயர் ஆகும். அவர்களுக்கு பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம்.

எட்டு வயதிலேயே தாயை இழந்த விருத்தாசலம் மாற்றாந் தாயின் அன்பு வறுமையையும் கொடுமையையும் தன்னுடைய இளமையில் அனுபவிக்க நேர்ந்தது. படிப்பில் நாட்டம் அற்ற அவர், பள்ளிக்கூடம் செல்லுவதைவிட ஊர் சுற்றுவதில்தான் மிகுதியான மகிழ்ச்சியும் ஆர்வமும் கொண்டிருந்தார். அதனால் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெறுவதற்கு மிகுதியான ஆண்டுகள் தேவைப் பட்டன.

திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் பட்டப் படிப்பையும் நிதான மாகவே முடித்து 1931இல் தம்முடைய இருபத்தைந்தாவது வயதில் பி.ஏ. பட்டம் பெற்றார்.

கல்லூரியில் படித்த போது அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த ஆங்கில நாவல்கள் படிப்பதில் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந் தார். நாள்தோறும் புதிதுபுதிதான துப்பறியும் நாவல்களை அவர் விரும்பிப் படித்தார். இரவில் நெடுநேரம்வரை கண் விழித்து எடுத்து வந்த நாவல்களைப் படித்து முடித்துவிட்டுத்தான் அவர் தூங்கு வாராம். ''நாவல்கள் படிப்பதிலும் வேறு இலக்கியங்கள் படிப்பதி லும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த புதுமைப் பித்தனுக்கு, நாமும் இதைப்போல் எல்லாம் எழுதவேண்டும் என்ற ஆசை இயல்பாகவே எழுந்தது''.

புதுமைப்பித்தனுடைய தந்தை சொக்கலிங்கம்பிள்ளை விரும் பியவாறு புதுமைப்பித்தனுக்கு அரசுப்பணி கிடைக்க வழியில்லாமற்

போய்விட்டது. காரணம் கல்லூரிப் படிப்பை பட்டப்படிப்பை - 25 வயதுக்குள் முடிக்க முடியாமற் போனது. மகன் தாசில்தார் ஆகா விட்டாலும் ஒரு வழக்கறிஞராக வரவேண்டும் என்று நினைத்த தந்தை. அதற்கேற்ற முறையில் திருவனந்தபுரத்தில் பெண் பார்த்தார். 1931ஆம் ஆண்டு ஜூலை மாதம் புதுமைப்பித்தன் கமலாம் பாளைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப்பிறகும் சட்டப்படிப்பில் நாட்டம் கொள்ளாமல் மனம்போன போக்கில் வாழலானார். நூல்களைத் தேடிப் படிப்பதும் நண்பர்களோடு இலக்கியம் பற்றி உரையாடுவதுமே அவருக்குப் பிடித்தவையா யிருந்தன.

அவருடைய போக்குப் பிடிக்காததனால் தந்தையின் வெறுப்புக்கு உள்ளானார். மாற்றாந்தாயின் வெறுப்பும் கொடுமையும் சேர்ந்து வீடு அமைதியற்றுப் போயிற்று. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு எழுத்தாளராக வளரவேண்டும் என்று விரும்பியதால், மனைவியைத் திருவனந்தபுரத்துக்கு - தாய்வீட்டுக்கு அனுப்பி விட்டுத் தான் சென்னைக்குச் சென்றார்.

விடுதலையுணர்வையும் காந்தீய இலட்சியங்களையும் இதழ்கள் பரப்பிக் கொண்டிருந்தன. 'மணிக்கொடி' என்னும் இதழில் வெளி வந்த புதுமைப்பித்தனின் கதைகளையும் கட்டுரைகளையும் பாராட்டி டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா. ஆகியோர் புதுமைப் பித்தனுக்குக் கடிதங்கள் எழுதினர். அறிஞர் ராய. சொக்கலிங்கம் காரைக்குடியில் நடத்திய 'ஊழியன்' என்னும் இதழில் புதுமைப் பித்தன் உதவி ஆசிரியராய் நியமிக்கப்பெற்றார். அதில் புதுமையான கதைகளை எழுதி வெளியிட்டு வந்த புதுமைப்பித்தன், அதன் அலுவலகச் சூழ்நிலை தன் சுதந்திரப் போக்கிற்கு இடையூறாக இருந்ததால், அந்த வேலையை விட்டுவிட்டு மீண்டும் சென்னை திரும்பினார்.

வார இதழாக வந்து கொண்டிருந்த மணிக்கொடி பொருளாதார நெருக்கடியினால், மாதமிருமுறை வரும் கதை இதழாக மாற்றப்பட்டது. இதன் ஆசிரியரான பி. எஸ். இராமையாவுக்குத் துணையாயிருந்து புதுமைப்பித்தன் மணிக்கொடியின் வளர்ச்சிக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார்.

1936இல் மணிக்கொடி நின்றுவிட்ட பிறகு, புதுமைப்பித்தன் 'தினமணி' நாளிதழின் ஆசிரியர் குழுவில் சேர்ந்து பணியாற்றினார். மணிக்கொடி இதழ் மீண்டும் வெளிவந்தபோது புதுமைப்பித்தன்

நாசகாரக் கும்பல் போன்ற அருமையான கதைகளை அதில் எழுதினார். கருத்து வேறுபாட்டினால் பி.எஸ். இராமையா மணிக்கொடியின் உறவை முறித்துக்கொண்டு வெளியேறிய பிறகு, புதுமைப்பித்தன் அதில் எழுதவில்லை. 'மணிக்கொடி'யின் முடிவைப் பற்றிப் புதுமைப்பித்தன் எழுதுவார் :

''மணிக்கொடிப் பத்திரிகையானது வெளிவரும் முன்பு எத்தனையோ பத்திரிகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், புதிய பரிசீலனைகளுக்கு இடங்கொடுக்கும், உற்சாகமூட்டும், வரவேற்கும் பத்திரிகைகள் அதற்கு முன்போ பின்போ கிடையாது ... அன்று மறுமலர்ச்சி என்ற ஒரு வார்த்தை புதிய வேகமும் பொருளும் கொண்டது. அதைச் சிலர் வரவேற்றார்கள். பலர் கேலி செய்தார்கள், பெரும்பான்மையோர் அதைப் பற்றி அறியாதிருந்தார்கள். மணிக்கொடி பொருளாதார நிர்ப்பந்தம் என்ற நபரால் சிசுஹத்தி செய்யப்பட்டு அசிரத்தை என்ற முனிசிபல் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டது. மூச்சுப் பேச்சற்றுக் கிடந்த அந்தக் குழந்தையை எடுத்துவந்து, ஆசை என்ற ஒரே அமுதூட்டி வளர்ப்பதற்காக நானும் (புதுமைப்பித்தன்). பி.எஸ். இராமையா என்ற நண்பரும், எங்களைப் போலவே உற்சாகத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட இன்னும் சில எழுத்தாளர்களும் சேர்ந்து நடத்தி வந்தோம். அது இரண்டு மூன்று வருஷங்களில் கன்னிப் பருவம் எய்திக் கண்ணை மயக்கும் லாவண்யத்தைப் பெறும் சமயத்தில் அதைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும் நண்பரைப் பெற்றோம். அவர் அவளை ஒருவனுக்கு விற்றார். விற்றவுடனே அவளுக்கு ஜீவன் முக்தி இந்தக் கலிகாலத்தில் கிடைத்தது. இதுதான் தமிழில் புதிய பரிசீலனை செய்யவேண்டும் என்று கோட்டை கட்டியவர்களின் ஆசையின் கதை''.

நவயுகப் பிரசுராலயம், புதுமைப்பித்தன் மணிக்கொடியில் எழுதிய 29 கதைகளைப் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்றும், 'ஆறு கதைகள்' 'நாசகாரக்கும்பல்' 'பக்த குசேலா' என்றும், புதுமைப்பித்தன் மொழிபெயர்த்திருந்த கதைகளை 'உலகத்துச் சிறுகதைகள்' என்றும், இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வாழ்க்கை வரலாறு 'பேஸிஸ்ட்ஜடாமுனி' என்றும், வெளியிட்டது. புதுமைப்பித்தனுடைய பெயரும் புகழும் வாசகர்களுக்கிடையே அறிமுகமாவதற்கும் வளர்வதற்கும் இந்த நூல்கள் பெரிதும் காரணமாயிருந்தன,

விண்ணையளக்கும் கற்பனைத் திறனும் வீறார்ந்த படைப் பாற்றலும் பெற்றிருந்த புதுமைப்பித்தனுக்குத் தினமணி நாளி தழில் நாள்தோறும் செய்திகளை மொழிபெயர்த்தளிக்கும் பணி மகிழ்ச்சியூட்டுவதாயில்லை. ஆனால் அவருடைய இலக்கியதாகமும் படைப்புத் திறனும் ஓரளவு செயல்படுவதற்குத் தினமணியின் ஆண்டுமலர்கள் உதவின. அவருடைய சிறந்த கதைகள் சில அம் மலர்களுக்காக எழுதப்பட்டவைதாம். தினமணியில் விறுவிறுப்பும் வேகமும் பொருந்திய நூல் மதிப்புரைகளையும் எழுதினார்.

ஏழரை ஆண்டுகாலப் பணிக்குப் பிறகு (1936 முதல் 1943) தினமணி ஆசிரியர் குழுவிலிருந்து வெளியேறிய புதுமைப்பித்தன், 1944 தொடக்கத்தில் 'தினசரி' (ஆசிரியர் சொக்கலிங்கம்) நாளி தழின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றார். இதழ்ப்பணியில் பணம் ஏதும் மிச்சப்படாததால் மகிழ்ச்சியற்ற நிலையில் திரைப்படத் துறையில் ஈடுபட எண்ணங்கொண்டார்.

1946இல் 'அவ்வையார்' படத்திற்கு உரையாடல் எழுதியதால் சிறிதளவு பணம் கிடைத்தது. அடுத்துக் 'காமவல்லி என்னும் படத்திற்கும் வேறொரு படத்திற்கும் வசனம் எழுதினார். மேலும் 1946இல் 'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்' என்னும் நிறுவனத்தின் பெயரில் 'வசந்தவல்லி' என்னும் திரைப்படம் தயாரிக்கும் முயற்சி யில் ஈடுபட்டார். விளைவு? மீண்டும் வறுமையும் துயரங்களும் அவர் வாழ்க்கையில் கவிந்தன. பல மாதங்கள் சொல்லொணாத் துன்பங்களில் மூழ்கினார்.

1947ஆம் ஆண்டு பிற்பகுதியில் 'ராஜமுக்தி' படத்திற்கு உரை யாடல் எழுதுவதற்காகப் படத்தயாரிப்புக் குழுவினருடன் புதுமைப் பித்தன் புனாவுக்குச் சென்றபோது மிகுந்த துன்பங்களை அடைந் தார்; கொடிய காசநோய் பற்றிக் கொண்டது. 1948ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் தன் மனைவியும், ஒரே மகளான தினகரியும் வாழ்ந்திருந்த திருவனந்தபுரம் திரும்பினார். தன் நோயின் மருத்துவச் செலவுக்காகத் தேவைப்பட்ட பணத்துக்காகச் சென்னையிலும் இலங்கையிலும் இருந்த நண்பர்களுக்குக் கடிதம் எழுதினார்.

1944இல் சிறந்த சிறுகதை எழுத்தாளரான கு.ப. ராஜகோபா லன் வறுமை நிலையில் இறந்தபோது அவரது குடும்பத்துக்கு நிதி உதவி கோரி வசூல் செய்யப்பட்டபோது புதுமைப்பித்தன்

நையாண்டியாக 'ஓகோ உலகத்தீர்! ஓடாதீர்!'' என்னும் தலைப்பில் ஒரு கவிதை எழுதினார்.

''ஐயா, நான்
செத்ததற்குப் பின்ன
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி
கல்லில் வடித்து
வையாதீர்''

காலத்தின் கொடுமையை என்னென்று கூறுவது? 1944இல் அவ்வாறு எழுதியவர் 1948இல் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

''நான் நோயினின்று குணமடைவதற்காக யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களும் வாசகர்களும் எனக்குப் பண உதவி செய்ய முடியுமா'' என்றும், 'தமிழ்நாட்டுக்கு நான் செய்த சேவை தகுதியானது மறுக்க முடியாதது. ஆனால் நான் இன்று சாகக் கிடக்கின்றேன். வறுமையினால் சாகக் கிடக்கின்றேன். தமிழ் நாட்டாரைப் பார்த்து. நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க உரிமை உண்டு. என் நிலைமையப் பற்றிப் பத்திரிக்கைகளுக்கு எழுதி உதவி தேடுங்கள்'' என்றும் நண்பர்களுக்கு எழுதவேண்டிய நிலைமைக்கு ஆளானார்.

'சொவி' என்னும் பெயரில் அரசியல் கட்டுரைகளையும், 'புபி' என்னும் பெயரில் சிறுகதைகளையும், 'ரசமட்டம்' என்னும் பெயரில் விமரிசனக் கட்டுரைகளையும், வேளூர் வே. கந்தசாமிக் கவிராயர் என்னும் பெயரில் கவிதைகளையும் எழுதினார் புதுமைப்பித்தன். மேலும், சொ. விருத்தாசலம், கூத்தன், நந்தி, கபாலி, சுக்ராச்சாரி என்னும் பல பெயர்களில் அவர் எழுதினாலும் நிலைத்த பெயர் புதுமைப்பித்தனே. அவரது பெயர் சொ. விருத்தாசலம் என்பது கூட இத்தலைமுறையினருக்கு அவ்வளவாகத் தெரியாது.

'சிறுகதை உலகில் தன்னேரில்லாத் தலைவராகத் திகழ்ந்தவர். தம் முன்னுரை வாயிலாக விமரிசகர்களுக்கு எச்சரிக்கை விடுத்த ஒரே எழுத்தாளர் புதுமைப்பித்தன்' என்று புகழ்வார் இரா. மோகன் (அணிந்துரை, புதுமைப்பித்தன் கதைமாந்தர்-கி.இராசா).

இவ்வாறு புகழேணியின் உச்சநிலையில் நின்ற புதுமைப்பித்தன் சாகும்நிலையில் படுக்கையில் கிடந்தபோது ஒருநாள் தம் நண்பர் சிதம்பரத்திடம் இவ்வாறு தெரிவித்தாராம்: ''இலக்கிய ஆசை

உனக்கு உண்டு. உன் முழுநேர உழைப்பையும் அதற்காகச் செல விடாதே. இலக்கியத்தைத் தொழிலாகக்கொண்டு விடாதே. அது உன்னைக் கொன்றுவிடும். இலக்கியம் வறுமையைத் தான் கொடுக்கும்''.

புதுமைப்பித்தன் இறுதிக் காலத்தில் தம் துணைவியாருக்கு எழுதிய கடிதம் அவருடைய மனநிலையைப் படம்பிடித்துக் காட்டு கிறது. ''......கமலா, கடைசியாக இந்த உலகத்திற்கு நான் விட்டுச் செல்வது ராசமுக்திப் படமும் தினகரியும் (மகள்) தான். கவலைப் படாதே. உன்னை நல்லநிலையில் வைக்க விரும்பினேன்; ஆசைப் பட்டேன். ஆனால் விதி என்னை இந்தக் கோலத்துக்குத்தான் கொண்டுவந்து விட்டது''.

நவயுகப்பிரசுராலயம் வெளியிட்ட 'புதுமைப்பித்தன் கதைகள்' என்னும் நூலின் முன்னுரையில் பேராசிரியர் ரா.ஸ்ரீ. தேசிகன் எழுதுகிறார்: ''வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்தும் ஒரு சோக இதயத்தின் குரல்களை இக்கதைகளில் கேட்கிறோம்''.

தன்னுடைய 'புதுமைப்பித்தன்' என்னும் நூலில் வல்லிக் கண்ணன், தமிழ் எழுத்தாளர்களுக்குப் புதுமைப்பித்தனின் ரத்தம் சிந்தும் சோக இதயத்தின் அனுபவபூர்வமான எச்சரிக்கை பற்றிக் குறிப்பிடுகிறார்: ''புதுமைப்பித்தனின் கதைகள் அப்படி என்றால், ''வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்தும் சோக இதயத்தின்'' அனுபவபூர்வமான இறுதி எச்சரிக்கையாகவே கொள்ள வேண்டும், அவர் நண்பர் சிதம்பரத்துக்குச் சொன்ன அறிவுரையை''.

நிதி உதவிகள் வேண்டி கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்த இலக்கிய பிரம்மாவான புதுமைப்பித்தன் நண்பர் சிதம்பரத்திடம் ஒருநாள் தெரிவித்தார்: ''நான் இப்போ எனக்கு வரப்போகிற மணியார்டரை எதிர்ப்பார்த்துக்கிட்டிருக்கேன். புரியவில்லையா? சாவைத்தானப்பா நான் மணியார்டரை எதிர்பார்ப்பது போல எதிர்பார்த்திருக்கேன்''. ஆம். 'அந்த மணியார்டர்' வந்த நாள் 1948, ஜூன், 30ஆம் நாள் இரவு! ''புதுமைப்பித்தன் வெளியுலகிற்கு எதை வெட்ட வெளிச்சமாக்கினாரோ அதே வறுமைத் துயர் அவரைப் பலிவாங்கியது'' என்கிறார் கி. இராசா (புதுமைப் பித்தன் கதைமாந்தர், பக். 138).

## புதுமைப்பித்தனின் தனிப்பண்புகள்

தமிழ்ச் சிறுகதைத்துறையில் பெரியதொரு புரட்சியை உண் டாக்கிய புதுமைப்பித்தன், அப்டன் சிங்களேர், கால்ஸ் வொர்த்தி,

இப்சன், ப்ராங்க் ஹாரிஸ், பெர்னார்ட்ஷா முதலிய மேனாட்டு ஆசிரியர்களின் நூல்களில் பெருமோகங்கொண்டவர். கம்பராமா யணத்திலிருந்து வருணகுலாதித்தன் மடல் வரையில் புதுமைப் பித்தனுக்குத் தலைகீழ்ப் பாடம் என்று சொல்லும்போது எழுத் தாளர் சிலர் ஆச்சரியப்படலாம். பண்டைத்தமிழ் இலக்கியங்களில் அவருக்கு மிகுந்த பற்று இருந்தது.

உலக இலக்கியத்தில் அவருக்கிருந்த தேர்ச்சியைப் போலவே பழந்தமிழ் இலக்கியத்திலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. ஆனால் ஆங்கில இலக்கியப்பாணியைக் கையாளாமல் தமிழுக்கென ஒரு பாணியைத் தமிழ் எழுத்தாளர்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர் பேராசை. அதனால் கதைக்கு எடுத்துக் கொண்ட பொருள்களிலும் அவற்றைக் கதைகளாக உருவாக்கும் வடிவத்திலும் கதை சொல்லுகின்ற நடையிலும் தனித்தன்மையான வேகத்தையும் ஒரு துணிச்சலையும் புகுத்தினார். இவ்வடிப்படையில் தமிழ்ச் சிறுகதைகளை ஆழமும் கனமும் அழகும் உள்ளவைகளாகப் படைத்துக் காட்டினார். பழமையும் புதுமையும் தோய்த்துப் பண் படைந்த அவர் உள்ளம் வியக்கத்தக்க இலக்கிய நோக்கைப் பெற்றிருந்தது.

25. 4. 1906இல் தோன்றி 30. 6. 1948இல் மறைந்த புதுமைப் பித்தன் தாம் வாழ்ந்த 42 ஆண்டுகளில், 1933 முதல் 1946 வரையி லான 12 ஆண்டுகளே இலக்கியப் படைப்புகளை உருவாக்கினார். 1933இல் எழுதத் தொடங்கிய அவர் 1946க்குப் பிறகு சிறுகதை எதுவும் எழுதவில்லை. தம் கடைசி இரண்டாண்டு இறுதிக் காலத்தைத் திரைப்படத் துறையிலேயே கழித்தார் என்பதைப் பார்த்தோம். குறுகிய 12ஆண்டுக் காலக் கட்டத்தில் அவருடைய அளப்பரிய சாதனைகள் அவருடைய மேன்மையையும் மேதைமை யையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அவைகளுக்குக் காரணமான அவருடைய தனிப்பண்புகளாவன: அயராத தன்னம்பிக்கை, தீவிர உணர்ச்சி, எதிர்க்கத் தயங்காத போர்க்குணம், புதுமைகளைச் செய்யும் வேகம், தம் எழுத்தின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதல் என்பனவாகும். தமிழ் எழுத்தாளர் களிடையே தலைசிறந்தவர் தாம்தான் என்ற தன்னம்பிக்கை அவருள் ஆழமாக ஊறிப்போயிருந்தது. சிறந்த சிறுகதைகள் என்று ஏழு கதைகளைப் பொறுக்கி ஆங்கிலமாக்குவதானால் எல்லாம் தம்

கதைகளாகத் தான் இருக்கும் என்று எக்காளமாக அவரைச் சொல்லச் செய்தது அந்தத் தன்னம்பிக்கைதான் என்கிறார் அசோகன், (மு.மு. பக் 16).

ஒருமுறை புதுமைப்பித்தனும் கு. அழகிரிசாமியும் ரகுநாதனும் சேர்ந்திருந்த பொழுது கதையிலக்கியம் பற்றிப் பேச்சு வந்ததாம். 'தமிழ்நாட்டில் யாருக்கு ஐயா கதை எழுத வருகிறது. நம் மூன்று பேரைத்தவிர்த்து' என்று திடீரென்று கூறினாராம் புதுமைப்பித்தன். சிறிது அமைதிக்குப் பிறகு வாய்விட்டுப் பலமாகச் சிரித்துக் கொண்டே. "நம் மூன்று பேர் என்று தாட்சண்யத்துக்காகத்தான் சொல்கிறேன்". "என்னைத் தவிர்த்து யார் கதை எழுதுகிறார்கள், என்று கேட்டாராம் அவர், என்கிறார் இரா. தண்டாயுதம். (முல்லை முத்தையா, பக். 36).

'மணிக்கொடிப் பத்திரிகையில் எழுதியவர்களில் பெரும் கேலிக்கும், நூதனம் என்பதனால் ஏற்படும் திக்பிரமைக்கும் ஆளான ஒரே கதாசிரியன் நான். சரஸ்வதி பத்திரிகை ஆசிரியர் என்ற தலைப்பில் நையாண்டி செய்யப்பட்ட கௌரவம், எனக்கு ஒருவனுக்குத் தான் கிடைத்தது... எனது முயற்சி பலிக்காமல் போயிருக்கலாம் அதனால் முறை தப்பானது என்று முடிவு கட்டிவிடக் கூடாது, என்று 'ஆண்மை' கதைத் தொகுப்பின் முன்னுரையிலும், 'நேர்மையான புகழ், இலக்கியக் கர்த்தாவிற்கு ஊக்கமளிக்கும் உணவு. இதைக் கொடுக்கக்கூடிய சக்தியற்ற கோழையான ஒரு சமூகத்திற்கு என்ன எழுதிக்கொட்ட வேண்டியதிருக்கு' என்று 'கடிதம்' கதையிலும் தெளிவாகக் கூறுகிறார்.

அணுவுக்கு அணு அழகு காட்டும் சிறந்த சிற்பங்களைப் போன்றவை புதுமைப்பித்தனின் கதைகள். உலக மொழிகளில் சிறந்த ஐந்து சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்தால் அவற்றில் ஒன்று புதுமைப்பித்தனுடைய கதையாயிருக்கும் என்பதில் ஐயமில்லை!

மேல்நாட்டு இலக்கியங்களிலும் முற்போக்கிலும் முற்போக்கான ஆசிரியர்களை அவர் அறிவார். சங்க நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து சுவைத்தவர். பழமையையும் புதுமையையும் ஆழ்ந்து சுவைத்துப் பெற்ற அனுபவத்தால் தமிழில் எவரும் கண்டிராத இலக்கியப் பாணியையும் விமரிசனத்தையும் அவரால் படைக்க முடிந்தது.

துன்பம் நிறைந்தவற்றையே எழுதினார்; சமூகத்தின் புண் எங்கே புரையோடியிருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து எழுதினார். ஆகவே அவர் கதைகளில் சோகம் ததும்பியிருக்கும். மனம் வேதனையடையும். இதையெல்லாம் எதற்காகக் கவனிக்கிறார், எழுதுகிறார் படிக்கச் செய்கிறார் என்ற கோபமே உண்டாகும். அதே நேரத்தில் ஒருபக்கத்தில் நகைச்சுவை நரம்பு ஓடிக்கொண்டிருக்கும். 'அடபித்துக்குளி உலகமே' என்று நம்மைச் சொல்லச் செய்யும், என்பார் கல்கி. கிருஷ்ணமூர்த்தி. (முல்லை முத்தையா, பக். 13)

மக்கள் பொதுப்படப் பிறர் கண்ணில் படாதபடி மறைவில் செய்யும் காதல் கலவி முதலிய விஷயங்களையும் வெளிப்பட இவர் கூறியுள்ளார்... இவர் தந்தையாராகிய சொக்கலிங்கம்பிள்ளை இவரது குணத்தைக் குறித்து, "என்னவோ அவன் பிறந்த ராசி அப்படி. அடங்காப் பிறவி" என்று ஒருமுறை கூறினாராம்... இயற்கையிலேயே அடங்காக்குணம் வாய்த்தவர்... தமது சக்தியைத் தமிழுலகம் அறிந்து போற்றவில்லையே என்ற பெருங்குறை இவர் மனத்துக்குப் பெரும் பாரமாக இருந்தது. தமிழ் எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் நமது நாட்டில் இவ்வாறு குறை கூறிக்கொள்வது வழக்கம். ஆனால் புதுமைப்பித்தன் விஷயத்தில் இப்பாரம் அவரைக் கொன்றே விட்டது, என்று நாம் சொல்லலாம். அவருடைய முயற்சிகளுக்கெல்லாம் பெருந்தடையாக அவரது வறுமைப் பிணி இருந்தது. வேண்டாத இடங்களில் செல்லும்படி செய்தது. வேண்டாத முயற்சிகளில் தலையிடும்படி செய்தது. இறுதியில் இவரது உயிருக்கே உலைவைத்து விட்டது' என்று எழுதுகிறார் எஸ். வையாபுரிப்பிள்ளை. (மு. முத்தையா, பக். 19).

வாழ்க்கை நதியின் மேலோட்டத்தைக் கண்டு மகிழ்ந்து இன்பம் நிறைந்ததே வாழ்வு என்று சித்திரிக்க வேண்டும் என்று விதி செய்து, வாழ்ந்த இலக்கிய சனாதனிகளின் இதயம் கொதிக்கும்படியாக முகம் சிவக்கும்படி, தமிழ் இலக்கியத்தின் போக்கையே மாற்றி விட்ட பெருமை புதுமைப்பித்தனுக்கு உண்டு' என்பார் வல்லிக் கண்ணன். (மு.மு. பக். 20).

புதுமைப்பித்தனின் நடையில், வார்ப்பில் தமிழ் மரபுக்கு ஒவ்வாதது அதுவரை சொல்லப்படாத விஷயம் என்பதைத் தவிர, வேறில்லை. சொந்தக் கற்பனை மேதையினாலும், யாப்புக் கவிதைப் பரிச்சயத்தினாலும், உலக இலக்கியச் சிறுகதை அறிவினாலும், புதுமைப்பித்தனுக்குச் சிறுகதை எழுதும் கலை மிகவும்

நேர்த்தியாகக் கைவந்திருந்தது. வேறு பலருக்கும் சொல்ல முடியாத தகுதி இது.

புதுமைப்பித்தன் காலத்திய வேறு எந்த இலக்கிய ஆசிரியர் களிடமும் சிந்தனைச் சுதந்திரம் இந்த வகையில் செயல்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும், சிந்தனைச் சுதந்தரத்தின் காரண மாகப் புதுமைப்பித்தனால் மற்றவர்கள் கையாளமுடியாத விஷயங் களைத் தைரியமாகவும் லாவகமாகவும் கையாள முடிந்தது என்று விமரிசிக்கிறார் க. நா. சுப்பிரமணியம் (பு. படைப்புகள்)

'எதிலும் ஒரு பற்றற்ற தன்மையும் தனக்கு மிக்காரும் ஒப் பாரும் இல்லை என்ற அழகிய இறுமாப்பும் இயற்கையில் படைக்கப் பெற்றவர்... ரண வைத்தியன் போன்று புரையோடிய சமூகச் சிக்கல்களைக் கிழித்தெறிந்த இவரை நெருங்குவதற்கே சிலர்க்குத் தைரியம் இல்லாது போயிற்று; சரள சுபாவம் கிடையாது; என்பார் ஆர். திருஞானசம்பந்தம் (மு.மு. பக், 16).

'புதுமைப்பித்தனுடைய மேதா விலாசமும் ஹாஸ்ய ரசனையும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு பேச்சில் வெளிப் பட்டுக் கொண்டிருக்கும்' என்று கு. அழகிரிசாமியும் (மு.மு பக்.29) 'கரை கடந்த காட்டாற்று வெள்ளம் போன்ற உணர்ச்சிகளைப் புகுத்தி அமைதியான பாணியில் மனம் அழுந்தும் முறையில் கதையை எழுதுவதில் வல்லவர்' என்று தி. ஜ.ர.வும் (பக். 18) 'தீர்த்துக் கட்டிவிடுகிறேன்' என்று கச்சை கட்டிக்கொண்டு எழுதும் விமர்சகர்கள் தமிழில் இருவர்தான் உண்டு. அவர்களில் ஒருவர் புதுமைப்பித்தன்' என்று சி.சு. செல்லப்பாவும் (பக்.17), கூறுவர்.

'புதுமைப்பித்தன் இலக்கியத்தைப் படித்து ரசிக்கலாம், ரசித்து முடிக்க முடியாது. அவர் கதைகள் வாழ்வின் ஆசாபாசங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டவை. அவர் கருத்துகள் கருப்பையில் வளரும் குழந்தை போல் வளர்பவை. வாசகனின் வாழ்க்கை அனு பவங்களை ஒத்து அவர் கதையில் புதுப்புது விளக்கங்கள் மிளிரும். என்பார் நா.சு. இராமசாமி (மு.மு பக், 35).

'அவர் கதைகளே தனி ரகம். படிக்கும்போது கதை மாந்த ரோடு ஒன்றிவிடுவோம். சிறு விஷயங்களும் அவர் கண்ணுக்குத் தப்பாது. அவர் கூறும் பழக்கவழக்கங்களை நன்கு அறிந்த கிராம வாசிகளே நகரவாசிகளைக் காட்டிலும் அவர் கதைகளை அதிகமாக ரசித்து இன்புறுவர்' என்று எழுதுகிறார் க நா. சுப்பிரமணியம் (மு மு. பக் 34).

கவிதையில் குறள் பெற்ற ஸ்தானம் சிறுகதைகளில் புதுமைப் பித்தன் பெறுகின்ற ஸ்தானம். இவர் கதைகள் குறளைப் போன்றவை, என்பதை நான் பெருமையுடன் சொல்லுகிறேன் என்று புகழ்கிறார் சுகி. (மு.மு.பக். 15) எதிர்கால இலக்கிய உலகம், மேனாட்டில் இன்று சேக்ஸ்பியர், மில்டன், மாக்சிம் கார்க்கி, பெர்னார்டுஷா முதலிய மேதைகளை உயர்த்திப்பாராட்டி வருவது போல புதுமைப்பித்தனையும் சிறப்பித்துப் பாராட்டப்போகிறது என்பது திண்ணம் என்று உறுதிகூறுகிறார் நாரணதுரைக்கண்ணன்.

சுழிமாறிப் போன ஊழ்வினை அவரைத் தடிப்பும் தடுமாற்ற மும் கொண்ட பத்திரிக்கை யுலகில் தூக்கியெறிந்தது. எனினும் எந்த வேளையிலும் தாம் ஒரு சிறந்த சிருஷ்டி கர்த்தா என்பதைக் காட்டிக்கொள்ளாமல் இல்லை. அவருடைய மனம் பூத உலகுக்கும் அவருக்கும் இடையில் வானப் பறவையைப் போல் ஓடியாடியது. வாழ்க்கைப் போராட்டத்தின் குரூரத் தன்மையையும் அற்பத்தன் மைகளையும் காட்டிக்கொடுத்தது. சோதனையில் துணிச்சலும் மரபு வழியில் ஆழ்ந்த படிப்பும் கொண்ட உத்வேகம் இந்த வாழ்வி லும் சிறந்து வளர்ந்தது, என்கிறார் மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் (மு.மு ப.14).

உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களைப் பற்றியே இலக்கியம் எழுதவேண்டும் என்ற வழக்கத்தை மாற்றித் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் மனிதப் பண்புகளையும் சிறந்த கதைப் பொருளாக் கியவர் புதுமைப்பித்தன் என்று போற்றுகிறார் கே ஸ்ரீனிவாசன் (ப.28).

வாழ்க்கையின் மூலைமுடுக்குகளையும் பொக்கைப்பொள்ளல் களையும் அழுக்கு ஆபாசங்களையும் எடுத்துக்காட்டும் கதைகளைப் புதுமைப்பித்தன் எழுதினார். அவருடைய ராக்ஷசக் கோலத்தோடு நிற்கும் கம்பீரமும் பலர் கண்டு அஞ்சும் கோபமும் நடையிலே கோணலான சுழிப்புகளும் அவருடைய எழுத்திலே விரவிக் கிடக்கும், மதிப்புரை, கண்டனம் ஆகியவற்றில் அவர் எழுத்து சாட்டை போலச் சுளீரென்று படும். அதிலே கூட சில சுழிப்புகள், த்வனி இருக்கும், என்று கூறுவார் கி.வா. ஜகந்நாதன் (மு.மு. பக். 32).

''உன் மக்களுக்காகப் பாடுபடுகிறாய், உருகுகிறாய், உன் வயிறு வாடுகிறதே'' என்று ஒரு தாய்க்கு என்ன சொன்னாலும் பயன் படாது. குழந்தைகளுக்கென்றே வாழப்பிறந்தவள் தாய்; குழந்தைகளுக்காகப் போராடப் பிறந்தவள் தாய்! உயர்ந்த எழுத்தாளனும் அப்படியே: அவன் திக்கற்றவர்க்காக, புறக்கணிக்கப்

பட்டவர்க்காக, கொடுமை செய்யப்பட்டவர்க்காக என்றே சொல் லேர் உழவனாய்ப் பிறந்து விட்டவன்; பிறருக்காகவே வாழ்ந்து தன்னை இழக்கத் துணிந்த கலைஞன் அவன். இத்தகைய வாழ்க் கையை ஏற்றுக்கொண்ட புதுமைப்பித்தன் சிறுகதைக் கலையைத் தன் போர்க்கருவியாகக் கொண்டு சமுதாயக் கொடும்பேய்களோடு போராடினார். ஆனால் அவர் ஏதாவது எதிர்பார்த்து ஏமாந்தவரா? இல்லை. இந்தச் சந்தைச் சமுதாயம் - தன்னைப் புறக்கணிக்கும் என்பதை நன்றாக உணர்ந்தே போராடினார்'' என்று தெளிவுறுத்து கிறார் மு. வரதராசன் (மு.மு. பக். 21)

இலக்கியச் சவத்திற்கு உயிரூட்டியவர்; 'புனிதக் காதல்', பொல்லாத வில்லன் ஆகியோரால் இலக்கியம் என்று காட்டப் பட்ட புதைமண்ணில் நின்றுகொண்டு தான் தன் படைப்புக் கோட்டையைக் கட்டவேண்டியிருந்தது. டால்ஸ்டாய் எப்படிப் புரட்சியின் கண்ணாடியோ அப்படிப் புதுமைப்பித்தனும் வருங் காலத்தில் கருதப்படுவார். 'புதுமைப்பித்தனுக்குக் காரல்மார்க்ஸ் கருத்தில் பட்டிருந்தால் அவர் பாரதத்தின் கார்க்கியாக மாறியிருக் கலாம்' என்று கட்டுரைக்கின்றார் சு. சமுத்திரம் (மு.மு. பக். 25).

இவ்வாறு பல்வேறு நிலைகளில் சிறப்பிக்கப்பெறும் புதுமைப் பித்தனைப் பற்றி வேறொரு கோணத்தில் செய்யப்படும் விமரிசன மும் உண்டு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். புதுமைப் பித்தன் தாமரையிலைத் தண்ணீர் போல இருந்துகொண்டு சக மனிதர்களைப் பார்த்துக் கிண்டல் செய்கிறார். அவர் வாழ்க்கைப் பந்தபத்தில் கலந்துகொள்ளவில்லை. அதை எட்ட நின்று வேடிக்கை பார்க்கிறார். முற்போக்கு எழுத்தாளர் புதுமைப்பித்த னின் தனிமை வாதத்தையும் செல்லரித்துப்போன இலக்கியச் சித்தாந்தங்களையும் நிராகரித்துவிட்டுச் சிறந்த பண்புகளைப் போற்றிவளர்க்க வேண்டும் ''புதுமைப்பித்தன் நமக்கு ஒரு வழி காட்டி, நமக்கு ஒரு எச்சரிக்கையும் கூட'' என்கிறார் தி.க. சிவ சங்கரன் (மு.மு.ப. 35).

சமூகத்தைப் பார்த்துப் புதுமைப்பித்தன் கேள்விக் குறிகளை அடுக்கினார். ஆனால் அவற்றுக்கு அவர் விடைகாண முடிய வில்லை. அன்றாட வாழ்க்கையில் வேதனைக் குரலை மறந்து சிரிப்பதற்குக் கதை சொன்னாரே தவிர, வேதனையைத் தீர்க்கும் மார்க்கத்தைக் கூறவில்லை; காணவில்லை! அவர் மக்களிடமிருந்து எட்டி விலகி நின்று கதை சொல்லாமல், மக்களோடு ஒட்டி நின்றே

தமது கதைகளைச் சிருஷ்டித்திருந்தாரானால், மாக்சிம் கார்க்கியைப் போலச் சிறந்த எழுத்தாளராக மட்டுமன்றிச் சிறந்த வழிகாட்டியாகவும் அவர் விளங்கியிருக்க முடியும். ஆனால் அதில் அவர் தவறி விட்டார், என்றே கூறவேண்டும் என்பார் ரகுநாதன் (மு.மு. பக். 84).

தி.க. சிவசங்கரனும் ரகுநாதனும் புதுமைப்பித்தனுடைய சிறு கதைகளின் உள்ளடக்கத்தைப் பற்றி விமர்சித்ததைப் போல அவருடைய சிறுகதைகளின் உருவ அமைப்பைப் பற்றி எழில் முதல்வன் கூறுவதாவது: ''புதுமைப்பித்தன் 'கதைப் பின்னலை'ப் பற்றிக் கவலைப் படவேயில்லை; புனையா வரைபடி சிறுகதை, மனவுணர்வுக் கட்டுரை ஆகியவைகளுக்கு வேறுபாடு அறியாதார் போலவே, மறந்தார்போலவே - மனம்போன போக்கின்படி எழுதினார்; எடுத்துக்கொண்ட கதையைக் கடைசிவரை நிதானமாக எழுதிப்போகும் பொறுமை அவருக்கு இல்லவேயில்லை. அவசரத்தில் எப்படியோ முடித்து வடிவ ஒருமையின் சிதைவுக்குக் காரணமானார். முடிவைப் பற்றிக் கவலைப்படாததைப் போலவே தொடக்கத்தைப் பற்றியும் அவர் தீவிரமாகச் சிந்தித்ததாய்த் தெரியவில்லை. படிப்போருக்குப் புரிய வேண்டுமே என்று நினைத்தாரில்லை; வாசகர்களில் எவனோ ஒருவனுக்காகவே எழுதிக் கொண்டிருப்பதாகச் சொல்லி வந்தார்; நம்பியிருந்தார். நம்பிக்கையூட்டும் உற்சாகமற்றவராய் 'நம்பிக்கை வறட்சியையே' சித்தரிக்கும் 'அழுகணிச்சித்தரானார்'. இவருடைய குறியும் நெறியும் புரிந்து கொள்ள இயலாவண்ணம் ஓரோவழி முரண்பட்ட சிந்தனைகளையும் தம் எழுத்துகளில் காட்டினார் (மு.மு.பக். 97).

இவ்வாறு கூறப்பெற்ற தன்னைப் பற்றிய பல்வேறு வகையான விமரிசனங்களுக்குப் புதுமைப்பித்தன் பதிலளிக்கிறார்: ''பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் செய்யும் ஸ்தாபனம் அல்ல! பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணி வைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன்.

''......இவை யாவும் கலை உத்தாரணத்திற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல, இவை யாவும் கதைகள்; உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டுச் செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடை

யாது. நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள்தாம் இவை'' (காஞ்சனை முன்னுரை).

''எனது கதைகளில்...... கதைக்குரிய கதைப்பின்னல் கிடையா. அவற்றுக்கு ஆரம்பம், முடிவு என்ற நிலைகளும் பெரும்பான்மையாகக் கிடையா. மன அவசரத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக்கொள்வதானால் அவை கதைகள் ஆகும். இம்மாதிரியான முறையை அனுஷ்டித்து மேல்நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அம்முறையை முதன்முதலாக இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப்பின்மை என்னுடையதாகும்''.

மேலும், ''விமர்சகர்களுக்கு ஒரு வார்த்தை. வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல. நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல; உங்கள் அளவு கோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக்கொள்ளுகிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்'' என்று தம் முன்னுரை வாயிலாக விமரிசகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கவும் செய்கிறார்.

''என் கதைகளின் தராதரத்தைப் பற்றி 'எரிந்த கட்சி' எரியாத கட்சி' ஆடுகிறார்கள். அதற்குக் காரணம், பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்லவேண்டும், இன்னது சொல்லக் கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப் பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக்களறியையும், மனக் குரூபங்களையும் விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப்போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப்போகிறதா? மேலும் இலக்கியம் என்பது மன அவசரத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர்

குமாஸ்தா, ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரம்மநாயகம் - இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல் காதல் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத் துக்கு நேர்முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடை முறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை''. இவ்வாறு ''என் கதைகளும் நானும்'' என்னும் கட்டுரையில் புதுமைப்பித்தன் தெளிவுபடுத்துகிறார். தன்னுடைய கதைகளின் வெற்றிக்குப் புனைபெயரும் காரணம் என்று நம்பி னார் புதுமைப்பித்தன்.

''என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்துகொண்ட புனைபெயராகும். அது அமெரிக்க விளம்பரத் தன்மை வாய்ந்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். பிறகு நான் எடுத்தாளும் விவகாரங்கள் பலர் வெறுப்பது; சிலர் விரும்பு வது; இவற்றில் பெரும்பான்மையாக எனது மனநிலையே சித்திரிக் கப்பட்டிருக்கிறது. இவற்றில் வரும் கதாபாத்திரங்கள் போல நான் எனது கருத்துகளுக்குப் பொருந்தியவையாகப் பிடித்துவைத்த களிமண் பொம்மைகள். அவற்றிற்கு இருக்கும் உயிரும் வேகமும் என் ஆத்திரத்தின் அறிகுறி'' (சித்தி, முன்னுரை) என்றும்,

''பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப்பிண்ட மாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும் அநீதிகளையும், சமூகத்தின் வக்கிர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க்கனவுகளாகும்'' என்றும் புதுமைப்பித்தன் தனது கதைகளைக் குறிப்பிடுகின்றார்.

எனவே, மரபு பாதையிலேயே சிறுகதை தளர்நடை போட்டுக் கொண்டிருந்த தன்னுடைய காலக்கட்டத்தில், புதுமைப்பித்தன் மற்றவர்கள் காண மறுத்த - அல்லது காண விரும்பாத வாழ்க்கை யதார்த்தங்களைக் கண்டு, அவற்றை உள்ளது உள்ளபடி வலுவான நடையில் சித்திரித்துக் காட்டினார். கண்கள் இருப்பது எல்லா வற்றையும் பார்ப்பதற்குத்தான் என்ற 'இரும்புத்தத்துவம்' நமக்குத் தேவை. எதை வேண்டுமானாலும் எழுத்தில் கொண்டு வரலாம். ஆனால் எழுதுவதை அழகாக நயமாக உணர்ச்சித் துடிப் போடு சொல்ல வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டி ருந்தார்.

அவருடைய சிறுகதை வெற்றியில் மிகுதியான பங்கு அவர் நடைக்குரியது என்பர். இலக்கிய உரைக்கு உரைநடை என்னும் நிலையை மாற்றி உரைநடைக்கு ஏற்ற இலக்கியம் கண்டார் அவர். அதுவரை இருந்த உரைநடைக்குத் தம் சோதனைக் கதைகள் மூலம் வலிவும் பொலிவும் தந்தார்.

இங்குச் சாதாரண வாசகர்களுக்குப் புரியாமல் அவர்களைச் சிரமப்படுத்துவதாயிருந்த தன்னுடைய நடை குறித்துப் புதுமைப் பித்தன் கூறுவார்: ''கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக மட்டும் கொண்டு, தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத் தேன். அது நானாக எனக்கு வகுத்துக்கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதன் விளைவாகப் பாஷைக்குப் புதிது, இதனால் பலர் நான் என்ன எழுதுகின்றேன், என்பதுபற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் புரியாது என்று சொல்லி அனுதாபப் பட்டார்கள். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டு விட்டேன். காரணம், அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல. எனக்குப் பலமுறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின் பற்றினேன்''.

கேலியும் கிண்டலும் கலந்த நகைச்சுவை நிறைந்த வேகமும் அழுத்தமும் படிந்த நடை அவருடைய தனிச்சிறப்பு. ... ஆரம்பம், மத்திமம், முடிவு, நிகழ்வுகளின் அடுக்குகள், எதிர்பாராத திருப்பங் கள் என்றெல்லாம் கொண்டு கதை எழுதுகிற மரபு முதலான போக்கைத் தகர்த்துவிட்டு மேலைநாட்டு இலக்கிய உத்திகளின்படி கதைகளை உருவாக்கிப் புது வழி வகுத்தார். அதாவது, மேலை நாட்டிலிருந்து வந்த சிறுகதை உருவத்தைச் சோதனைக்கு மேல் சோதனைக்கு ஆட்படுத்தித் 'தமிழாக்கி'ப் பின் ஆண்டார். வட்டார வழக்குகளையும், மக்களின் பேச்சு மொழியையும் கதை களில் முதன் முதலில் எடுத்தாண்டார்.

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரெஞ்சு அறிஞர் ஹிப்போலைட் தெயின் (Hippolyte Taine) காரண காரிய (Causes and effects) ஆய்வை வலியுறுத்தி எந்த இலக்கியத் தோற்றத் திற்கும் காரணம் உண்டு என்கிறார். இலக்கியத் தோற்றத்திற்கு மூலகாரணமான இனம், சூழ்நிலை, காலம், எழுத்தாளனின் மனத் திறன் ஆகியவற்றை மனத்திற்கொள்ள வேண்டும் என்கிறார்.

'இலக்கியம் இயன்ற அளவு யதார்த்தத்துடன் நெருங்கியதாக இருக்க வேண்டும். அதற்கு உருவ அமைதியும் உள்முகத்தன்மையும் அவசியம்' என்பர். (மார்க்சிய அழகியல், முன்னுரை, பக். 11), கதை சுவாரசியமாய் எழுதப்பட வேண்டும் என்ற அவசியமு மில்லை. சுவாரசியமாக என்பது ஓர் அசிங்கமான வார்த்தை. என்னுடைய பணி பிறருக்கு மகிழ்ச்சியூட்டுவதன்று! (I am not an entertainer) என்கிறார் பர்ரோவ்ஸ் (W.S. Burroughs). மாறாகக் கதையின் உணர்ச்சி சுருக்கென்று மனத்தில் தைத்து நிலைக்குமாறு எழுதப்பட வேண்டும் என்கிறார்.

இதற்கேற்ப புதுமைப்பித்தன் சிறுகதையில் விதவிதமான புதிய சோதனைகள் பலவற்றைச் செய்து அவைகளில் வெற்றி கண்டார். திட்டமிட்ட பழைய பாணியில் செல்லாமல் - புது வழியில் - மறைக் கப்பட்ட பாதையில் பயணம் செய்தார். சமுதாயத்தின் ஆணிவேர் அழுகி வருவதைக் கண்டார். அதைப் போக்கவே கனல் தெறிக்கும் கதைகளை எழுதினார். வாழ்க்கையைப் பரந்த பார்வையில் பட்டறிந்தபோது கண்டெடுத்த மாறுபாடும் வேறுபாடும்கொண்ட பாத்திரங்களையும் கதைப் பொருள்களையும் கொண்டு அருமை யான கதைகளாகப் படைத்தார்.

அவருடைய கதைகளில் வரும் பாத்திரங்களெல்லாம், நிழல் களல்ல, நிஜங்கள்! ஏமாற்றம், வெறுப்பு, துன்பம் இவற்றால் இந்த உலகமே ஆளப்படுவதை உணர்ந்தார். மனித இனத்திற்கே அழிவைத் தரக்கூடிய இந்த அமைதி ஆயுதங்களின், மவுன யுத்தத் தின் உண்மை உருவத்தை உலகிற்கு உணர்த்தினார். அதனால் சொல்லாட்சியும் சிந்தனை ஆழமும் நம்பிக்கை வறட்சியும் அவருடைய எழுத்தின் சிறப்பியல்புகளாய் அமைந்துள்ளன என்பர்.

இதற்குக் காரணம், 'புதுமைப் பித்தன் ஒரு மேதாவி. பிறக்கும் போதே நல்ல கூரிய பார்வையும் அரிய ஆற்றலும் மிடுக்கும் நெஞ் சுரமும், தனித்தன்மையோடு கூடிய கற்பனையும் சேர்ந்து பிறந்தவர். வாழ்வில் அவர் பெற்ற அனுபவங்கள், கசப்புகள், கோபதாபங்கள், சிருஷ்டி வெறிக்கு வித்திட்ட நிகழ்ச்சிகள், அவருடைய சொந்த வாழ்க்கையின் சூழ்நிலைகள் ஆகிய எல்லாம் சேர்ந்து அவருடைய கதையிலே பின்னி விளையாடுகின்றன (மீ.ப. சோமசுந்தரம்). அவை சமுதாய விமரிசனமாய் அமைந் துள்ளன.

## 1. பேசுவது மானம், இடை பேணுவது...?

சமயத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் உயர்ந்த தத்துவங்களின் பெருமைகளைப் பேசிக் கொண்டே பொழுது போக்குகிற பெரிய மனிதர்களின் வேஷங்களையும் செயல்முரண் களையும் எடுத்துக் காட்டுவதன் மூலம் விமர்சனம் செய்கிறார்.

''வாழ்க்கை'' என்னும் கதையில், பிரம்மஞான சபையைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் சிலர் வாழ்க்கை பற்றியும் பேதங்கள் பற்றியும் உயர்ந்த தத்துவங்களைப் பேசி மகிழ்கிறார்கள். அவர் களுடைய தோற்றம் எவ்வாறு இருந்தது என்பதை வண்டிக்காரன் வழி கூறுகிறார்.

''பட்டணத்திலேயிருந்து அய்யாமாரும் அம்மாமாரும் ஊரு பாக்க வந்திருக்காங்க! கூட சாமியாரும் வந்திருக்காரு. அவுங்க எல்லாம் சீசப்புள்ளெங்க. அவரைப் பார்த்தால் சாமியாரு மாதிரியே காங்கலே. பட்டும் சரிகையுமாத்தான் கட்டராரு. கூட வந்திருக்காளுவளே, கிளிங்கதான்''. வண்டியின் ஒரு மூலையில் கிடந்த தியாசபி புஸ்தகங்கள், வந்திருப்பவர் யார் என்று விளக்கி விட்டன.

டண்ணை அய்யர் தியாசபி (பிரம்ம ஞான) கோஷ்டிக்கு விருந்து நடத்தி முடித்த பிறகு சுவாமிஜீ பேசுகிறார். ''நமது வாழ்க்கையிலே அசட்டுத்தனத்திற்காகப் போராடுவது, மிருகத் தனத்திற்காகச் சச்சரவு செய்வது இயற்கை...'' என்ற சுவாமிஜீயின் குரல் கம்பீரமாக எழுந்தது. ''...பேதங்கள் தோல் ஆழமுள்ளவை. இன்பம் ஒன்றுதான் இலட்சியம். இதன் சோபையும் அழகுமே கலியுக அவதார புருஷன் கிருஷ்ணாஜீ...''.

இந்தப் பேச்சைக் கேட்டுக் கிண்டல் செய்துகொண்டிருந்த ஒரு நாடோடி, அங்குப் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த குளுவ ஜாதிக் குழந்தை ஒன்றுக்கு இட்டலி ஒன்றைத் தந்து ஆதரிக்கிறான். அப்போது திடீரென்று மழை பிடித்துக்கொள்ள, பயந்து ஒதுங்கி நிற்பதற்காக ஒரு குளுவச்சி குழந்தையுடன் பிரம்மஞான சபை யினர் தங்கிய மண்டபத்தை நோக்கி ஓடினாள். 'சீ, மூதேவி! எங்கே ஏறுறே! ஆள் இருக்கிறது தெரியலே! போ!'' என்று அவளை விரட்டுகிறார்கள்; பேதங்கள் இல்லாத நிலை பற்றிப் பேசும் பெரும் ஞானவான்கள்!

சமுதாயத்தின் இந்த முரண்பாட்டினைக் கதையில் வரும் நாடோடி மூலம் விமர்சனம் செய்கிறார் புதுமைப்பித்தன். "ஆசை! அதற்கும் மனிதன் சொல்லிக்கொள்ளும் லட்சியம் என்பதற்கும் வெட்கமே கிடையாது. இலட்சியத்தால் நடக்கிறதாம், நீதியால் நடக்கிறதாம்; தர்மத்தால், காதலால் வாழ்க்கை நடக்கிறதாம்! உண்மையில் இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? வாழ்க்கையில் ஒன்றுதான் நிஜமானது, அர்த்தமுள்ளது, அதுதான் மரணம். காதல் - வெறும் மிருக இச்சை; பூர்த்தியாகாத மனப் பிராந்தியில் ஏற்பட்ட போதை. நானும் சுகம் அனுபவித்தாச்சு, என்னதான் பேசினாலும் இதற்குமேல் ஒன்றும் கிடையாது.

"அதற்கப்புறம் சமூகம். அன்றைக்கு அந்தப் பயல் 'ஜட்ஜ் மெண்ட்' சொன்ன மாதிரிதான்... பெரிய மீன் சின்ன மீனைத் தின்னலாம். ஆனால் சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால் பெரிய மீன் 'குற்றம் செய்கிறாய்' என்று தண்டிக்க வருகிறது. இதுதான் சமூகம்! இந்த அசட்டு மனிதக் கூட்டத்தின் பிச்சைக்காரத்தனம்... புனிதமாக ஏதாவது ஒன்று இருக்கிறதா?"

"நியாயம்" என்னும் கதையில் பெஞ்சு மாஜிஸ்திரேட்டரான தேவ இற(ர)க்கம்* நாடார் மதபக்தி கொண்டவர். பைபிளை இந்த உலகத்துக்கே சரியான ஓர் இந்தியன் பீனல் கோடாகவே மதித்தார். கோர்ட்டில் அவர்முன் காயம்பட்ட குதிரையைக் கட்டி வண்டி ஓட்டியதாக வழக்கு. SPCA இன்ஸ்பெக்டர் காயம்பட்ட குதிரையையும் வண்டிக்காரனையும் பிடித்தவிதத்தை விரிவாகக் கூறினார்.

வாயில்லாச் சீவனை வதைக்கலாமா என்று கேட்ட மாஜிஸ்திரேட் முன், குதிரையின் சொந்தக்காரனான சுடலிமுத்துப் பிள்ளை கெஞ்சுகிறான். "தரும தொரைகளே! எங்குருதயெ புள்ள மாருதி வளக்கேன். வவுத்துக் கொடுமை; இல்லாட்டாகே நா போடுவனா சாமி? இனிமேலே இப்பிடி நடக்காது சாமி. ஒரு தடவை, தருமதொரைக மன்னிக்கணும்". அவர் மனம் இரங்க வில்லை. '5 ரூபா அபராதம்; தவறினா ஒரு மாசம்' என்று தீர்ப் பளித்தார்.

வண்டிக்காரன் ஆவேசம் கொண்டவன் போல் ஓடி வந்து, தேவஇறக்கநாடாரின் காலைப் பிடித்துக்கொண்டு கதறினான்.

---

* தேவ இறக்கம் நாடார் என்றே புதுமைப்பித்தன் எழுதுகிறார்.

'தரும துரைகளே! இந்த ஒரு தடவை மன்னிக்கணும். புள்ள குட்டி வவுத்திலே அடியாதிங்க...'' ஏழை கதறல் அம்பலம் ஏறுமா? கோர்ட் ஆர்டலி வண்டிக்காரனை இழுத்துக்கொண்டு போனான். ''பின்னாலே போ சாத்தானே!'' என்று தேவஇறக்கம் நாடார் கர்ஜித்தார்.

அன்று இரவு தேவஇறக்கம் கர்த்தருக்கு முன்னால் முழங்கால் படியிட்டு ஜெபம் செய்தார். ''பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே! வழக்கம்போல எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடம் கடன்பட்டவர்களுக்கும் மன்னிக்கிறோமே... ஆமென்!''

''கண்ணை விழித்து எழுந்தார். அந்த அஞ்ஞானி வண்டிக்காரனைப் பற்றி ஞாபகமேயில்லை!'' என்று கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன். பக்தியும் இரக்கமும் பொழுதுபோக்கு வசனங்களாயுள்ளன சில மேட்டுக்குடியினர்க்கு என்பது அவருடைய சமுதாய விமரிசனம்!

'கொடுக்காப்புளி மரம்' என்னும் கதையின் நாயகர் ஜான்டென்வர் சுவாமிதாஸ் அய்யர் புராட்டஸ்டன்ட் கிறித்தவர். பெரும் பணக்காரர். கர்த்தரின் திருப்பணியைத் தமது வாழ்க்கையின் ஜீவனாம்சமாகக் கொண்டவர். உலகத்தின் சம்பிரதாயப்படி அவர் பக்திமான். நல்லவர்; தர்மவான்; ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குச் செல்வார். புதிய ஏற்பாட்டில் மனுசகுமாரனின் திருவாக்குகள் எல்லாம் மனப்பாடம்.

அவர் தமது வீட்டுக் காம்பவுண்டில் வளர்ந்திருந்த கொடுக்காப்புளி மரத்தில் உலர்ந்து உதிர்ந்து விழும் பழங்களை ஓர் ஏழை விதவைக்கு நாள் குத்தகைக்கு (நாள் ஒன்றுக்கு கால் ரூபாய்) விட்டுப் பணம் பெற்று வந்தார். காலையிலும் மாலையிலும் வந்து எடுத்துக் கொண்டு போக வேண்டியது. பணம் அன்றன்று கொடுத்து விட வேண்டியது. இது தான் ஒப்பந்தம். ''சுவாமிதாஸ் ஐயரவர்கள் இதைவிடத் தமது தர்ம சிந்தனையைக் காட்ட வேறு என்ன செய்ய முடியும்'' என்கிறார் புதுமைப்பித்தன்.

ஒருநாள் குத்தகை எடுத்த அந்த விதவைப் பெண் வரக் கொஞ்சம் நேரமாகிவிட்டது. அதற்குள் 'தோஸ்தரம் அம்மா' என்று வந்த பெர்னாண்டஸ் என்னும் பிச்சைக்காரனின் குழந்தை, கீழே விழுந்து கிடந்த கொடுக்காப்புளி பழங்களை, ஆசையோடு

பொறுக்கித் தன் கிழிந்த பாவாடையில் அள்ளி அள்ளி நிரப்பியது; இதைப் பார்த்துக் கோபம் கொண்ட சுவாமிதாஸ் ''போடு கீழே! போடு கீழே!'' என்று கத்திக் கொண்டே வெளியே வந்தார்.

குழந்தை சிரித்துக்கொண்டு ஒரு பழத்தை எடுத்து வாயில் வைத்தது. அவ்வளவுதான். சுவாமிதாஸ் உடனே கையிலிருந்த தடிக்கம்பைக் குழந்தையின்மீது எறிந்தார். குழந்தையின் உயிரைக் கைத்தடி பறித்தது! இதைப் பார்த்துத் திக்பிரமை கொண்டவன் போல் ஓடிய குழந்தையின் தந்தை பெர்னான்டஸ், சுவாமிதாஸ் மண்டையில் அடிக்க, அவரும் இறந்துவிடுகிறார்.

நடைபெற்ற வழக்கில், ''கிழவர் அடித்தது எதிர்பாராத விபத்தாம். பெர்னான்டஸ் கொலைகாரனாம்'' என்று வந்த தீர்ப்பைச் சுட்டிக்காட்டுவதன்மூலம் அதிலுள்ள முரண்பாட்டை, 'ஏழைக்கு ஒரு நீதி, பணக்காரனுக்கு ஒரு நீதி' என்பதை விமர்சனம் செய்கிறார் புதுமைப்பித்தன்.

## 2. வாட்டி எடுக்கும் வறுமையின் கொடுமை

மனிதர்களைப் பாடாய்ப்படுத்துகிற வறுமை, சமுதாயத்தைப் பிடித்திருக்கிற புற்றுநோய். 'பசிப்பிணி' என்னும் பாவி' என்று உருவகம் செய்யும் மணிமேகலைக் காப்பியம், விழுப்பங் கொல்லும் பசிப்பிணியின் கொடுமைகளில் ஒன்று வீதி விபச்சாரம். அந்த வீதி விபசாரத்திற்குக் காரணமான சமுதாயத்தைப் புதுமைப்பித்தன் 'கவந்தனும் காமனும்' கதையில் நெருப்புச் சொற்களால் விமரிசனம் செய்வதைப் பாருங்கள்.

மனிதனின் உயர்வையும் தடையையும் ஒரே காட்சியில் காண பிக்கும் நாகரிகச் சின்னங்கள் நிறைந்த சென்னை நகரத்தில் இரவு எட்டு மணிக்கு மேல் நிகழும் நிகழ்ச்சியைக் காட்டுகிறார்.

''இதுதான்... தெரு மூலை!
இதுதான் மனித நதியின் சுழிப்பு!
இதற்கு உபநதிகள்போல் பெரிய கட்டடங்களுக்கு
இடையே ஒண்டி ஒடுங்கிப்போகும் ரஸ்தாக்கள்.
இது வேறு உலகம்!

இந்தப் பக்கங்களுக்கு இரவு எட்டுமணிக்கு மேல் வரவேண்டு மென்றால், கண்கள் எல்லாவற்றையும் பார்ப்பதற்குத்தான் என்ற

இரும்புத் தத்துவம் கொண்ட மனிதனாக இருக்க வேண்டும்'' என்று அந்த உலகத்தினை அறிமுகம் செய்கிறார்.

''அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா? மிருகங்களா? நீங்கள் போட்டி ருக்கிறீர்களே பாப்லின் ஷர்ட்டு, உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி - எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியது தான்! ரொம்ப ஜம்பமாக நாசுக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்!''

தன் நினைவில்லாமல் ஒரு வாலிபன், பசியின் களைப்போடு, மனிதனை மிருகமாக்கும் அந்தத் தெருவின் மூலையில் திரும்பு கிறான். அங்கே பதினாறு, பதினேழு வயதில் அலங்கோலமான நிலையில் ஒரு பெண்! காலனா அகலம் குங்குமப் பொட்டு, மல்லிகைப் பூ, இன்னும் விளம்பரச் சரக்குகளுடன் நின்ற அவளை அவன் கவனிக்கவில்லை, ''என்னாப்பா, சும்மாப் போறே? வாரியா?'' கையை எட்டிப் பிடித்தாள். திடுக்கிட்டு நின்ற வாலிபன், மடியிலிருந்த சில்லறைகளையெல்லாம் அவளுடைய கையில் திணித்துவிட்டுப், ''போ! போ!'' என்று அவளை நெட்டித் தள்ளிவிட்டு ஓடிவிடுகிறான்.

''ஏண்டா, பேடிப் பயலே! பிச்சைக்காரின்னா நெனச்சுக் கினே!'' என்று சில்லறைகளை விட்டெறிகிறாள். ''பேடிப்பயல்! பேமானி!'' என்று முணுமுணுத்துக்கொண்டே இருட்டில் சில்லறையைத் தேடுகிறாள். ஆனால் அவனும் அன்று பட்டினி என்று அவளுக்குத் தெரியாது''. இவ்வாறு வறுமை நிலையில் பாதிக்கப்பட்டுத் தெருவில் நின்று விபசாரத்துக்கு அழைக்கிற ஒரு தொழிற்காரியின் மனநிலையும் வாழ்க்கை முறையும் பற்றி விமரிசனம் செய்கிறார் புதுமைப்பித்தன்.

## பொன்னகரம்

மறுமலர்ச்சிக் கதை இலக்கியத்தைப் பற்றி நினைக்கும்போது புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் நினைவுக்கு வருதல் போல, புதுமைப்பித்தனைப் பற்றி நினைக்கும்போது, 'பொன்னகரமும்', 'சாபவிமோசனமும்' நம் நினைவுக்கு வரும். மிகுதியான எழுத்தா ளர்களின் முரண்பட்ட விமரிசனங்களுக்கு ஆளான பொன்னகரக் கதை தரும் சமுதாய விமரிசனத்தைக் காணலாம்.

''பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய

விதிதான். ஒரு சில 'மகாராஜர்'களுக்காக இம்மையின் பயனைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன்னகரந்தான் அது.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக்கொண்டிருக்கும்பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக முனிசிபல் கங்கை - அல்ல; யமுனைதானே கறுப்பாக இருக்கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி; அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம். மறுபக்கம், வரிசையாக மனிதக் - கூடுகள் - ஆமாம், வசிப்பதற்குத்தான்!

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில் (சாக்கடை நீரில்) மீன் ஏது? எங்கிருந்தோ - பணக்கார வீடுகளிலிருந்து, சில சமயம், அழுகிய பழம், ஊசிய வடை, இத்தியாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம். ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர்பெற்று இருக்கும். அப்பொழுதிலிருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்கவரும் பெண்கள்! அங்குத் தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்!

... கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு - வாழ்க்கைத் தொழுவத்தின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக் கவலை இல்லை. அது வேறு உலகம், ஐயா, அதன் தர்மங்களும் வேறு! சொந்தமாகக் குதிரை வண்டி வைத்திருக்கும் முருகேசன், மில் கூலியான அவனுடைய மனைவி அம்மாளு, முருகேசனின் தாயார், தம்பி, குதிரை ஆக நபர் ஐந்து சேர்ந்துள்ள ஒரு குடும்பம்.

முருகேசன், அம்மாளு ஆகிய இவருடைய வரும்படியில்தான் இவர்கள் சாப்பாடு (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்', முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள்தான். எல்லாரும் ஏகதேசக் குடியர்கள் தான். ...!பத்தும் பசி வந்திடப் பறந்து போம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே; அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்.

ஒரு நாள் குடிபோதையில் அடிபட்டுப் பேச்சு மூச்சின்றிக் கிடக்கும் குதிரை வண்டிக்காரன் முருகேசனுக்குப் பால் - கஞ்சி வேண்டுமாம்! அவன் மனைவி அம்மாளுவுக்குக் கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசில்லை. அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

சந்தில் பக்கத்தில் ஒருவன்—அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன். இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய், சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால்-கஞ்சி வார்க்கத்தான்!

"என்னவோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்" என்று கதையை முடிக்கிறார். இந்தச் சொற்கள் கன்னத்தில் அறைவதைப் போல் இருக்கிற அதே நேரத்தில், எங்கேயோ நெருடவும் செய்கிறது என்பதையும் உணர்கிறோம்.

இவ்வாறு பொன்னகரத்தில் கற்பு படும் பாட்டை எரிமலையாகிக் கொட்டுகிறார் ... ஒரு பக்கம் கற்பு, கற்பு என்று கதறும் சமுதாயம்; மறுபக்கம் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் ஒரு கணிசமான கூட்டம். இரண்டுக்கும் இடையில்தான் எவ்வளவு வேறுபாடு என்று விமரிசனத்துக்கு உள்ளாக்குகிறார்.

(இரா. தண்டாயுதம், பக். 32).

பொன்னகர அம்மாளு கற்பை இழப்பது தன் கணவனுக்காகத் தான் என்பதாலும், அவர் இதனை ஒரு தொழிலாக மேற்கொள்ள வில்லை; சூழலின் கட்டாயத்தால் செய்தாள் என்பதாலும், இதில் தவறேதுமில்லை என்பது போலவும், ஒரு வேளை தவறு இருந்தாலும், அத்தவறு அவளுடையதன்று; அவளை இத்தீர்வை நோக்கித் தள்ளிய சமுதாயத்தினுடையது என்பது போலவும் இருக்கிறது. ஆசிரியர் 'என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே, இது தான் ஐயா, பொன்னகரம்' என்று கதையை முடிக்கும் முறை என்கிறார் முத்தையா (பக். 91).

'கவந்தனும் காமனும்' கதையைப் படித்து முடிக்கிறபோது பசியாறுதல் பொருட்டுச் செய்யும் 'படுக்கைத் தொழில்' மீது வெறுப்பே ஏற்படுகிறது. ஆனால் பொன்னகரத்தைப் படித்து முடித்தபோது அம்மாளுவின் 'தியாகத்தை' ஆதரித்துப் பேசுவது போன்று உணர்வு ஏற்படுகிறது' என்கிறார் முருகரத்னம் (பக். 91).

'கவந்தனும் காமனும்' கதாநாயகியின் தீர்வைப் புதுமைப்பித்தன் உடன்படவில்லை என்றே கருதலாம். அவர் பயன்படுத்தும் குறிப்பு நெறி அவ்வாறு கருத இடமளிக்கிறது.

'கற்புத்தீயால் மதுரையை எரித்த இளங்கோவடிகளின் கண்ணகியைவிட, கணவனைக் காப்பாற்றுவதற்காகக் கற்பை விற்ற புதுமைப்பித்தனின் அம்மாளு எனக்குஉசத்தி' என்பது சு. சமுத்திரம் கருத்து. ('இன்றைய தமிழின் எழில்' என்னும் தலைப்பில் மதுரை உலகத் தமிழ் மாநாட்டில் பேசியது).

'அதுதான் வேறு உலகமாயிற்றே. அதன் தர்மங்களும் வேறு. கணவன் மண்டையைப் போட்டால் குடும்பத்தைக் காப்பாற்றுவது யார்? அவன் இருந்தாலாவது நாலு காசு சம்பாதித்து 'இனி மேலாவது' மானத்துடன் வயிற்றைக் கழுவலாம் என்ற சமாதான உடன்படிக்கை' என்கிறார் கி. இராசா (பக். 53).

அம்மாளுவை முற்றிலும் வேறுவிதமாகப்பார்த்த எழுத்தாளர்களும் உண்டு! ''அம்மாளுவுக்கு புதுமைப்பித்தனா விதி? பால் கஞ்சி விவகாரம் அன்றைய இராப்பொழுது விடிவதற்குள் தீர்க்கப்பட வேண்டிய - தீர்த்து வைக்கப்பட வேண்டிய - மாபெரும் சமுதாயப் பிரச்சனையா என்ன? 'அவர் சொன்னாராம், இவள் கேட்டாளாம் சதைத் திமிர் பிடித்த பைத்தியக்காரி - பாவி!

அப்படியே கட்டிய புருஷனுக்குப் பால்-கஞ்சி வார்க்க வேண்டுமென்று உண்மையாகவே அம்மாளுவுக்கு ஆசை இருந்திருந்தால் இரவோடு இரவாகக் கூலிவேலை செய்து அந்த முக்கால் ரூபாயைச் சம்பாதித்திருக்க முடியாதா? என்ன? சே! அம்மாளுவின் உலகம் வேறு உலகமாம். பின் - அந்தப் பாவி இந்த மண்ணுக்கு ஏன் வந்து தொலைந்தாள்? சே!... பொன்னகரத்தின் அம்மாளுவுக்கு நல்வழியைக்காட்டத் தவறிவிட்ட புதுமைப்பித்தனை நான் மன்னித்து விடுவேன்; ஆனால் இந்தச் சமுதாயம் மன்னிக்காது; மன்னிக்கவே மன்னிக்காது. ...இந்தப் பொன்னகரம்தான் அந்த அக்கினிப் பரிட்சைக்கு முன்னோடியா? இன்றைய 'படி தாண்டும் பத்தினிகள்' பட்டியலில் இடம்பெற்று வரும் 'சதவிரத எழுத்தாளர்களுக்கும்' 'பதிவிரதை எழுத்தாளர்களுக்கும்' இதே பொன்னகரம் தான் வழி காட்டியிருக்குமோ...? பாவம், புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தனைப் போல என்னால் சிரிக்க முடியவில்லை. என் கண்கள் கலங்குகின்றன புதுமைப்பித்தனுக்காக! அமரர்

புதுமைப்பித்தனின் கறைபட்ட - கரைக்கப்பட்ட-கற்புக்காக!... என் கண்ணீரிலே ஓர் அணுப் பங்குகூட, ஒரு பரம அணுவின் பாகம்கூட பொன்னகரத்தின் கதாநாயகி, ஸ்ரீமதி அம்மாளுவுக்கு - திருமதி அம்மாளுவுக்குச் சேராது; சேரவே சேராது! சேரவும் கூடாது! சேரவும் விடமாட்டேன்!'' என்று குமுறுகின்றார் பூவை. எஸ். ஆறுமுகம் (பக்.83-84).

''புதுமைப்பித்தனது இலக்கியம் ஜனநாயக இலக்கியம். தமிழ்ச் சிறுகதைகளின் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுதலை, புரட்சியைத் தோற்றுவித்தவர் புதுமைப்பித்தன்'' என்று குறிப்பிடும் தி.க. சிவ சங்கரன், ''தொழிலாளப் பெண்கள் சர்வ சாதாரணமாகக் கற்பை விலை பேசுகிறார்கள் என்னும் தவறான எண்ணத்தைத்தான் இந்தக் கதை, வாசகர்களுக்கு உண்டாக்கும்...மனிதவாழ்வைப் பற்றியும் கலை இலக்கியத்தைப் பற்றியும் புதுமைப்பித்தன் கொண்டிருந்த கருத்துகள் விபரீதமானவை, விசித்திரமானவை, தவறானவை'' என்கிறார். ''தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களி லேயே தலைசிறந்தவர் என்று என்னால் புதுமைப்பித்தனை ஏற்க இயலவில்லை'' என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

எந்த ஒரு கலைஞன் தன் படைப்பில் தன் காலத்துச் சமுதாயத் திலுள்ள வறுமைத் துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டத்தைக் காட்டுகிறானோ அவனே பரபரப்பாகப் பேசப்படுவான் என்றும் ஐரிஷ் அறிஞர் ஃபிராங்க் ஒகானரின் கூற்று புதுமைப்பித்தன் கைவண்ணத்தால் உண்மையானது. உழைப்பு ஓர் இடம், பயன் ஓர் இடம்

'துன்பக்கேணி' என்னும் கதையில் பண்ணைப் பள்ளர்கள்- விவசாயத் தொழிலாளிகள் - பண்ணையார்களினால் சுரண்டப் படுதலே அவர்களுடைய வறுமைத் துன்பத்திற்கும் வளமற்ற வாழ்க்கைக்கும் காரணம் என்பதையும், பிழைப்பிற்காக இலங் கைக்குச் சென்று அங்கே தேயிலைத் தோட்டங்களில் பட்டறிகின்ற துயரங்களையும் தொல்லைகளையும் சிறுமைகளையும் சீரழிவு களையும் உருக்கமாக எடுத்துக்காட்டுகிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம் வாசவன் பட்டி; ஆங்குள்ள பண்ணையார் நல்லகுற்றாலம்பிள்ளையினிடத் தில் மருதியும் அவள் புருஷன் வெள்ளையனும் பண்ணைத் தொழி லாளிகள்! பண்ணையாரிடத்தில் கடன் வாங்கியிருந்த இருநூறு

ரூபாயைக் கொண்டு இரண்டு காளையும் வண்டியும் வாங்கினான். கொஞ்சநாட்கள் மாட்டை உபயோகித்துக் கொண்டு, அது நோஞ்சானாகும் சமயத்தில், பண்ணை எஜமானின் காலைப் பிடித்துப் பணமாகக் கடனைக் கொடுக்காமலிருந்து விடலாம் என்ற யோசனையின் பேரில்தான் கடன் வாங்கினான். பண்ணை எஜமான் இவனுடைய சூழைக்கும்பிடுகளுக்கெல்லாம் மசிகிறவ ராகத் தெரியவில்லை. அதனால் சிறிது முரட்டுத்தனத்தோடு நடந்து கொண்டார். காளைகள் பண்ணையார் வசமாயின. வெள்ளையனும் மருதியும் குய்யோ முறையோ என்று கத்தினார் கள். வெள்ளையன் கொஞ்சம் முரண்டினான்; அதனால் உதை கிடைத்தது அவனுக்கு!

அன்று இரவு வெகு நேரம் வரை வெள்ளையன் வீட்டிற்கு வரவில்லை. பண்ணையாரின் இரண்டு மயிலைக் காளைகளை வெள்ளையன் திருடியிருப்பானோ என்று சந்தேகப்பட்டு விசாரிக்க வந்த தலையாரியிடத்தில் மருதி 'தன் புருஷன் அவ்வளவு நேரம் வீட்டிலிருந்துவிட்டு அப்பொழுதுதான் வெளியே போனான் என்று ஒரு பொய் சொன்னாள். பலன் அவனால் உதைக்கப்பட்டாள். வெள்ளையன் இரவு வெகுநேரம் வரை கள்ளுக்கடையில் இருந்த தாகப் பலர் சொல்ல, வெள்ளையன் சிறைக்குச் சென்றான்.

வெள்ளையன் உண்மையில் திருடாமல் இருந்தாலும் என்ன? ஏமாற்றிய பணத்திற்காகவாவது அங்குப் போய் விட்டு வரட்டுமே என்பதுதான் பண்ணையாரின் வாதம். இந்தக் களேபரக் காலத்தில் மருதிக்கு இரண்டு மாதம். அதனால் அவள் அப்பன் வீடு சென்றாள். பண்ணையாருக்கு ஏச்சும் இரைச்சலுந்தான் மிச்சம். ஆனால், வெள்ளையன் சிறைக்குப் போனதில் பணத்திற்குப் பதிலாக ஒரு திருப்தி அவருக்கு!

சிறிது காலத்துக்குப் பிறகு மருதியும் அவளுடைய தாயாரும், கங்காணியுடன் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து பிழைப் பதற்காகக் கொழும்புக்குப் புறப்பட்டார்கள். தேயிலை ஸ்டோர் மேனேஜர், 'புதிய உருப்படி' என்பதால் மருதியைக் 'குளித்துவிட்டு வா' என்றார். அதன் அர்த்தத்தைக் கூலிகளின் சம்பிரதாயத்தைப் பற்றிக் காரியம் மிஞ்சிய பிறகுதான் அவள் உணர்ந்தாள். விலக்க முடியாத பழக்கம். நாளடைவில் வேறு விதியில்லாமல் தலை கொடுக்க வேண்டியிருந்தது.

தன் கணவன் வெள்ளையனை நினைத்துக்கண்ணீர் வடித்தாள் மருதி. நாட்கள் ஓடின. பெண் குழந்தையும் பிறந்தது! சிறிது நாளில் மருதியின் தாய் மலேரியாக் காய்ச்சலில் இறந்துபோனாள். அதற்குப் பிறகு இரண்டாண்டு காலம் பங்களாவின் பக்கத்தில் தோட்டக்காரியாக வாழ்ந்தாள். சிறையிலிருந்து விடுபட்ட வெள்ளையன் நேராக மாமனார் வீட்டிற்குச் சென்றான். மாமனாரிடம் கடன் வாங்கிக் கொண்டு மருதியைப் பார்ப்பதற்காக அவன் தேயிலைத் தோட்டத்திற்குப் புறப்பட்டான். அவன் கையைப் பிடிக்கப்போன வெள்ளையனைப் பார்த்து மருதி ''என்னைத் தொடாதே! மேலெல்லாம் பாத்தியா? பறங்கிப்புண்'' என்றாள். ''இங்கே இதுதான் வளமொறை.''

வெள்ளையனிடத்தில் குழந்தையையும், தன் சம்பளப் பணம் இருநூறு ரூபாயையும் கொடுத்தாள் மருதி 'என்னால் ஊருக்கு வர முடியாது. குழந்தையைக் கொண்டு போ' என்றாள். குழந்தையின் பேரு வெள்ளச்சி! தோட்டக்காரி என்ற அந்தஸ்து போய் மருதி மீண்டும் தேயிலைக் கூலியாகி விட்டாள். கூலிகளில் பலர் அவளுக்குக் கள்ளுத் தண்ணி வாங்கிக்கொடுத்து அவளுடைய தயவை எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

மருதியின் கால் கைகளில் புண். அத்துடன் குத்திருமலும் சேர்ந்து கொண்டது. செத்தால் வாசவன்பட்டியில் தான் சாக வேண்டும் என்ற ஆசை அவளுக்கு அதிகரித்துவிட்டது. ஒருநாள் கங்காணி சுப்பன் மருதியை, அவளால் பறிக்கப்பட்ட தேயிலை கொழுந்துகளாக இல்லாமல் முற்றிய இலையாக இருந்ததால், கழிகொண்டு தாக்கினான்; அபராதம் பிடித்து வாரக்கூலியில் மண்ணைப் போட்டான். பிறகு வியாதியஸ்தர் என்ற காரணம் காட்டி அவள் வேலையிலிருந்து நீக்கப்பட்டாள்.

பெருத்த நம்பிக்கையோடு கொழும்பிலிருந்து வாசவன் பட்டிக்குச் சென்ற மருதி வெள்ளையனுடைய புது மண ஊர்வலத்தைக் கண்டாள்; அவளை ஒருவரும் கண்டுகொள்ளாததனால், ஏதோ பாரம் நீங்கிய மாதிரி திரும்பிவிட்டாள். பாளையங்கோட்டைக்கு வந்து புல்லு வெட்டிப் பிழைத்த மருதி குழந்தை வெள்ளச்சியைப் பார்ப்பதற்காக வெள்ளையன் வீட்டிற்குச் சென்றாள். ''கஞ்சிப்பானையைக் கவுத்துப்புட்டியே, மூதி! என்னெத்தெக் குடிப்பெ! உங்கப்பன் வந்தான்னா மண்ணையா திம்பான்? அந்தத் தட்டுவாணி முண்டையோடெ தொலையாமெ,

...சவமெ, சவமெ'' என்று மாற்றாந்தாய் வெள்ளச்சியை அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

குழந்தையை வாரியெடுத்துக் கொண்ட மருதிக்கும் அந்த மாற்றாந்தாய்க்கும் சண்டை ஏற்பட, மருதி துரத்தப்பட்டாள். குழந்தையுடன் கங்காணிச் சுப்பன் அழைக்க மருதி வாட்டர் பாலத்துக்குச் சென்றாள்; பதினான்கு வருஷங்கள் சுப்பனின் மனைவியாக வாழ்ந்தாள். இப்போது பிராயமடைந்துவிட்ட வெள்ளச்சியை அந்த வாட்டர்பாலக்கும்பலில் கருவிழுட்டைக் காக்கிற மாதிரி காத்துவந்தாள்.

இராமச்சந்திரன் என்னும் ஆசிரியரிடம் படித்து வந்த வெள்ளச்சியிடம் சில சமயம் முதிர்ந்த விபச்சாரியின் பேச்சுக்களுடன், களங்கமற்ற அவள் உள்ளமும், வெளிப்பட்டது. யாருக்கும் தெரியாமல் ஒன்றைச் செய்தால் பாவமில்லை. இது வெள்ளச்சியின் அபிப்பிராயம்.

பெற்றோர்கள் விரும்பிய குதிரைக்காரச் சின்னானைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பாத வெள்ளச்சி ஆசிரியர் இராமச்சந்திரனை மணக்க விருப்பம் தெரிவித்தாள். அதற்கு இடையூறாகவிருந்த ஸ்டோர் மேனேஜர் மீது மருதி போட்ட கல் அவர் உயிரைப் பறித்தது. அதனால் ஆத்திரப்பட்டுத் தாமோதரன் அடித்த அடியில் மருதி பைத்தியமானாள். அவளும் வெள்ளச்சியும் ராமச்சந்திரனும் எங்கோ சென்றுவிட்டார்கள்'.

'உரைநடையில் அமைந்த குறுங்காவியம்' என்னும் புகழுக்குரிய இந்தக் கதையில் வாழ்க்கையின் அவலங்களையும் சமுதாயக் கொடுமைகளையும், உயர்ந்த நிலையில் இருப்போர் தாழ்ந்த நிலையில் இருப்போரை வஞ்சிப்பது, சிறுமைக்கும் சீரழிவுக்கும் உள்ளாக்குவது, அநியாயமாகத் தண்டிப்பது முதலிய செயல்கள் செய்வதையும், இவைகளின் பாதிப்புக்கு உள்ளான உழைப்பாளர்களான ஏழைமக்கள் பிழைப்புக்காக இலங்கைக்குச் சென்று அங்கே தேயிலைத் தோட்டங்களில் பட்டறிகின்ற துன்பங்களையும் அவமானங்களையும் உருக்கமாக விளக்குவதன் மூலம் விமரிசனம் செய்கிறார் புதுமைப்பித்தன்.

## 3. மரபு மீறல

ஆண் பெண் உறவுகளையும் உணர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் மரபு மீறலைச் சமுதாய விமரிசனமாக்குகிறார்.

'வாடாமல்லிகை' கதையில் வரும் விதவை சரசு ஓர் உலாவும் கவிதை! பெற்றோர் கலியாணம் செய்து வைத்தார்கள். புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்றுக் காண்பித்துவிட்டு, விடாய் தீருமுன் தண்ணீரைத் தட்டிப் பறித்த மாதிரி, எங்கோ மறைந்து விட்டான்.

சரசு எப்பொழுதும் மாடியின்மேல் காலை ஏழு மணிக்கே ஸ்நானம் முடித்துத் தலையை உலர்த்த வருவாள். பெற்றோரின் பாசம் அவளைச் சமண முனி மாதிரி, பெண்மையின் கோரமாக்கத் துணியவில்லை... அவளைப் பார்த்தால் யாருக்கும் கண் கலங்கும். அவள் கண்களிலே ஒரு நிரந்தரமான துயரம், போக்க வழியில்லாத துன்பம் குடிகொண்டிருக்கும்.

அன்று சரசுவின் தம்பிக்குச் சாந்திக் கல்யாணம். அன்று இரவு அவளுக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் என்று நினைவுகள் எல்லாம் குவிந்தன. தன்னை மீறிய கட்டுக்கடங்காத ஓர் ஆவேசம் அவளைப் பிடர் பிடித்துத் தள்ளியது. நெடுநாளாக அவளைக் கவனித்து வருகின்ற ஆண் மகன் ஒருவன், அவளுடைய தோளில் கைவைத்து, அவளை மணந்து கொள்கிறேன் என்றான். அவள் அவன் செயலைத் தியாகத்தின் வெளிப்பாடாகக் கருதி, அதை ஏற்க மறுக்கிறாள்.

"உமது தியாகத்தின் பலிபீடமாகத்தான் நீர் என்னைக் கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக்கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்" என்கிறாள் சரசு. "அது என்னிடம் இருக்கிறது" என்று அவன் கூற, "அப்படியானால் திருமணம் வேண்டாம். பாசம் இருந்தால் போதும்" என்று சொல்லித் தலை குனிந்தாள்.

"என்ன சரசு இப்படிச் சொல்லுகிறாய்? ரகசியம் பாபம் அல்லவா? கலியாணம் இதை நீக்கிவிடுமே".

"எனக்கு உமது தியாகம் வேண்டாம். உமது பாசம் இருந்தால் போதும்".

"நீ ஒரு பரத்தை!"

"உமது தியாகத்திற்கு நான் பலியாக மாட்டேன். அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக் காலத்து நன்மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கின்றீர். நான் பரத்தை யன்று. நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்"

என்றாள். மனம் கலங்கிய அவன் விலகிப் போகிறான். மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது என்று புதுமைப்பித்தன் கதையை முடிக்கின்றார்.

'வாடா மல்லிகை' என்னும் கதையின் பெயருக்கேற்ப விதவையாகிவிட்ட போதிலும் ஒரு பெண். இயற்கையின் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளுவதற்காக, ஓர் ஆணுடன் திருமண உறவு இல்லாமலே பாசப்பிணைப்பு பெற விரும்புகின்ற எண்ணத்தையே சமுதாய விமரிசனமாக வைக்கிறார்.

''புதுமைப்பித்தன் காலத்தில் வேறு எந்த இலக்கிய ஆசிரியர்களிடமும் சிந்தனைச் சுதந்திரம் இந்த வகையில் செயல்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சிந்தனைச் சுதந்திரத்தின் காரணமாகப்புதுமைப்பித்தனால் மற்றவர்கள் கையாள முடியாத விஷயங்களைத் தைரியமாகவும் லாவகமாகவும் கையாள முடிந்தது'' என்று கூறுகிறார், க.நா.சு. (முன்னுரை, பக். Lxxviii).

'வழி' என்னும் கதையில் வரும் அலமு என்னும் விதவை பணக்காரப் பெண். தாயற்ற அவளுடைய தந்தைக்கு வாழ்க்கை இன்பங்கள் புத்தகமும் பிரசங்கமும்; சில சமயம் அலமுவையும் அழைத்துச் சென்றிருக்கிறார், மரண தண்டனை அனுபவிக்கும் ஒருவன் சார்லி சாப்ளின் சினிமாவை (நகைச்சுவை) அனுபவிக்க முடியுமா? வைதவ்ய (கைம்மை) விலங்குகளைப் பூட்டிவிட்டுச் சுவாரஸ்யமான பிரசங்கத்தைக் கேள் என்றால் அர்த்தமற்ற வார்த்தையல்லவா அது!

ஒரு நாள் இரவு அவளுக்கு உறக்கம் வரவில்லையாதலால். வெளியிலிருந்த நிலா முற்றத்திற்கு, முகத்தின் வியர்வையைத் துடைத்தபடி, வருகிறாள். வானம் முழுவதும் கவ்விய இருட்டு, இந்த இருட்டைப்போல உள்ளமற்றிருந்தால் தேகமற்றிருந்தால் என்ன சுகமாக இருக்கும்!...ஒவ்வொரு நிமிஷமும் நெருப்பாய்த் தகிக்கும் சதியல்லவா வைதவ்யம்...

அப்பொழுது, ''கட்டிக் கரும்பே தேனே...'' என்ற கீழ்த்தரமான சுவையுடைய பாட்டு, கிராமபோன் ஓலம், இனிமையாக இருந்தது. கேட்பதற்கு நாணமாக இருந்தது. அது அவளுடைய உள்ளத்திலே மூண்டெழுந்த தீயிலே எண்ணெய் வார்த்ததுபோல் இருந்தது. எதிர்வீட்டில் கணவனும் மனைவியும் இன்பமாகப் பழகுவதைப் பார்த்து உணர்ச்சிவசப்படுகிறாள். இருளில் கண்ட

சுகம் அந்தச் சங்கீத ஒலத்தில் போய்விட, மார்பு வெடித்து விடுவது போலத் துடிக்கிறது. உள்ளே வந்து படுக்கையில் விழுகிறாள்.

தலையணைக்கடியில் வைத்திருந்த கொத்துச் சாவியில் இருந்த முள்வாங்கிமுனை மார்பில் குத்திவிட இரத்தம் பீறிட்டது. இரத்தம் வெளிவருவதிலே பரம ஆனந்தம். ''அவரிடம் போவதற்கு என் உயிருக்கு ஒரு சின்னத் துவாரம் செய்து வைத்திருக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் போய்விடும்! போனால் இந்த உடல் தொந்தரவு இருக்காது'' என்றாள்.

''அலமு! நெஞ்சில் என்னடி!'' என்று அலறிக்கொண்டு வந்த தந்தையிடம், ''நெஞ்சின் பாரம் போகச் சின்ன வாசல்'' என்றாள். ''இரத்தம் வருகிறதடி'' என்று நிறுத்தப் போனார் தந்தை. ''இந்த இரத்தத்தை அந்தப் பிரம்மாவின் மூஞ்சியில் பூசிடுங்கோ! வழியை அடைக்காதீர்கள்'' என்று கூறியவாறு உயிரை விடுகிறாள். ''பிரம்மாவின் மூஞ்சியில் வாரியடிக்க வேண்டும். நியாயமும் சமூகத் தர்மமும் இருக்கும் போது!'' என்று கதையை முடிக்கிறார்.

சதையும் இரத்தமுமாக இருந்து ஒரு விதவைப் பெண் அனுபவிக்கும் கைம்மைத் துன்பத்தை விட, உடலிலிருந்து இரத்தம் பீறிட்டு வருவதனால் அடையும் துன்பம்—வேதனை—பொறுத்துக் கொள்ளக் கூடியதுதான் என்பதை எடுத்துக் காட்ட—உணர்த்த—புதுமைப்பித்தன் மேற்கொள்ளும் முறை சிந்தனைக்குரியதாயுள்ளது. ஏன், சமுதாயச் சீற்றத்தைத் தூண்டுவதாயுள்ளது. ஆம் 'சிறுமை கண்டு பொங்குவாய் வா, வா, வா' என்னும் பாரதியின் அமுதவாக்கைக் கேட்கின்றோம்.

'கலியாணி' என்னும் கதையில் ஒரு பெண்ணின் மனத்தில் எழும் ஒரு சிறுசலனம்தான் மரபுக்கும் அதை மீறலுக்கும் இடையில் ஒரு நுட்பமான போராட்டத்தை ஏற்படுத்தி விடுகிறது என்பதை அற்புதமாக விளக்குகிறார் புதுமைப்பித்தன். (இரா. தண்டாயுதம், பக். 32). பொருந்தாத் திருமணம் நடைபெற்ற இடத்தில் பெண் பிறர் எதிர்பார்க்கிறபடி நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் பொருளில்லை; ஏன் கட்டாயம் எதுவும் இல்லை; அவள் நினைப்பும் நடப்பும் நிலைக்குத் தக்கவாறு தனித்தன்மை உடையதாக இருக்கும் என்பதை அருமையாக உணர்த்துகிறார்.

கதை நிகழுகின்ற வாணிதாசபுரம் என்னும் ஊரிலுள்ள மக்களை அறிமுகம் செய்யும் போக்கில் அவர்களை விமரிசனம்

செய்யும் அழகைப் பாருங்கள். ''கோவில் பூசை, உபாத்திமைத் தொழில், உஞ்சவிருத்தி என்ற சோம்பர்ப் பயிற்சி—இவைதான் அங்குள்ள பிராமண தர்மத்தின் பிரதிநிதிகளின் வாழ்க்கை இலட்சியம். வேளாண்மை என்ற சோம்பர்த் தொழில் அங்குள்ள பிள்ளைமார்களின் குலதர்மம். ஏவிலவேலையைச் செய்தல், ஊர்க்காவல் என்ற சில்லறைக் களவு உட்பட்ட சோம்பல் தர்மத்தை மறவர்கள் கடைப்பிடித்தனர். பறைச்சேரி ஊரின் போக்குடன் கலந்தாலும் அல்லும் பகலும் உழைத்து உழைத்து, குடித்து, பேசிப் பொழுதைக் கழித்தது.'' பிராமணர், பிள்ளைமார், மறவர், சேரிவாழ்வோர் ஆகியோரின் பண்பு நலன்களைப் படம் பிடித் துக் காட்டுகிறது இந்தப் பகுதி.

அந்த ஊரில்—வாணிதாச புரத்தில்—சிவன் கோவில் அர்ச்சகர் சுப்புவையர், தமது 45ஆவது வயதில் 'மூத்தாளை' இழந்துவிட, இரண்டாவதாகக் கலியாணியை விவாகம் செய்து கொண்டவர். அவரிடம் அவளுக்கு இன்ப சுகம் கிடைப்பதில்லை. அத்துடன் அவர் எப்போதும் முதல் மனைவியின் புகழ் பாடுபவராகவும், இவளைக்குறை கூறுவதில் மகிழ்ச்சி அடைபவராகவும் இருக்கிறார். கலியாணியும் ஒரு பெண்ணாயிற்றே, அவளுக்கும் இயற்கையின் பாலுணர்வுத் தேவையும் பருவத் தூண்டுதலும் இருக்குமே என்ற அறிவு சிறிதும் கிடையாது போயிற்று சுப்புவையருக்கு!

இந்தச் சூழ்நிலையில் அவ்வூருக்கு வந்த ஓவியர் சுந்தர சர்மா, அக்ரகாரத்தில் ஒரு காலிக் குச்சு வீட்டில் வாடகைக்கு இருந்து கொண்டு, சாப்பாட்டிற்குச் சுப்புவையர் வீட்டில் வாடிக்கை வைத்துக் கொண்டார். சுப்புவையர் வீடு காற்றும் ஒளியும் உள்ளே எட்டிப் பார்க்கக் கூடாது என்று சங்கற்பம் செய்து கொண்ட சுப்புவையரின் மூதாதைகளில் ஒருவரால் கட்டப்பட்டது. பகலில் இருட்டு. இரவில் குத்து விளக்கின் மங்கலான இருட்டு. கலியாணி பொந்துக்கிளி! அதிகமாக வெளியில் நடமாடும் பழக்கம் கிடையாது.

வரும் போது சர்மாவின் மனம் களங்கமற்ற மத்தியான வானம் போல் இருந்தது. ஆனால் கலியாணியின் நிலைமை அவருடைய அனுதாபத்தைத் தூண்டியது. அவளுடைய அழகு அவருடைய அன்பையும் ஆசையையும் கிளறியது! அவளது உள்ளத் தைத் துருவும் பார்வைகளைச் செலுத்தியது! அவரது உள்ளம் அவளைத் தன்னுள் ஐக்கியமாக்கியது! ஒரு நாள் இரவு சாப்பாடு முடிந்தவுடன் கலியாணியின் உள்ளம் அடிக்கடி அவளை அறியமால்

சர்மாவை நாடியது. சர்மாவும் அவளுடைய சோகக் கதையை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினார்!

''சுப்புவையர் வசம் கலியாணி பிணிக்கப்பட்டால், விதியின் அற்பத்தனமான லீலைகளை உடைத்தெறிய ஏன் மனம் வராது? அவரை மனிதனாகவே சர்மா நினைக்கவில்லை. அவரது சிறையிலி லிருந்து அவளை விடுவிக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். அதில் கல்யாணியின் சம்மதம்—அதைப் பற்றிக் கூட அவருக்கு அதிகக் கவலையில்லை... அவளை அழைத்துக் கொண்டு சென்று விட்டால்... வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்!''

புதுமைப்பித்தன் இவ்வாறு எழுதுவதற்கு என்ன காரணம்? 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்னும் தமிழ் நாடு என்பது அவருக்குத் தெரியாதா? நினைவிருக்காதா? இருந்தும் இவ்வாறு எழுதுவதற்குக் காரணம், பொருந்தாத் திருமணத்தின் மீது புதுமைப்பித்தனுக்கு இருந்த பொங்கும் சினமே எனலாம்.

மறுநாள் காலையில் சர்மாவின் மனம் கலியாணியின் பின் சென்றுவிட, தான் மட்டும் வயல் வழி நடந்து குளக்கரையை அடைந்தார். அங்கே மரத்தின் மறைவில் நீரில் நின்று கொண்டு கலியாணி தனது ஈரப் புடவையைப் பிழிந்து உடுத்திக் கொண் டிருந்தாள். ஈரம் சொட்டும் கூந்தல் முதுகை மறைத்தது. ஈரப் புடவையில் நின்ற அந்த அழகு சர்மாவுக்கு மஜூம்தாரின் சித்தி ரத்தை நினைவூட்டியது.

சர்மாவுடன் சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு அவரைப் பரிதாபகரமாகப் பார்த்து விட்டுக் கரையேறி வீட்டை நோக்கி நடந்தாள். அப்போது அவள் ஈரப்புடவை அவர் மீது பட்டு உணர்ச்சியைத் தூண்டியது.

பிறகு சர்மா குளித்து விட்டு நேராகக் கலியாணியின் வீட்டை யடைந்த போது சுப்புவையர் கோவிலுக்குச் சென்றுவிட்டிருந்தார். இவ்வரவை எதிர்பார்த்திருந்த கலியாணி, இலை போட்டுச் சுடு சாதம் படைத்தாள். சர்மாவிடம் பேசும்போது ஓர் ஆறுதலா யிருந்தது. சாப்பாடு முடிந்தது. மத்தியானத்துக்கென்று ஒரு பொட்டலத்தைச் சர்மாவின் கையில் கொடுத்து அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சுவது போல அவளுடைய கண்கள் அவரை நோக்கின!

சர்மா, 'கலியாணி' என்று கம்மிய குரலில் அவளை யழைத்து விட்டு, அப்படியே இழுத்து ஆலிங்கனம் செய்தார்; அதரத்தில் முத்தமிட்டார். கலியாணியும் கட்டுண்ட சர்ப்பம் போல், தன்னை யறியாது கொந்தளித்த உள்ளத்தின் எதிரொலிக்குச் சிறிது செவி சாய்த்து விட்டாள். உணர்ச்சி வந்ததும், ''என்னை விட்டு விடுங்கள்'' என்று பதறினாள்; ''என்ன போங்கள்'' என்று தண்டிப்பது போல் நோக்கினாள். மறுபடியும் சர்மா கல்யாணியை நெருங்கிய போது, அவள் சமையலறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். கலங்கிய உள்ளத்துடன் சர்மா வும் வெளியே சென்றார்.

சுப்புவையர் மத்தியானம் உணவை முடித்துக் கொண்டு உறங்கத் தொடங்கினார், 'சுப்புவையர் தன் மீது ஓர் அந்தரங்க மான நம்பிக்கை வைத்திருப்பதால், அதை மோசம் செய்வதா' என்று எண்ணினாள். ''இருளில் வழி தெரியாது தவிக்கும் பாதசாரி, ஏதாவது ஒன்றைத் தனது நம்பிக்கைக்குப் பாத்திர மானது என்று சங்கற்பித்துக் கொண்டு அதை நோக்கிச் செல்வது போல், தன் கணவர் நித்தியம் பூஜை செய்யும் கோவிலுக்குச் சென்று கலங்கிய உள்ளத்திற்குச் சாந்தியை நாடினாள். கோவில் மூலஸ்தானத்தின் இருளுக்கு இவளது மன இருள் தோற்றுவிட்ட தாகத் தெரியவில்லை.''

கலியாணிக்குச் சர்மாவின் மீது ஆசையிருந்தாலும், அவரைச் சந்திக்காதிருக்க வேண்டுமென்ற நினைப்பும் இருந்தது...அதே நேரத்தில் சர்மாவை நினைக்கும் பொழுதெல்லாம் ஒரு மகிழ்ச்சி; அவர் மறுபடியும் தன்னைத் தழுவ மாட்டாரா என்ற ஆசை; அடுத்த நாள் விடியற்காலை. சர்மாவுக்கும் கலியாணியைப் பற்றிய நினைவு உறுத்தியது. ஊரை விட்டே போய்விடுவது என்னும் நினைப்போடு ஊர் திரும்பினார். ஆற்றங்கரையைக் கடக்கும் போது, கலியாணி துணி துவைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார்.

'நீங்களா' என்று அவள் சொல்லி முடியுமுன் சர்மா அவளை அப்படியே தழுவிக் கொண்டார். அவள் விலக முயன்றாள். இருவரும் தடுமாறி விழுந்தனர். கலியாணியின் முகத்திலும் அதரத் திலும் மாறி மாறி முத்தமிட்டதை அவள் தடுக்கவில்லை. சற்று நேரம் கழித்து, ''கலியாணி என்னுடன் வந்துவிடு! இந்த மனித

நாற்றமே அற்ற இடத்திற்குச் சென்று விடுவோம்'' என்று அழைத்தார் சர்மா.

''ஐயோடி', அது முடியாது'' என்று மறுத்த அவள், ''எனக்கு அதற்குப் பயமாக இருக்கிறது; நீங்களும் போக வேண்டாம். இங்கேயே இருந்து விடுங்கள்'' என்று வேண்டினாள். ''சீ! அது முடியாத காரியம். என்னுடன் வா'' என்று அவளுடைய கையைச் சர்மா பிடித்த போது, ''முடியாது'' என்று கலியாணி மறுத்து விடுகிறாள். சர்மா தனியே சென்று விடுகிறார்.

''கலியாணியின் வாழ்க்கை—அலையில் ஒரு குமிழி உடைந்து போயிற்று'' என்று கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன். மரபு மீறலிலே கூட ஒரு வரையறையை வைத்துக் காட்டுகிறார்.

சர்மாவுடன் வெளியே எங்காவது சென்று வாழ்வது கணவனுக்குச் செய்கின்ற 'நம்பிக்கை மோசம்' என்று கருதும்கலியாணி, உள்ளூரிலேயே கணவனுக்குத் தெரியாமல் சர்மாவுடன் உறவு கொள்வது—வாழ்வது—தவறாகாது என்று கருதுகிறாள். இதற்குக் காரணம் அது பொருந்தாத திருமணம்—கிழவருக்கு இளைய தாரமாக வாழ்க்கைப்படும் திருமணம்—என்பதா? பொருந்தாத் திருமணத்தின் மீதான சமுதாய விமரிசனமாகவும் இக்கதையைக் கொள்ள இடமிருக்கிறது எனலாம்.

## 4. பூலோகத் தெய்வங்கள்

'சங்குத் தேவனின் தர்மம்' என்னும் கதையில் பணக்காரர்களைப் பூலோகத் தெய்வங்கள் என்றும் விமரிசனம் செய்யும் புதுமைப்பித்தன் 'வறியோர் பலரின் வறுமையைப் போக்கும் பொதுநல நோக்கில் ஒருவன் திருட்டைத் தொழில் ஆக்கிக் கொள்வதை வரவேற்கிறாரோ' என்று நினைக்கத் தோன்றுகிறது. (முத்தையா, பக். 93).

''நமது இந்து சமூகத்தின் பழைய உலர்ந்து போன கட்டுப்பாடுகளின் கைதிகளாக ஏழைகள்தாம் தற்போது இருந்து வருகிறார்கள். ஏழ்மை நிலைமையிலிருக்கும் பெண்கள் கொஞ்ச காலமாவது கன்னிகையாக இருந்து காலந்தள்ள இந்து சமூகம் இடந்தராது. இவ்விஷயத்தில் கைம்பெண்களின் நிலையை விடக் கன்னியர்கள் நிலை பரிதாபகரமானது. மிஞ்சினால் விதவையை அவமதிப்பார்கள். ஆனால் ஒரு கன்னிகையோ எனில் அவதூறு உலகத்தின்

நிஷ்டூரம் என்ற சிலுவையில் அறையப்படுவாள். பண்க்காரர்களான பூலோகத் தெய்வங்களின் மீது சமுதாயக் கட்டுப்பாட்டின் ஜம்பம் பலிக்காது......'' என்று கதையைத் தொடங்குகிறார்.

கொள்ளை அடிப்பதையே தொழிலாகக் கொண்டவன் சங்குத் தேவன். வறுமையில் குசேலரின் தமக்கையான முறுக்குப்பாட்டி முத்தாச்சி என்னும் கிழவி அந்தக் கொள்ளைக்காரனை நினைத்து அஞ்சியவாறே காட்டுப் பாதையில் நடந்து கொண்டிருக்கிறாள்.

விடிந்தால் திருமணமாகப் போகும் தன் மகளுக்காகச் செய்த பாம்படம் நகையைப் பத்திரமாக முடிந்து இடுப்பில் சொருகிக் கொண்டு உள்ளாள் கிழவி. இருள் பரவத் தொடங்கியது. 'தன்கை தெரியாத கும்மிருட்டு. அந்த இருட்டில், முன்னால் நடந்து கொண்டிருக்கும் சங்குத் தேவனை அறியாமல் அவனுடன் பேச்சுக் கொடுத்த கிழவியிடம் பேசிக் கொண்டே அவளது நிலை மையை அறிந்து கொள்கிறான்.

சற்று நேரத்தில் கிழவி, ''அதோ கோயில் தெரியுது. நான் இனி மேல் போய் விடுவேன்'' என்றாள். அப்போது கிழவியிடம் அவன், ''ஏ ஆச்சி! நில்லு. நீ ஏழெதானே? இன்னா, இதை வச்சுக்க! முதல் பேரனுக்கு என் பேரிடு சங்குத்தேவர்னு'' என்று தன் பணப்பை யைத் தந்தான். ''வேண்டாம், வேண்டாம்! என்னை விட்ருங்க'' என்று கதறிய கிழவியைப் பார்த்து ''ஒன்னெ கண்ணானை ஒண்ணுஞ் செய்யலெ!'' என்று பணப்பையைக் கொடுத்து அனுப்பி னான், சங்குத்தேவன்.

''ஆமாம், கிழவி திடுக்கிட்டுப் போயிட்டா. ஒண்ணா ரெண்டா, நூறு! இதுவும் ஒரு வேடிக்கெதான்! சங்குத்தேவனெக் கிழவி......'' என்று முனகிக் கொண்டே எழுந்து ஓர் ஒற்றையடிப் பாதையில் நடந்தாள் என்று கதை முடிகிறது. இந்தக் கதையில், வறியோரின் வறுமையைப் போக்கத் திருட்டுத் தொழிலைப் புதுமைப்பித்தன் ஆதரிக்கிறார் என்று கூறுவதற்கு இடமில்லை சங்குத் தேவனைக் கிழவி திருத்திவிட்டாள் என்பதே கதையின் முடிவாக உள்ளது.

மனித வாழ்க்கையே முரண்பாடுகள் நிறைந்ததுதான். எதிர் பாராத இடங்களில், எதிர்பாராத நேரங்களில், எதிர்பார்க்க வியலாதவர்களின் மன நிலைகளிலும் முரண்பாடு தலைகாட்டும்.

சிலரை வியக்கத்தக்க முறையில் செயல்படச் செய்யும். வாழ்க்கையில் அமையும்—ஏற்படும்— இந்தச் சிக்கலையே சங்குத் தேவனின் தர்மம் மூலம் காட்டுகிறார் புதுமைப்பித்தன்.

## 5. ஏழ்மை நிலை

இடைத்தர வர்க்கத்து உழைப்பாளியின் ஆசைகளையும் கனவுகளையும், ஏக்கங்களையும் நடப்பியல் வாழ்க்கை நிலைகளையும் உள்ளது உள்ளபடி விமர்சிக்கிறார் 'செல்லம்மாள்' என்னும் கதையில்.

பிரமநாயகம் பிள்ளை வாழ்வின் மேடு பள்ளங்களைப் பார்த்திருக்கிறார் என்றால், அவர் ஏறிய சிறு சிறு மேடுகள் யாவும், படிப்படியாக இறங்கிக் கொண்டே போகும் பள்ளத்தின் கோளாறுகளேயாகும். வாழ்வு என்ற ஓர் அனுபவம் அவருக்கு ஏற்படும்போது அவர் மேட்டிலிருந்துதான் புறப்பட்டார்.

உற்ற பருவத்தில் அவருக்குச் செல்லம்மாள் கையைப் பிடித்து' அம்மி மிதித்து, அருந்ததி பார்க்க வைக்கும் பாக்கியம் கிடைத்தது. பிரமநாயகம் பிள்ளையின் தகப்பனார் காலமான பிறகு, அவர் ஜீவனோபாயத்துக்காக செல்லம்மாளைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து தஞ்சம் புகுந்தார்.

சென்னை அவருக்கு நிம்மதியற்ற வாழ்வைக் கொடுத்து அக்கினிப் பரீட்சை செய்தது. செல்லம்மாள், வீட்டிலே அவருக்கு நிம்மதியற்ற வாழ்வைக் கொடுத்துச் சோதித்தாள். குணத்தினால் அல்ல; உடம்பினால். அவளுக்கு உடம்பு நைந்து விட்டது. பிள்ளைக்கு வெளியில் சதா தொல்லை. வீட்டிலே உள்ளூற அரிக்கும் ரணம்.

பிரமநாயகம் வேலை பார்க்கும் ஜவுளிக்கடை முதலாளி, ஒரு ஜோடி ஜீவன்கள் உடலைக் கீழே போட்டு விடாமல் இருக்க வேண்டிய அளவு ஊதியம் தருகிறார். செல்லம்மாளின் வியாதி அதில் பாதியைத் தின்றுவிடுவதுடன், கடன் என்ற பெயரில் வெளியிலும் படருகிறது.

பிரமநாயகம் பிள்ளைக்குச் சம்பளத் தேதி என்று ஒன்று இல்லை. தேவையான போது வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது சம்பிரதாயம். அதாவது, மாதம் முழுவதும் தவணைவாரியாகத் தேவைகளைப் பிரித்து, ஒரு காரியத்துக்காக எதிர்பார்த்த

தொகையை அத்தியாவசியமாக முளைத்த வேறு ஒன்றுக்காகச் செலவழித்துவிட்டு, பாம்பு தன் வாலைத் தானே விழுங்க முயலும் சாதுரியத்துடன், பிரமநாயகம் பிள்ளை தமது வாழ்வின் ஜீவனோ பாய வசதிகளைத் தேவை என்ற எல்லை காண முடியாத பாலை வனத்தைப் பாசனம் செய்ய, தவணை என்ற வடிகால்களை உபயோகிக்கிறார்.

செல்லம்மாளுக்கு உடம்பு இற்றுப் போயிற்று. இடைவிடாத மன உளைச்சலும் பட்டினியும் சேர்ந்து நோய் அவளைக் கிடத்தி விடும். காலையில் கண்ட ஆரோக்கியம் மாலையில் அஸ்தமித்து விடும். இதை முன்னிட்டும் சிக்கனத்தை உத்தேசித்தும் பிரம நாயகம் பிள்ளை நகரின் எல்லை கடந்து. சற்றுக் கலகலப்புக் குறை வாக உள்ள, மின்சார வசதி இல்லாத இடத்தில் வசித்து வந்தார்.

அதிகாலையில் பசியை ஆற்றிக் கொண்டு கைப்பொட்டணத் துடன் கால் நடையாகவே புறப்பட்டுத் தமது வயிற்றுப் பிழைப் பின் நிலைக்களத்துக்கு வந்து விடுவார். பிறகு அங்கிருந்து நன்றாக இருட்டி, செயலுள்ளவர்கள் சாப்பிட்டுக் களைப்பாறும் தருணத் தில் வீட்டு நடையை மிதிப்பார். செல்லம்மாள் அன்றைப் பொழு தைக் கழித்த நிலைதான் அவரது சாப்பாட்டுக்கு மூலாதார வசதி. வரும் போது வீடு இருட்டி, வெளிவாசல் கதவு தாழிடாமல் சாத்திக் கிடந்தது என்றால், அவர் உள்ளே சென்று கால் முகம் கழுவி அநுட்டானாதிகளை முடித்துக் கொண்ட பிற்பாடு அடுப்பு மூட்டினால் தான் இரு ஜீவன்கள் பசியாறுவதற்கு மார்க்கம் உண்டு.

அவர் வீடு அடையும் தருணத்தில் அந்தப் பிராந்தியத்துக் கடைகள் யாவும் மூடிக் கிடக்குமாகையால், வீட்டில் உள்ளதை வைத்துத்தான் கழிக்க வேண்டும். சில சமயங்களில் வீட்டில் உள்ளது என்பது, காலியான பாத்திரங்கள் என்ற பொருட்பொலி வுக்குள் பந்தப்பட்டுக் கிடக்கும். அச்சமயங்களிலும் பிள்ளையவர் களின் நிதானம் குலைந்து விடாது. வெந்நீர் வைத்தாவது மனைவிக்குக் கொடுப்பார்.

இப்படியாக, பிரமநாயகம் பிள்ளை சென்னையில் பத்து வருஷங்களையும் கழித்து விட்டார். ஒரு நாள் செல்லம்மாள் பேச்சின் போக்கில், அதாவது முந்திய நாள் இரவு, நெஞ்சுவலிக்கு ஒற்றட மிட்டுக் கொண்டிருக்கும் போது, "வருகிற பொங்கலுக்கு

வீட்டு அரிசி சாப்பிட வேணும். ஊருக்கு ஒருக்க போய்ப் போட்டு வரலாம்: வரும் போது நெல்லிக்காய் அடையும், ஒரு படி முருக்க வத்தலும் எடுத்துக்கிட்டு வரணும்'' என்று சொல்லி விட்டாள்.

''அதற்கு என்ன, பார்த்துக் கொள்ளுவோமே! இன்னும் புரட்டாசி களியலியே; அதற்கப்புறமல்லவா பொங்கலைப் பற்றி நினைக்கனும்'' என்றார். ''அது சரிதான்; இப்பமே சொன்னாத் தானே அவுக ஒரு வளி பண்ணுவாக' என்று அவகாச அவசியத்தை விளக்கினாள் செல்லம்மாள். 'அவுக' என்றது கடை முதலாளிப் பிள்ளையைத்தான். ''தீபாவளிக்கு ஒங்க பாடு கவலையில்லை; கடைலேயிருந்து வந்து விடும்; இந்த வருஷம் எனக்கு என்னவாம்'' என்று கேட்டாள்.

அதனால் மாலை ஒன்பது மணிக்கு முதலாளிப் பிள்ளையவர் களிடம் தயங்கித் தயங்கி தமது தேவையை எடுத்துச் சொல்லி, மாதிரி காட்டுவதற்காக மூன்று சேலைகளைப் பதிவு செய்து விட்டு. மேல் வேட்டியில் முடிந்தவராக வீடு நோக்கி நடந்தார்.

வீட்டின் முதல் கட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தார். செல்லம்மாள் புடவைத் துணியை விரித்து, கொடுங்கை வைத்து இடது புறமாக ஒருக்கணித்துக் கிடந்தாள். ஏறச் செருகியிருந்தது. சுவாசம் மெல்லிய இழைபோல் ஓடிக் கொண்டிருந்தது. கையும் காலும் ஜில்லிட்டிருந்தன. கற்பூரத் தைலத்தை உள்ளங்கையில் ஊற்றி, சூடு ஏறும்படித் தேய்த்து விட்டு, கமறலான அதன் நெடியை மூக்கருகில் பிடித்தார். கொதிக்கும் நீரினால் கையிலும் காலிலும் நெஞ்சிலுமாக ஒற்றடமிட்டார், சுக்குத் துண்டை விளக்கில் கரித்துப் புகையை மூக்கருகில் பிடித்தார்.

புரண்டு படுத்த செல்லம்மாள் வாய் பிதற்றத் தொடங்கி னாள். மீண்டும் அவளுக்கு நினைவு தப்பியபோது, செல்லம்மாள் செத்துப் போவாளோ என்ற பயம் பிரமநாயகம் பிள்ளையின் மனசில் லேசாக ஊசலாடியது. பொழுது விடிந்ததும், பல்லைத் தேய்த்துவிட்டு, ''அப்பாடா'' ''அம்மாடா'' என்ற அங்கலாய்ப்பு களுடன் செல்லம்மாள் மீண்டும் படுக்கையில் வந்து படுப்பதற்குள் உடல் தளர்ந்து விட்டது. சூடாகக் காப்பியை அவளுக்குக் கொடுத்துவிட்டு வெளியே சென்ற பிரமநாயகம் பிள்ளை பஞ்சத் தில் அடிபட்டவன் போன்ற சித்தவைத்திய சிகாமணி ஒருவனைத் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வந்தார்.

வைத்தியன் நாடியைப் பரீட்சித்தான். நாக்கை நீட்டச் சொல்லிக் கவனித்தான், மருந்தும் பக்குவமும் கூறினான். செல்லம்மாளுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. "பார்த்துப் பார்த்து, நல்ல வைத்தியனைத் தேடிப் புடிச்சாந்திய; பால் கஞ்சி சாப்பிடணுமாம். ஆய்! நான் என்ன காய்ச்சக்காரியா? ஒடம்பிலே பெலகீனம் இருக்கிறதைக் கண்டு பிடிக்க வைத்தியனா வரணும்? மனுசன்னா மயக்கம் வாறதில்லையா? வந்தா, வந்த வளியாப் போகுது" என்றாள்.

அப்போது கடையிலிருந்து வந்த ஆளைப் பார்த்ததும் "அடடே! மறந்தே போயிட்டேன். நேத்துப் பொடவை எடுத்தாந்து வச்சேன்; உனக்கு எது புடிச்சிருக்கு பாரு, வேண்டாததெக் குடுத்து, அனுப்பிடலாம்" என்றார் பிள்ளை. "எனக்கு இந்தப் பச்சைதான் புடிச்சிருக்கு; என்ன வெலையாம்?" என்றாள். "அதைப் பத்தி ஒனக்கென்ன? புடிச்சத எடுத்துக்கோ" என்று பச்சைப் புடவையை எடுத்து அலமாரியில் வைத்தார். "கண்டமானிக்குக் காசெச் செலவு பண்ணிபுட்டு, பின்னாலே கண்ணைத் தள்ளிக்கிட்டு நிக்காதிய. நான் இப்பவே சொல்லிப்புட்டேன்" என்று கண்டிப்பானாள் செல்லம்மாள்.

மறுநாள் செல்லம்மாளுக்கு உடம்பு மோசமாகிக் கொண்டே போயிற்று. ஒவ்வொரு சமயங்களில் மூக்கும் கையும் குரக்குவலித்து இழுத்து வாங்க ஆரம்பித்தன. செத்துப் போய் விடுவோமோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டது. "எனக்கு என்னவோ ஒரு மாதிரியாக வருது. வைத்தியனைப் பார்த்தால் தேவலை" என்றாள்.

டாக்டரைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும் போது பொழுது கருக்கி விட்டது. எவரோ ஓர் ஒன்றரையணா எல்.எம்.பி.யின் வீட்டு வாசலில் அவரது வருகைக்காகக் காத்துக் காத்து நின்றார். அவரும் வருவதாகக் காணவில்லை. கவலை- கற்பனையால் பல மடங்கு பெருகித் தோற்ற, நிலைமையும் விலாசமும் தெரிவித்து, உடனே வரும்படி கெஞ்சிக் கடுதாசி எழுதி வைத்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

வீட்டுக்குள்ளே நுழைந்ததும் செல்லம்மாள் முற்றத்தில் மயங்கிக் கிடந்ததைக் கண்டு கவலைப்பட்டார். சிறிது நேரத்தில் கைப்பெட்டியும் வறுமையுமாக டாக்டர் உள்ளே வந்தார். செல்லம்மாளுக்கு ஊசி குத்தினார். பிறகு பிள்ளையிடம், "இம்

மாதிரிக் கேஸ்கள் வீட்டில் வைத்திருப்பது சவுகரியக் குறைச்சல், ஐயா; ஆஸ்பத்திரிதான் நல்லது. இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. எதற்கும் நாளைக் காலை வந்து என்னிடம் எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்; பிறகு பார்ப்போம், இந்த ரிக்ஷாக்காரனுக்கு ஒரு நாலணாக் கொடுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறிக் கொண்டார். மடியிலிருந்த சில்லறை மனித மாட்டின் மடிக்கு மாறியது.

தூங்கிக் கொண்டிருந்த செல்லம்மாள் விழித்தவுடன், ''நான் செத்துத்தான் போவேன் போலிருக்கு. வீணாத் தடபுடல் பண்ணாதிய'' என்று சொல்லி விட்டு மீண்டும் கண்ணை மூடினாள். சற்று நேரம் பொறுத்து, ''அம்மையைப் பார்க்கணும் போல இருக்கு'' என்று கண்ணைத் திறக்காமலேயே சொன்னாள். ''நாளைக்கு உடனே வரும்படி தந்தி கொடுத்தாப் போகுது; அதுக்கென்ன பிரமாதம்'' என்ற பிள்ளைக்குப் பயம் தட்டியது. ''ஊம், துட்டை வீணாக்க வேண்டாம். கடுதாசி போட்டால் போதும். அவ எங்கெ வரப் போறா? நாளைக்காவது நீங்க கடைக்குப் போங்க'' என்றாள் அவள்.

காலையிலிருந்து அவளுக்கு முகப் பொலிவு மங்கி விட்டது. ஒரு விநாடி கழித்துப் பசிக்குப் பால் கேட்டாள். பாலை எடுத்து வர உள்ளே சென்ற பிரமநாயகம் பால் திறைந்து போயிருந்ததைக் கண்டு திடுக்கிட்டார். ''செல்லம்மா, பால் தெரைஞ்சு போச்சி; பானகம் தாரேன் குடிச்சுப்புட்டுத் தூங்கு'' என்றார். சிறுதம்ளரில் மெதுவாக வாயில் ஊற்றின போது, இரண்டு மடக்குக் குடித்து விட்டுத் தலையை அசைத்து விட்டாள். காலும் கையும் வெட்டி வாங்கின.

அதிர்ச்சி ஓய்ந்ததும் பிள்ளை பானகத்தைக் கொடுத்தார். அது இருபுறமும் வழிந்துவிட்டது. பாத்திரத்தை மெதுவாக வைத்து விட்டுத் தொட்டுப் பார்த்தார். உடல்தான் இருந்தது. அவரது நெற்றியின் வியர்வை அந்த உடலின், கண் இமையில் கொட்டியது. அரைக்கண் போட்டிருந்த அதை நன்றாக மூடினார். கைகளை நெஞ்சில் மடித்து வைத்தார். கீழே உட்கார வைத்து, நின்று தமது முழங்காலில் சாய்த்து வைத்துத் தவலைத் தண்ணீர் முழுவதையும் விட்டுக் குளிப்பாட்டினார்,

அவளுக்கு என வாங்கிய பச்சைப் புடவையை உடலில் சுற்றிக் கட்டினார். தலைமாட்டருகில் குத்து விளக்கை ஏற்றி வைத்துக்

கனலில் சாம்பிராணிப் பொடியைத் தூவினார். செல்லம்மாள் உடம்புக்குச் செய்ய வேண்டிய பவித்திரமான பணிவிடைகளைச் செய்து முடித்த பின், அவளையே பார்த்து நின்ற அவருக்கு மூச்சுத் திணறுவதுபோல் இருந்தது. வெளிவாசலுக்கு வந்து தெருவில் இறங்கி நின்றார்.

அப்போது முதலாளி கொடுத்த நோட்டுகளைக் கையில் நீட்டியபடி கடை வேலையாள் முனிசாமி, "அம்மாவுக்கு எப்படி இருக்கு" என்றான். "அம்மா தவறிப் போயிட்டாங்க. இந்தத் தந்தியைக் குடித்துப்புட்டு, முதலாளி ஐயா வீட்டிலே சொல்லு. வரும்போது அம்பட்டனுக்கும் சொல்லிவிட்டு வா" என்றார். நிதானமாகவே பேசினார்; குரலில் உளைச்சல் தொனிக்கவில்லை. இவ்வாறு செல்லம்மாள் கதை முடிகிறது.

இடைத்தர மக்களின் ஆசைகளையும் இயல்புகளையும் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளையும் இயலாமையையும், இக்கதையில் பிரமநாயகம் பிள்ளை செல்லம்மாள் கதை மாந்தர்கள் மூலம், உள்ளது உள்ளபடி விமர்சனம் செய்கிறார் புதுமைப்பித்தன். துன்பச்சாயல் படிந்த சோகரசம் தளும்பும் உயிரோடு கூடிய வாழ்க்கைச் சித்திரமாயுள்ள இக்கதை, புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படும் சிறப்பினையுடையது!

குப்பனின் கனவு

அன்றைக்கு நாள் முழுவதும் மழை சிணுசிணுத்துக் கொண்டிருந்தது. ரிக்‌ஷாக்காரன் குப்பன் வண்டியை மேற்கும் கிழக்குமாக இழுத்துச் சென்றதுதான் மிச்சம். ஒரு சத்தமாவது கிடைக்கவில்லை. இத்தனை நாளும் அவன் பல்லை இளித்துக் கொண்டு, "ஸார்! ஸார்!" என்று... சட்டை போட்ட பேர்வழிகளைக் கண்டால் அவனுக்கு எரிச்சலாக இருந்தது. திருட்டுப் பசங்கள்...... ஒரு பயலாவது ஏறக்கூடாதா? 'ஸார்!" என்று ஒருவரிடம் வண்டியைத் திருப்புகிறான். அவர். 'வேண்டாமப்பா!" என்று சொல்லிக் கொண்டே டிராமில் ஏறிக் கொண்டு விடுகிறார். இந்த மனிதனைக் கிழித்து விடலாமா என்ற கோபம்.

வண்டியைச் சென்ட்ரல் பக்கம் இழுத்துக் கொண்டு செல்லுகிறான். மனதிலே என்ன என்னவோ ஓடுகிறது: இப்பொழுது ஒரு மொந்தைக் கள்ளு அடித்தால், என்ன குஷியாக இருக்கும்! நாவில்

ஜலம் ஊறுகிறது... குப்பன் பெண்டாட்டி நாலு காசு பார்க்காமலா இருப்பாள். அவளும் கொஞ்சம் 'தொழில்' நடத்துகிறவள் தான். பிறகு... "எந்த........பத்தினியா இருக்கா?" அவனுக்கும் தெரியும். அவனுக்குத் தெரியும் என்று அவளுக்குத் தெரியும். அவள் நாலு காசு பார்த்திருந்தா...வீட்டுக் கவலை ஒயுஞ்சுது...இவனுக்கு அந்த நாலணா கிடைத்தால் கள்ளுக்கடைக்காச்சு......

இவ்வாறு புதுமைப்பித்தன் ஏழை ரிக்ஷாக்காரக் குப்பனின் குடும்பத்தை விமரிசனம் செய்வதைப் படிக்கும்போது நெஞ்சிலே நெருப்பைக் கொட்டுவது போலிருக்கிறது.

## 6. மனிதன், விதி, தெய்வம்

கோபாலபுரம் என்னும் கதையில் மனிதன், விதி, தெய்வம் பற்றி வேகமாக விமரிசிக்கிறார் புதுமைப்பித்தன். யாரோ எழுதிய கதை தொலைந்து போக அதற்கான ஓவியம் வீணாகாமல் இருக்க எழுதப் பெற்ற கதை இது என்பர்,

கோபாலபுரம் ஒரு சிற்றூர். வாழ்க்கையில் சுசப்பற்றவர்களுக்கும், தனிமை என்றும், காதல் என்றும், அழகு என்றும் அர்த்தமில்லாமல் பேசும் கவிஞர்களுக்கும் அவ்விடத்தில் மன நிம்மதி கிடைக்கும். ''வாழ்க்கை இன்பத்தின் சிகரத்தை அனுபவிக்க வேண்டுமானால் திருநெல்வேலி ஜில்லாவின் தாமிரவருணிக் கரையிலிருக்கும் சிற்றூர்களில் தங்க வேண்டும். அதிலும் முக்கியமாகக் கோபாலபுரத்தில் வாழ வேண்டும்.

பண்ணை ஐயரின் மகள் லஷ்மி, மாமரத்து மோட்டுக் கிளைக் குயில்கள் போல் குதூகலமாக இருந்தாள். எப்போதும் சிரித்த கண்கள், புன்னகை ஒளிர்ந்த அதரங்கள், சாயங்காலத்திலே சிவன் கோயில் கிணற்றில் ஜலம் எடுக்க வரும்போது தமிழ்ப் பெண்மையின் இலட்சியம்... குயில்களுக்குத் தன் மோகனக் குரல்—இன்பத்தால் மற்றவரைத் துன்பப்படுத்துவது தெரியுமா? அப்படித்தான் அவளுக்கும். அதனால் அவன் பாதிக்கப்பட்டான்.

பண்ணை ஐயரைப் போல சிநேகத்திற்கு நல்ல மனிதர் கிடையாது. அவன் உட்கார்ந்து எழுதும் அறையிலிருந்து பார்த்தால், லஷ்மி ஜலமெடுக்கப் போவது தெரியும். அவளது களங்கமற்ற சிரிப்பு உள்ளத்தை எவ்வாறு தீய்த்தது என்று யாருக்குத்

தெரியும்? அவன் மனிதன். அவனது உள்ளத்தின் கொதிப்பை லக்ஷ்மியிடம் திறந்து காட்டமுடியுமா?

அவள் அவனது இலட்சியம். வேறு ஒருவனைக் கலியாணம் செய்து கொண்டு அவனைக் காதலித்திருப்பவளைக் காதலிக்க அவனுக்கு உரிமை யுண்டா? உணர்ச்சி உரிமையைக் கவனிக்கா தல்லவா? அவனது காதல் பாபம் என்று அவனுக்கும் தெரியும், அவளுக்கு அவன் உள்ளத்து எரிமலையின் கொந்தளிப்பும் தெரியாது. கோபாலபுர மோகத்தில் அவன் எழுதிய நாவலில் லக்ஷ்மியும் இடம் பெற்றாள்.

அன்று தீபாவளி. மத்தியானம் அவன் பண்ணையார் வீட்டிற் குச் சென்றபோது, பண்ணையார் நாற்காலியில் உட்கார்ந்திருந் தார். எதிரில் ஒரு சோபாவில் லக்ஷ்மியும் அவளுடைய கணவனும் உட்கார்ந்திருந்தார்கள். மூவருக்கும் எதிரில் அவளுடைய தம்பி சுந்து உட்கார்ந்திருந்தான். அப்போது பண்ணையார், அவனுடைய மேஜையில் இருந்ததாகத் தம்பி சுந்து கொடுத்த கடிதத்தைக் காட்டி அதை எழுதியது அவன்தானா என்று கேட்டார். அதற்கு அவன், கடிதம் தான் எழுதியதுதான் என்றும், ஆனால் தன்னு டைய நாவலின் ஒரு பகுதியாகும் அது என்றும், நாவலில் ஒரு பாத்திரம் லக்ஷ்மி என்றும் கூறினான்.

ஆனால் பண்ணையாருக்கும் அவருடைய மாப்பிள்ளைக்கும் லக்ஷ்மியின் மீது சந்தேகம். அவன் முன்பே நாக்கில் நரம்பில்லாமல் பேசினார்கள். அது கேட்டு அவன் மனம் அவளை நோக்கித் தகித்தது. மறுநாள் லக்ஷ்மியின் பிணம் கிணற்றில் மிதந்தது— அவளது அசட்டுத்தனம். பிறகு அவன் அங்கிருக்க முடியுமா? ஊரை விட்டே சென்று விட்டான்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு அவன் மீண்டும் கோபாலபுரம் வந்தான். லக்ஷ்மியினுடைய எண்ணம், மனம், எல்லாம் உடலைப் போல் மறைந்தன. அவன் மட்டும் பேய் போல் அலைந்து கொண் டிருந்தான். ஏன்? அதுதான் விதி என்று சமாதானப்பட்டுக் கொள்ள வேண்டிய விஷயமாம். மனிதன், விதி, தெய்வம்; தள்ளு- வெறும் குப்பை, புழு, கனவுகள்' என்று கதையை முடிக்கும் புதுமைப்பித்தன் அங்கங்கே தம்முடைய விரிவான—வேகமான— விமரிசனத்தை வைப்பதைக் காணலாம்.

இந்தக் கதையின் தொடக்கத்தில், கதையைக் கூறும் அவனுடைய பார்வையில், மனிதனுக்கும் கடவுளுக்கும் இருக்கும் சாத்திர, விஞ்ஞானக் கருத்துகளை விமர்சனம் செய்கிறார். ''மனிதன் தெய்வ சிருஷ்டியின் சிகரம் என்பது சாஸ்திரக்காரரும் விஞ்ஞானிகளும் ஏகோபித்துப் பாடும் முடிவு. நான் கவனித்தவரை, அந்த மாதிரிக் கேவலமான சிருஷ்டியைப் படைத்த பிறகு, கடவுளுக்கு உணர்ச்சி ஏதாவது இருந்தால், வெட்கத்தினால் தூக்குப்போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் கூறுவேன்.

மனிதனாவது! கடவுளாவது! சீச்சீ! சுத்த அபத்தம். இதில் தெய்வம் தன்னை வழிபட வேண்டும் என்று மனிதனை எதிர் பார்க்கிறதே, அதைப் போல் முட்டாள்தனம் வேறு உண்டா? நான் மட்டும் கடவுளாக இருந்தால், கட்டாயம் இந்தச் சிருஷ்டித் தொழிலை நெடுங்காலத்திற்கு முன்பே விட்டுவிட்டுத் தூக்குப் போட்டுக் கொண்டிருப்பேன். ''என்ன மனிதன், சீ!''

அடுத்து, லஷ்மியை அறிமுகம் செய்யும் போது அவன், ''சீச்சீ, அவளும் நாற்ற மெடுக்கும் தசை கூட்டந்தானே! பெண்மையாவது லட்சியமாவது;'' என்று கூறுகிறான். அவனே பண்ணையாரைப் பற்றிப் பேசுகிறான். ''அவருடன் பேசிக் கொண்டிருந்தால் என்ன சுவாரஸ்யம்! ஆனால், ஒவ்வொரு மனிதனிலும் ஒரு பேய் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பது சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது தெரியுமா? எவனொருவனைக் கீறினாலும் இரத்தந்தான் வரும். உள்ளிருக்கும் தீமையைக் காண்பிக்கும் சிவப்பு வெளிச்சம் மாதிரி!

மனிதன், அதற்கப்புறம் அவன் சுவாராஸ்யமாகப் புளுகும் விதி! அதைப் பற்றி அதிகமாகக் கூற வேண்டுமானால், பயித்தியக் கார ஆஸ்பத்திரிக்குச் சரியான வேதாந்தம். அதிலிருந்துதான் அம்மாதிரியான அசட்டுத்தனம் வர முடியும். மனிதனுக்கும் தெய்வத்திற்கும் என்ன சம்பந்தம்? விதியாம் விதி!

ஏற்கெனவே திருமணமான லஷ்மியின் மீது அவனது உள்ளம் சென்றதைக் குறிப்பிடும் போது படுகேவலமாக மனிதனைப் புழு என்று சாடுகிறார். ''...மனிதனும் குரங்குதான். எதை எடுத் தாலும் பிய்த்து முகரத்தான் தெரியும்...காதல் பாவம்...பாவந் தான் மனிதனது உடலைப் புனிதமாக்குகிறது. மனிதனைப்போல அசட்டுத்தனமான பிரகிருதிகள் கிடையா. மனிதன் புழு!''

## நினைவுப் பாதை

இலக்கியச் சுவைஞர்களால் எளிதில் மறக்க முடியாத சிறுகதைகளில் ஒன்று 'நினைவுப் பாதை' யாகும். தன் அருமை மனைவி இறந்துபோகத் தனித்திருக்கிற ஒரு முதிய கணவனின் நினைவோட்டத்தை இந்தக் கதை விவரிக்கிறது. கதை முழுவதும் நனவோட்டத்தில் அமையவில்லை.

துக்கம் நிறைந்த வீட்டுச் சூழ்நிலை, இங்கே வந்து கூடியிருக்கும் உற்றார் உறவினர் ஊரார் ஆகியோரின் மனநிலை, ஆசைகள், நோக்கங்கள், எண்ணங்கள் காலவுணர்வு முதலியவற்றையும் அவைகளுக்கிடையே தனியனாகிவிட்ட முதியவரின் நினைவுகளையும் புதுமைப்பித்தன் படிப்போர் உள்ளத்தில் பதியுமாறு தெளிவாக வருணித்துள்ளார்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேல், வாழ்க்கையின் மேடு பள்ளங்களையெல்லாம் ஒன்றாவே கடந்து வந்த தம்பதிகள் மேலச்செவல் வைரவன் பிள்ளை என்ற பாலசுப்பிரமணிய பிள்ளையும் அவர் மனைவி வள்ளியம்மையாச்சியும் ஆவர். போன சனிக்கிழமை பழக்கடையில் கால் வழுக்கி விழுந்த ஆச்சிக்கு இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி. அதில் படுத்தவள் எழுந்திருக்கவில்லை. நேற்று இறந்து போனாள்.

இன்று காடேற்று (இரண்டாம் நாள் கிரியை). இன்னும் விடியவில்லை. 'துஷ்டிக்காக' (இழவுக்காக) அழுகிறவர்கள் கூட எழுந்திருக்கவில்லை... அன்று அவ்வீட்டில் தூங்காதவர் வைரவன் பிள்ளை ஒருவர்தான். வெளிச்குறட்டில் முழங்காலைக் கட்டியபடி, மேலே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். ஏறக்குறைய இந்த ஐம்பதுவருஷக் காலத்திலும் அவர் வள்ளியம்மை ஆச்சியைப் பற்றி அவ்வளவாக—முதல் பிரசவத்தில் தவிர—பிரமாதமாக நினைத்தது கிடையாது...அப்பொழுது அவர் மனக்கண்முன் வள்ளியம்மை யாச்சி புதுப்பெண் கோலத்தில் தம் கைப்பிடித்து வந்த காட்சி நின்று தோன்றியது. ஆம். தன் மனைவியோடு வாழ்ந்த காலத்தை அசைபோட்டுக் கொண்டிருப்பார்.

பக்கத்து அறையிலிருந்து பேத்தியைப் பார்த்துச்சொல்லும் அவருடைய முதல் மகளின் குரல் கேட்கும். "ஏட்டி, அஞ்சு கொத்துச் சவடி (சங்கிலி) உனக்குன்னு தானேட்டி சொன்னா, பேச்சியம்மை கேக்கதுக்கு மின்னே நீ போய் உங்க தாத்தாக் கிட்டே கேட்டு வாங்கிக்க!"

இதைக் கேட்டதும் முதல் மகளைப் பற்றிய நினைவு வைரவன் பிள்ளையின் மனக்கண்முன் சலனப் படமாக விரிந்தது. ''பாப்பாத்தி (முதல் மகள்) எப்போதும் அப்படித்தான்....ஆமாம், அவள் பிறக்கும் போது தானே கடை முறிந்து நாலு பக்கமும் பண முடை... கஷ்டத்தில் வளர்ந்த பெண். காசில் இருந்த கருத்து' அளவுக்கு மீறி வளர்ந்து விட்டது... அவள் மகளுக்கென்று சொல்லி யிருந்தால், அவள் மகளுக்குத்தானே. அதற்குள் எதற்கு இந்தச் சின்ன புத்தி''?

பொழுது விடிகிற நேரத்தில் அவரது இரண்டாவது மகளும் மாப்பிள்ளையும் வந்தனர். வந்த மாப்பிள்ளை தலைகுனிந்த வண்ணம், ''அத்தைக்கு என்ன செஞ்சது? லெட்டர்கூட ஒண்ணை யும் குறிப்பிடலியே'' என்று கேட்டார். ''ஆச்சிக்கு என்ன? கெடப்பிலே கெடந்தாளா என்ன?... அண்ணைக்கு என்ன, கால் கொஞ்சம் தவறிச்சு, நல்ல ஊமையடி.... இப்படி வரும்னு யார் நினைச்சா... வயசாச்சில்லையா? எல்லாம் தெய்வ சங்கல்பம். அதுக்கு நாம் என்ன பண்ண முடியும்?... ஆச்சி திரேகம் கல்லுன்னா கல்லுத்தான். எண்ணைக்காவது ஒருநா மண்டையிடின்னு தலையெச் சாச்சிருக்காளா?... அந்தப் பெரிய டாக்டரு இருக் கானே அவன் எம்டன்தான்!— அவன் அவ்வளவுதான்னுட்டான்'' என்று வாசாமகோசரமாக விஷயத்தைச் சொன்னார் பக்கத்து வீட்டுக்காரர்.

''போன மாசமேதான் சுப்புபிள்ளை அண்ணாச்சி சொல்லலே, ஆச்சிக்கு ஒரு கண்டமிருக்குன்னு! நானும் அண்ணைக்கு விளை (விளையுமிடம்)யைப் பார்த்துவிட்டு வரப்போ பேசிக்கிட்டுதானே வந்தேன்... எல்லாம் வெள்ளிக்கிழமை களிஞ்சாத்தானின்னார்.... காலன் வாரதுக்கு கணக்கின்னும், நேரமின்னும் உண்டுமா? என்று சொன்னார் சுந்தரம் பிள்ளை.

நான்கு வயதுப் பேரன் வைரவன்பிள்ளையின் பக்கம் ஒண்டிக் கொண்டு அவரை அண்ணாந்து ஏறிட்டுப் பார்த்த வண்ணம் ''நாந்தான் ஆச்சிக்கு நெய்ப் பந்தம் பிடிச்சேனே?'' என்று தன் திறமையை விளக்கிக் கொண்டான். ''ஏலே, ஒங்க ஆச்சியே எங்கடா?'' என்று கேட்ட சுந்தரம் பிள்ளையிடம் அந்தச் சிறுவன், ''செத்துப் போயிட்டா!'' என்று அர்த்தமில்லாமல் சொன்னான். ''அது பசலெ, அதுக்கென்ன தெரியும்?'' என்றார் வைரவன் பிள்ளை.

இரண்டாம் நாள் கிரியைக்காக எல்லாரும் எழுந்து நடந்தனர். ''வைரவன் பிள்ளை கைத்தடியை ஊன்றிக்கொண்டு தள்ளாடி நடந்தார். இவருக்கு முன்னால், தலை முண்டிதமான அவருடைய ஒரே மகன் சொல்லுகிறான்...மனிசிலோ, நடையிலோ கவலை தள்ளாடவில்லை. வைரவன்பிள்ளை மனக்கண்முன், மணக் கோலத்தில் பதினாறு வயதில் பார்த்த வள்ளியம்மையாச்சியின் உருவம் நின்றது... இனிப் பார்க்கப் போவதை வைரவன் பிள்ளை மனது நினைக்க மறுத்தது...',

இவ்வாறு முடியும் இந்தக் கதையில், தாய் இறந்து கிடக்கத் தந்தை மட்டுமே தன் மனைவியோடு வாழ்ந்த காலத்தை அசை போட்ட வண்ணம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

முதல் மகளுக்கோ, இரண்டாம் மாப்பிள்ளைக்கோ, நான்கு வயதுப் பேரனுக்கோ, ஒரே மகனுக்கோ, அந்தக் கவலை இல்லை. பக்கத்து வூட்டுக்காரருக்கும் ஊராருக்கும் இல்லை என்று கூறுவதன் மூலம் மனிதனையும் வாழ்க்கையில் அமைந்துள்ள மனித உறவுகளையும் எல்லாவற்றையும் குறித்த தெளிவான உண்மையை உண்டாக்கும் — உணர்த்தும் —விதியைப் பற்றிய தன்னுடைய விமரிசனத்தைத் தெளிவுபடுத்துகிறார், புதுமைப்பித்தன்.

## 7. கற்பு

'அகல்யை' என்னும் கதையின் புராணக் கதையை விமரிசிப்ப தன் வழி கற்பு பற்றிய புதிய கருத்தை—உண்மையை—வெளியிடு கின்றார் புதுமைப்பித்தன்.

வேத காலம். சிந்து நதி;தீரம். அங்கே கௌதமருடைய வாசஸ் தலம், சற்று காட்டின் உள்ளே தள்ளி, சிந்துநதியின் கரைக்கும் குடிசைக்கும் கூப்பிடு தூரம். சமூகத்தை விட்டு விலகி அவர் தமது பத்தினியுடன் இங்கு வசித்து வருகிறார்.

முப்பது வயதான அவர் உடலில் எல்லாவற்றிலும் இயற்கை யின் கனிவு பொங்கியது. மிருக அழகன்று—ஆளை மயக்காது. வசீகரிக்கும், அவருடைய கண்களில், உதடுகளில் ஒரு தெய்வீக ஒளி—தேஜஸ்—உள்ளத்தின் சாந்தியை எடுத்துக் காட்டிற்று.

அவர் மனைவி—அவள்தான் அகல்யை. அவர் ஆணுக்கு இலட்சியம் என்றால், இவள் பெண் குலத்திற்கு வெற்றி. மருண்ட

பார்வையை உடைய அவளுடைய கண்களில் அவரைக் காணுந் தோறும் காதல் பொங்கும். அவளது ஒவ்வொரு செயலும் அவரது இன்பத்திற்காகவே; அதிலே அவளுக்கு ஓர் இன்பம். அவர் அவளுடைய இலட்சியம். அவருடைய காதலின் உயர்வை அவள் அறிந்திருந்தாள். அவள் கற்புள்ளவளாக இருந்ததில் ஆச்சரிய மில்லை.

ஒரு நாள் சாயங்காலம் அகல்யை குடத்தை இடுப்பில் ஏந்திய வண்ணம் குளிப்பதற்காகக் கௌதமரை அழைக்க வருகிறாள். கிரந்த வாசிப்பில் ஈடுபட்டிருந்த கௌதமர், "என்ன அகல்யா, நேரமாகி விட்டதா? குளிக்கவா? நான் கொஞ்சம் கழித்து வருகிறேன். கிரந்தத்தில் கொஞ்சந்தான் பாக்கியிருக்கிறது," என்றார்.

குடத்தைக் கீழே வைத்துவிட்டு அவர் தலையை மார்புடன் சேர்த்து அணைக்கிறாள்; நெற்றியில் அவள் அதரங்கள் படிந்து நின்றன. பிறகு 'நான் வருகிறேன்' என்று கூறிவிட்டு நதிக்குச் செல்லுகிறாள். உடைகளை யெல்லாம் களைந்து பாறையின் மீது வைத்து விட்டு நீரில் குதிக்கிறாள். நீராடுவதில் லயித்துப் போய் விட்டாள்.

அப்போது எதிர்க்கரையில் வந்த இந்திரன் அவளை வைத்த கண் மாறாமல் பார்த்தான். அகல்யையின் கட்டழகு அவனைக் கல்லாகச் சமைத்தது. அவளை நெருங்குவதற்காக ஒரு பாறையில் இறங்கினான். இந்தச் சப்தம் கேட்டுத் திரும்பிய அகல்யை அப்படியே வெறித்து ஒரு கோபப் பார்வை பார்க்கிறாள். உடைகளைச் சீக்கிரம் அணிந்து கொண்டு குடத்தில் தண்ணீருடன் வேகமாகக் கரையேறிச் சென்று விடுகிறாள்.

எதிரே வந்த கௌதமரைப் பார்த்ததும், குடம் நழுவிக் கீழே விழ அவர் மார்பில் விழுந்த அகல்யை தேம்பிக் கொண்டே நடந்ததைத் தெரிவிக்கிறாள். அவளது உயர்ந்த காதல், அதன் முடிவாக அதன் சிகரமாக இருக்கும் அவள் கற்பு, அவருக்கு ஒரு புதிய உண்மையைத் தெரிவிக்கிறது. அதுதான் மற்ற ஆண்களிடம் மனத்திலே ஏற்படும் அருவருப்பு.

"அவள் யார், தான் செய்யப் புகுந்தது என்ன" என்று கவலைப் படாமல் இந்திரன் ஒரே தடவையில் தனது எண்ணம் ஈடேறச் சமயம் எதிர்பார்த்திருந்தான். ஏதோ ஒரு பெருங் குற்றத்தை

மனத்திற்கு ஒவ்வாத குற்றத்தைச் செய்தது போல் அகல்யையின் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கௌதமருடைய அன்பும் காதலும் அவளைத் தேற்றின. நீண்ட உரையாடலுக்குப் பிறகு அன்று அவர்கள் தூங்க நெடுநேரம் சென்றது.

அன்று நடுநிசி. சந்திரனற்ற வானம். வெள்ளி மட்டும் கொஞ்சம் பிரகாசமாக விடியற்காலம் என்று நினைக்கும்படி மங்கிய வெளிச்சத்தைத் தருகிறது. இந்திரன் கோழி மாதிரிக் கூவியதைக் கேட்டதும், குடிசையினுள் அகல்யாவைத் தழுவியும் தழுவாமலும் உறங்கிக் கொண்டிருந்த கௌதமர் காலைக் கடனைக் கழிக்க எழுந்து சிந்துநதிக் கரைக்குச் செல்கிறார்.

அன்று நெடுநேரமாகத் தூங்காததனால் அகல்யைக்கு அயர்ந்த தூக்கம். பாதிக் கனவு. பாதித்தூக்கம். கணவனுடன் கொஞ்சித் தழுவி அவருடனேயே இருப்பது போல் கனவு. இந்திரன் பூனை போல மெதுவாக உள்ளே வந்து, ஆடைகள் சற்று நெகிழ்ந்த நிலையில் உறங்கும் அபலையைப் பார்க்கிறான். ஒரு மிருகத்தின் வேட்கை அன்று பூர்த்தியாயிற்று.

பாதிக் கனவு—உலகத்திலிருந்த அகல்யை கண் விழிக்காமல் கணவர் என்று நினைத்துத் தழுவுகிறாள். ஓரளவு இயற்கையின் வெற்றி. கணவரை முத்தமிடக் கண்களை விழித்த அகல்யை அந்தச் சண்டாளனைக் கண்டு ஒன்றும் புரியாமல் நடுங்குகிறாள். தடியால் மண்டையில் அடித்து அவனை உதறித் தள்ளிவிட்டு, ஒருபுறம் கிடந்து துடிக்கிறாள். இந்திரனுக்குச் சுய அறிவு வர, தன் மிருகத்தனமான கொடுமையை உணர்கிறான். அவன் உள்ளமே வெடித்து விடும் போல் இருக்கிறது.

நதிக்கரைக்குச் சென்ற கௌதமர் இன்னும் விடியாததைக் கண்டு, ஏதோ சூது நடந்திருக்கிறது என்று திரும்பி வந்தார். குடிசைக்குள் நுழைந்து அகல்யையின் கோலத்தைக் கண்டதும் காரியம் மிஞ்சி விட்டது என்று அறிந்தார். தீயில்பட்ட புழுப்போல் துடித்த தன் மனைவியை வாரி எடுக்கிறார்.

குற்றத்தின் உருவாக நிற்கும் இந்திரனைக் கேட்கிறார். ''அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக் கூடாதா?'' அகல்யையின் தலையைத் தடவிக் கொடுத்த வாறு கேட்கிறார். ''கண்ணே அகல்யா! அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய்ச் சமைந்து விட்டது?''

அவர் மனத்தில் ஏற்பட்ட சாந்தியினால் ஒரு புதிய உண்மை தோன்றியது. "உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கிவிடுகிறது. மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?". சிறிது மௌனத்திற்குப் பிறகு "இந்திரா! போய் வா!" என்று கூறினார் கௌதமர். அகல்யையின் உள்ளத்தில் நிகழ்ந்த ஊழியின் இறுதிக்கூத்து, கணவனின் சாந்திக்குப் பகைப்புலமாகி நின்றது.

புராணத்தில் வரும் அகல்யை பெற்ற சாபத்திற்கு அவசியமில்லை, காரணம் அகல்யையின் மீது ஒரு தவறும் இல்லை என்பதை மிகத் துணிவுடன் இவ்வாறு விமரிசிக்கிறார் புதுமைப் பித்தன். 'இதிகாசக் கதைகளிலிருந்து... அகல்யை — தொடக்க காலக்கதை—இதில் கௌதமர் இந்திரனை மன்னித்து அனுப்பி விடுகிறார். மனித இயல்புகளுக்கு உட்பட்டே கதை இங்குச் செல்கிறது' என்கிறார் இரா. தண்டாயுதம்.

**சாப விமோசனம்**

இக்கதை, அகலிகையின் வாழ்வும் மனமும் சாப விமோசனத் திற்குப் பிறகு எவ்வாறு இருந்தது என்று விளக்குகிறது. "இராமாயண பரிசயமுள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்த வில்லை" என்னும் குறிப்போடு இந்தக் கதையைத் தொடங்கு கிறார் புதுமைப்பித்தன்.

தளர்ந்து தொடிந்து போன தசைக்கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ள வைக்கும் மோகன வடிவத்தோடு காட்டுச் சாலையில் அகலிகையின் சிலை. ஆனால் அந்தப் பதுமையின் கண்களிலே ஒரு சோகம்—சொல்லில் அடைபடாத சோகம்—மிதந்தது. பார்க் கின்றவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. ஆம், தன் நினைவற்ற தபஸ்வியாக—கல்லாக—கிடக்கிறாள் அகலிகை.

சற்றுத் தூரத்திலே உள்ள கறையான் புற்றில் நிஷ்டையில் ஆழ்ந்து தன் நினைவகற்றித் தன் சோகத்தை மறந்து தவம் கிடக் கிறான் கௌதமன். இன்னும் சற்றுத் தூரத்திலே இவர்களுடைய குடிசையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்றோடு கலந்து விட்டது. சுவரும் கரைய மிஞ்சியது திரடுதான். தூரத்திலே கங்கை நதியின் சலசலப்பு. இப்படியாக ஊழி பல கடந்தன தம்பதி

களுக்கு! ஒரு நாள்......ஆண் சிங்கம் போல, மிடுக்கு நடை நடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச்சியை மனசில் 'அசை போட்டுக் கொண்டு' நடந்து வருகிறான் விசுவாமித்திரன். முனிவரைத் தொடர்ந்து மாரீசன், சுவாகு, தாடகை போன்ற அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்து விட்டு, அதன் பொறுப்புத் தெரியாமல், அவதார சிசுக்களான ராமலக்ஷ்மணர்கள் ஓடிப் பிடித்து வருகிறார்கள்.

புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது. எப்போதோ ஒரு நாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன போன இடத்தில் நின்று இறுகிப் போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது. கண்களை மூடித் திறக்கிறாள், அகலிகை. பிரக்ஞை தெரிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்! தனக்கு மறுபடியும் புதிய வாழ்வைக் கொடுக்க வந்த அந்தக் குழந்தை இராமன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். இராமன் ஆச்சரியத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

"இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை, மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக் கொண்டவள். கோதமனின் மனைவி. அதோ நிற்கும் புற்றில் நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான்". இவ்வளவையும் ராமனிடம் சொல்லுகிறார் விசுவாமித்திரர்.

நிஷ்டையிலிருந்து எழுந்த கோதமன், மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போலத் தயங்கித் தயங்கி வருகிறான். சாபவிமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்று அகலிகையின் மனமும் மிரளுகிறது. ராமனுடைய கல்வி, தர்மக்கண் கொண்டு பார்த்தது. மனசுக்கும் காரண சக்தியின் நிதானத்திற்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? "அம்மா" என்று சொல்லி, அகலிகையின் காலில் விழுந்து வணங்குகிறான் ராமன்,

இரண்டு ரிஷிகளும் சிறுவனுடைய நினைவுக் கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூகலிக்கிறார்கள். எவ்வளவு லேசான, அன்பு மயமான, துணிச்சலான உண்மை! "நெஞ்சால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்ளுவதுதான் பொருந்தும்"

என்றான் விசுவாமித்திரன் மெதுவாக. கோதமனுக்கு அவளிடம் முன்போல் மனக் களங்கமின்றிப் பேச நாவெழவில்லை. அவளை அன்று விலைமகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்து விட்டது போல இருக்கிறது.

''என்ன வேண்டும்'' என்று கேட்ட கோதமனிடம், ''பசிக்கிறது'' என்றாள் அகலிகை, குழந்தை போல. அருகிலிருந்த பழனத்தில் சென்று கனிவர்க்கங்களைக் கோதமன் சேகரித்து வர அகலிகை பசி தீர்ந்தாள். ஆனால் இருவரும் இருவிதமான கோட்டைகளுக்குள் இருந்து தவித்தார்கள். கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை. அகலிகைக்குத் தான் ஏற்றவனா என்பதே கோதமனின் கவலை.

II

அகலிகையின் விருப்பப்படி, ஆசைப்படி, அயோத்தி வெளி, மதில்களுக்குச் சற்று ஒதுங்கி, மனுஷ பரம்பரையின் நெடிபடாத தூரத்தில், சரயூ நதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக் கொண்டு தர்ம விசாரம் செய்து கொண்டிருந்தான், கோதமன். இப்பொழுது அகலிகை மீது அவனுக்கு பரிபூரண நம்பிக்கை. இந்திரன் மடிமீது அவள் கிடந்தால் கூட அவன் சந்தேகிக்க மாட்டான்.

அகலிகை அவனை உள்ளத்தினால் அளக்க முடியாத ஓர் அன்பால் தழைக்க வைத்தாள், ஆனால் அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக் கூட இடங்கொடாத படி நடக்க விரும்பினாள். தன்னைச் சூழ நிற்பவர்கள் எல்லாருமே இந்திரர்களாகத் தென் பட்டார்கள், எதையும் ஆயிரம் முறை எண்ணிப் பார்த்த பிறகே சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக்கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று. மரீசி, ததீசி, மதங்கர் முதலான அதிதிகளை உபசரித்த போதும் அவள் உடம்பு குன்றிக் கிடந்தது; மனசும் கூம்பிக் கிடந்தது. கோதமனுடைய சித்தாந்தத்தில் புதிய ஒளி ஏற்பட்டது. தர்மத்தின் வேலிகள்யாவும் மனமறிந்து செல்பவர்களுக்கே, சுயப்பிரக்ஞை இல்லாமல் வழு ஏற்பட்டு, அதனால் மனுஷவித்து முழுவதுமே நசித்து விடும் என்றாலும், அது பாபம் அல்ல; மனலயிப்பும், சுயப்பிரக்ஞையுடன் கூடிய செயலீடுபாடுமே கறைப்படுத்துபவை.

அவனுடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலவி னாள். தனக்கே அருகதை இல்லை. சாபத் தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசுபடுத்தி விட்டது என்று கருதினான். சீதையும் ராமனும் உல்லாசமாகச் சமயா சமயங்களில் அந்தத் திசையில் ரதமூர்ந்து வருவார்கள். அவதாரக் குழந்தை ராமன், கோதமனின் லட்சிய வாலிபனாகத் தோன்றினான். அகலிகையின் மனபாரத்தை நீக்க வந்த மாடப் புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும், தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவன போல் இருந்தன அகலிகைக்கு.

சரயூ நதிக்கரையில் ஒதுங்கி இரு தனி வேறு உலகங்களில் வாழும் ஜீவன்களாகிய கோதமன், அகலிகை ஆகியோரிடத்தில் பழைய கலகலப்பைத் தழைக்க வைத்து வந்தார்கள் ராமனும் சீதையும். பட்டாபிஷேக வைபவத்தின் போது அயோத்திக்கு வருவதாக ஒப்புக் கொண்டிருந்த அகலிகை, அரண்மனையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து துடித்தாள். ராமன் காட்டுக்குப் போனான். அவன் தம்பியும் தொடர்ந்தான்; சீதையும் போய் விட்டாள். முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ''எனக்கு இங்கு இருப்புக் கொள்ள வில்லை. மிதிலைக்குப் போய் விடுவோமா'' என்று கூறிய அகலிகையைச் ''சரி, புறப்படு'' என்றார் கோதமர். பளு குடி யேறிய மனசுடன் இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

III

கங்கைக் கரையில் சென்று கொண்டிருந்த இருவரையும், ''அப்பா......அம்மா'' என்று காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர். அகலிகை அவனை மனசால் தழுவினாள்; குழந்தை சதானந்தன் எவ்வளவு அன்னியனாகி விட்டான். தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு ரிஷி மாதிரி. சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான். கோதமர், சதானந்தருடன் ஜனகனுடைய பட்டி மண்டபத்துக்குள் நுழைந்தவுடன், அவரை அழைத்து உபசாரங்கள் செய்வித்தபின் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான் ஜனகன். ஜனகனுடன் சிறிது நேரம் தத்துவ உரையாடிய பின் திரும்பிய கோதமர் மறுநாள் முதல் ஜனகன் மண்டபத்துக்குப் போகவில்லை. புத்தியிலே பல புதிர்கள் ஓங்கி நின்றன,

கங்கையாற்றில் நீராடிவிட்டுக் குனிந்த நோக்குடன் திரும்பிக் கொண்டிருந்த அகலிகைக்கு எதிரே ரிஷி பத்தினிகள் நீராடச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அகலிகையைக் கண்டதும் பறைச்சியைக் கண்டது போல ஓடி விலகி, அவளை விறைத்துப் பார்த்து விட்டுச் சென்றார்கள். "அவள்தான் அகலிகை" என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக் கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிகமாகச் சுட்டன அவ்வார்த்தைகள். அவள் மனசு சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. "தெய்வமே! சாப விமோசனம் கண்டாலும் பாப விமோசனம் கிடையாதா? என்று தேம்பினாள். 'மகனும் அன்னியமாகி விட்டான்; அன்னியரும் விரோதிகளாகி விட்டனர்; இங்கென்ன இருப்பு?' அகலிகை உள்ளத்தே எழுந்த பல்லவி. 'ராமனும் சீதையும் அகத்தியர் விருப்பப்படி பஞ்சவடியில் இருப்பதாகத் தெரிகிறது' என்று சதானந்தன் கூறக் கேட்ட கோதமரும் அகலிகையும் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார்கள்.

IV

இருவரும் சரயூ கரையோரமாக அயோத்தியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். 'இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பி விடுவான்; இனிமேலாவது வாழ்வின் உதய காலம் பிறக்கும்' என்ற ஆசையுடன், பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

ஒரு நாள் அதிகாலையில் நீராடச் சென்ற அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள் விதவை கைகேயி. "தர்ம ஆவேசத்திலே பரதன் தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்து விட்டான்" என்றாள் கைகேயி. மறுநாள் அகலிகையைச் சந்தித்த பொழுது "ராமனைப் பற்றி ஒரு புலனும் தெரியவில்லை. பரதன் பிராயோபவேசம் செய்யப் போகிறானாம். அக்கினி குண்டம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறான்" என்றாள் கைகேயி.

பதினான்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச் சுழிப்பு. அயோத்திக்கு ஏற்பட்ட சாபத்தீ நீங்கவில்லையா? தனது காலின் பாபச் சாயை என்றே அவள் சந்தேகித்தாள். "வசிட்டரைக் கொண்டாவது அவனைத் தடை செய்யக் கூடாதோ" என்றாள் அகலிகை.

"பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான். வசிட்டனுக்குக் கட்டுப்படமாட்டான்" என்றாள் கைகேயி. "மனிதருக்குக் கட்டுப்

படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு'' என்று கொதித்தாள் அகலிகை. கோதமன் மூலம் செய்த பேச்சில் பலன் கூடவில்லை. அனுமன் வர, பரதன் வளர்த்த நெருப்பு அவிந்தது. தர்மம் தலை சுற்றியாடியது. வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் சீதையும் ராமனும் பரிவாரம் இன்றி அகலிகையைப் பார்க்க வந்தார்கள்.

ராமனை அழைத்துக்கொண்டு கோதமன் வெளியே உலாவச் செல்ல, அகலிகை சீதையைப் பரிவுடன் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. அக்னிப் பிரவேசத்தைச் சொன்னதும், அகலிகை துடித்து விட்டாள்.

''அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?'' என்று கேட்டாள்.

''அவர் கேட்டார்; நான் செய்தேன்'' என்றாள் சீதை, அமைதியாக.

''அவன் கேட்டானா?'' என்று கத்தினாள் அகலிகை அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி. அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா? நீண்ட அமைதிக்குப் பிறகு, ''உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?'' என்று கூறி மெதுவாகச் சிரித்தாள் சீதை. ''உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?' என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது. ''நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா, உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் எது?'' என்றாள் அகலிகை.

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தபோது, அகலிகை வரவில்லை. இராமனைப் பார்க்கவும் அகலிகை வெளி வரவில்லை. ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவளைச் சுட்டது. அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்க வேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.

கோதமன் அகலிகையைத் தழுவும்போது, அவள் மனம் லயிக்க வில்லை. கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப் பட்டது அவளுக்கு. கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்! குதிகாலில் விரக்தி வைரம் பாய்ந்து கிடக்க, கோதமன் கைலயங்கிரியைநாடி விரைந்து கொண்டிருந்தான். அவன் துறவியானான்.

இவ்வாறு முடியும் இந்தச் 'சாப விமோசனம்' என்னும் கதையில், புதுமைப்பித்தனுடைய நிமிர்ந்த நெஞ்சினுடைய விமரிசனத்தைக் காணுகிறோம். அது சமுதாய விமரிசனம் மட்டுமா? சாமி விமரிசனமாகவும் திகழ்வதைக் கண்டு மகிழ் கின்றோம். 'இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்து ஊரெல்லாம் தெரிந்தபின் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதைக் காட்டுகிறார் புதுமைப்பித்தன். கல்லுருவம் மாறிவிட்டாலும் அகலிகையின் மனதில் ஏறிய கல் அகலாத தையும், சாப விமோசனம் கிடைத்தாலும் பாப விமோசனம் கிடைக்காததையும் காட்டுவது - சிறுகதைக்கு ஒரு புதிய பரி மாணத்தையே தந்துவிடுகின்றது' என்கிறார் இரா. தண்டாயுதம்.

## 8. தீண்டாமை

'புதிய நந்தன்' என்னும் கதையில் நந்தனார் வரலாறு நடை பெற்ற தமிழகத்தில், பெரியபுராணம் சிவபெருமான் திருக்கோயில் களில் படிக்கப் பெறுகின்ற தமிழகத்தில், நந்தனார் வழிபாடு நிகழ் கின்ற தமிழகத்தில், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் தீண்டாமை தழைத்திருப்பதை மனங்கொளத்தக்க வகையில் காட்டுகிறார் புதுமைப்பித்தன்.

"நந்தாசாம்பானை நந்தநாயனாராக்க, சிதம்பரத்தில் அக்கினிப் புடம் போட்ட பின்னர் வெகு காலம் சென்றது. அந்தப் பெருமையிலே ஆதனூர் சந்தோஷ—அல்லது துக்க—சாகரத்தில் மூழ்கி அப்படியே மெய் மறந்தது. இங்கிலீஷ் சாம்ராஜ்யம் வந்த சங்கதி கூடத் தெரியாது. அப்படிப்பட்ட நெடுந்தூக்கம்" என்று கதையின் தொடக்கத்திலேயே தமிழகத்தை விமரிசனம் செய்கிறார்; விறுவிறுப்பை ஊட்டுகிறார்.

இப்பொழுது ஆதனூரிலே ரயில்வே ஸ்டேஷன் வெற்றிலை பாக்குக்கடை என்ற ஷாப்பு, காப்பி ஹோட்டல் என்ற இத்யாதி சின்னங்கள் வந்துவிட்டன. ஆனால், நந்தன் பறைச்சேரியில் விடைபெற்றுக் கொண்ட பிறகு, பறைச்சேரிக்கு என்னமோ, கதி மோட்சம் கிடையாது. ஒரு மாற்றமும் இல்லை. பழைய பறைச்சேரிதான். பழைய கள்ளுக்கடைதான். ஆனால் இப்

பொழுது பழைய வேதியரின் வழிவழி வந்த புதிய வேதியரின் ஆள் மூலம் குத்தகை; சேரிப்பறையர்கள் ஆண்டையின் அடிமைகள்; அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத் துரைகளின் அடிமைகள்.

வேதியர் அக்கிரகாரத்தில் அந்தப் பழைய வேதியரின் வாழையடி வாழையாக வந்துள்ளார் பெரிய பண்ணை. ஆயிரம் வேலி நிலம் இத்யாதி வகையறா. அது மட்டுமல்ல ஒரு பென்ஷன் பெற்ற சப்-ரிஜிஸ்திரார் விஸ்வநாத ச்ரௌதி. இவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலும், இறந்துபோன சனாதன உண்மைகளிலும் அபார நம்பிக்கை. இதையறிந்து இதற்கேற்ப நடப்பவர்கள்தான் அவருடைய பக்தர்கள். அவருடைய பையன் இராமநாதன், எம் ஏ. படித்துவிட்டு கலெக்டர் தேர்வு எழுதவிருந்தவன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு விட்டான்.

சேரியிலே பெரிய நயினாரின் தோட்டக்காவல் செய்பவன் அறுபது வயதான கருப்பன். அவன் சிறுவயதில் ஒருநாள் இரவு அக்கிரகாரத்தில் இருக்கும் தெப்பக்குளத்தில் இறங்கி ஒருகை தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்புசாஸ்திரிகள் கண்டுவிட, அக்கிரகாரத்தில் ஏக அமளி. அப்பொழுது சிறுவனாக இருந்த விஸ்வநாத ச்ரௌதி தன்னை மீறிய கோபத்தில், அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது.

ஆனால் இளகிய மனமுடைய ச்ரௌதி கருப்பனுடைய நிலைக்கு மிகவும் பரிதபித்து தோட்டத்தில் காவல் தொழிலைக் கொடுத்தார். குடிசை கட்டிக் கொடுத்து, கலியாணமும் செய்து வைத்தார். அதெல்லாம் பழைய கதை.

கருப்பன் மகன் பாவாடையும் விஸ்வநாத ச்ரௌதியின் மகன் இராமநாதனும் சில சமயங்களில் தோட்டக் காட்டிற்கு வரும் பொழுது கேணியில் முக்குளித்து விளையாடுவார்கள்; மரக்குரங்கு விளையாட்டில் ஈடுபடுவார்கள். அதெல்லாம் பழைய கதை. இரண்டு பேரும் வித்தியாசமான இரண்டு சமூகப் படிகளின் வழியாகச் செல்லுங்கால், இரண்டு விதமாகக் கண்டார்கள்.

ரெவரெண்ட் ஜான் ஐயர் பரமண்டலங்களிலிருக்கும் ஏசு கிருத்துவின் நீதிகளை ஆதனூரில் பரப்பும்படி ஒருதடவை ஆதனூர் சேரிக்கு வந்தார். பாவாடையைத் தம் மதத்தில் சேர்க்க

அனுமதித்துவிட்டால், பெரிய பண்ணைமாதிரி ஆக்கிவிடுவதாகக் கருப்பனுக்கு ஆசை காட்டினார். விளைவு பாவாடை ஜான் அய்யருடன் சென்றான்.

பாவாடை என்னும் பெயரை தானியேல் ஜான் என மாற்றிக் கொண்டு, பத்தாவது வகுப்பு வரை நன்றாகப் படித்தான். வேளாளக் கிறித்தவரான ஜான் ஐயருக்கு மேரிலல்லி என்னும் பெயரில் நல்ல அழகான ஒரு பெண் உண்டு. தான் படித்த மிஷின் பள்ளிக்கூடத்தில், எல்லாவற்றிலும் முதல் மார்க் எடுக்கும் பாவாடையிடம்—தானியேல் ஜானியிடம் அவளுக்குச் சிறிது பிரியம், நட்பு, வரவரக் காதலாக மாறியது.

கிறித்தவ சமுதாயத்தில் இந்து கொடுமைகள் இல்லையென்று ஜான் அய்யர் போதித்ததை நம்பி, மனப்பால் குடித்த ஜான் தானியேல், ஒரு நாள் அய்யரிடம் நேரிலேயே தன் கருத்தை—காதலை—வெளியிட்டான். ஜான் அய்யர் அவர்களுக்கு வந்து விட்டது பெரிய கோபம். ''பறக்கழுதை வீட்டைவிட்டு வெளியே இறங்கு'' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினார். மன முடைந்த தானியேல், சுவாமியாராகப் போய்விட வேண்டுமென்று கத்தோலிக்க மதத்தைத் தழுவினான்; நாவிஸ் பிரதராக (Novice Brother) Father ஞானப்பிரகாசம் மேற்பார்த்த மடத்தில் இரண்டு ஆண்டுகள் கழித்தான். சுற்றி நடக்கும் அபத்தங்களும், சில சுவாமியர்களின் இயற்கைக்கு விரோதமான இச்சைகளும், மனத்திற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு என்ற நம்பிக்கைகளைக் கிளப்பிவிட்டன.

அதனால் அதிலிருந்து விலகினான். திரு. இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டான். தோழர் நரசிங்கம் என்ற பெயருடன் அதில் ஒரு பைத்தியம் பிடித்ததுபோல் பிரசாரம் செய்துகொண்டு வந்தான். ஒரு தடவை தகப்பனாரைக் காண ஆதனூருக்கு வந்தான். அப்போது தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் இடையே எண்ணங்களில், செயல் களில், ஏன் எல்லாவற்றிலுமே ஒரு பெரிய பிளவு இருப்பதை உணர்ந்தான். தனது பிரசங்கங்கள் படித்தவர்களிடத்தில் செல்லும். இந்த வாயில்லாப் பூச்சிகளிடத்தில் எடுபடுமா என்னும் மலைப்பு ஏற்பட்டுவிட்டது.

விசுவநாத ச்ரௌதியின் மகனான இராமநாதன் 1930 இயக்கத்தில் தடியடி பட்டு ஜெயிலுக்குச் சென்றான், ஜெயிலி லிருந்து வந்ததும் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டான். ஒருநாள் இரவு தோட்டத்துக் கிணற்றில் குதித்த ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதற்காக இராமநாதனும் குதித்தான். "சாமி கிட்ட வராதீங்க, பறச்சி, கருப்பன் மவ. சும்மனாச்சிங் குளிக்கறேன்!" என்றாள் அவள். "சரி, சரி. நீ விழுந்துவிட்டாயாக்கும் என்று நினைத்தேன். ஏறிவா என்று கரை ஏறினான் இராமநாதன் இருவரும் தங்களை இழந்தனர்!

இராமநாதன் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான். 'அதெப்படி முடியும்" என்று சிரித்தாள் அவள். கருப்பனிடம் போய் நடந்ததைச் சொல்லிப் பெண்ணைப் கொடுக்கும்படி கேட்டான். "அது நயிந்தோ மகாப் பாவம். கண்ணானே அப்படிச் செய்யக்கூடாது" என்று கருப்பன் கூறியதைக் கேட்ட இராமநாதனுக்கு இடி விழுந்தது போலாயிற்று.

தென்னாட்டில் ஹரிஜன இயக்கத்திற்காக பிரசாரம் செய்ய வந்த மகாத்மாகாந்தி ஆதனூரில் சிறிது நேரம் தங்க இராமநாதன் ஏற்பாடு செய்தான். விஸ்வநாத ச்ரௌதிகள் மகாத்மாகாந்தி யாருடன் வாதம் செய்ய புராண ஆதாரங்களுடன் தயாரா யிருந்தார். காந்தியின் கொள்கையைத் தகர்ப்பதும், காந்தி முன்பே தன் மகனிடம் சனாதனத்தின் புனிதத்தைத் காண் பிப்பதும் அவருடைய நோக்கமாயிருந்தது.

காந்தியை எதிர்த்துக் கேள்விகள் கேட்க ஆதனூருக்கு வந்த தோழர் நரசிங்கம் தன் தங்கையின் சமாசாரத்தைத் தெரிந்து கொண்டான். அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும் என்றும், அதற்கு பறையர் சமுதாயம் கட்டுப்பட வேண்டும் என்றும் தந்தையிடம் கூறினான். ஆனால் அவனால் தந்தையின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க முடிய வில்லை. 'பாப்பானின் சாயத்தைத் துலக்கி விடுகிறேன்' என்று காத்திருந்தான்.

இரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்த மைதானத்தில் அமைந்த மேடையில், "மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன, ஒன்றாய்த்தான் இருக்கின்றன". இதில் யாரை நந்தன் என்பது? புதிய ஒளியை இருவர் கண்டனர். இருவிதமாகக் கண்டனர். இறந்த பிறகாவது சாந்தியாமா? சமுதாயத்திற்குப் பலிதான். அதை

யார் நினைக்கிறார்கள், என்று கலதயை முடிக்கிறார் புதுமைப் பித்தன். பாவாடை, மேரிலல்லியை மணக்க முடியாததைப் போலவே, இராமநாதன் கருப்பனின் தங்கையை மணக்க முடிய வில்லை.

பாவாடையைப் பழைய நந்தன் என்றால் இராமநாதன் புதிய நந்தன் என்று கூறுவதன் மூலம் தீண்டாமை என்பது - சாதிக் கலப்பிற்குத் தடை என்பது - அக்கிரகாரத்தில் மட்டுமல்லாமல் பறைச் சேரியிலும் உள்ளது, என்று தமிழகத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமையைத் துல்லியமாக விமரிசனம் செய் கிறார் புதுமைப்பித்தன்.

வேறுவிதமாகக் கூறினால், ''அது நயிந்தோ மகாப்பாவம். கண்ணானே அப்படிச் செய்யக் கூடாது'' என்று, தன் மகளை ச்ரெளதிகளுடைய மகன் இராமநாதனுக்குத் திருமணம் செய்ய மறுக்கிறான் கருப்பன். பாவாடையாகிய ஜான் தானியேலுக்கு மேரிவல்லியைத் தர மறுக்கிறார் ஜான் அய்யர். இவ்வாறு கிறித் தவமும் காந்தீயமும் தீண்டாமையை ஒழிப்பதில் தோற்றுப்போகிற அவலத்தை அருமையாகச் சுட்டுகிறார் புதுமைப்பித்தன் எனலாம்.

## 9. தலைப்பிலேயே சமுதாய விமரிசனம்

மகா மசானம், நாசகாரக்கும்பல், நிகும்பலை போன்ற கதை கள் தலைப்பிலேயே சமுதாய விமரிசனம் செய்வதைப் போல் அமைந்துள்ளதைக் காணலாம்.

நாகரிக வளம் நிறைந்த வீதியின் ஓரத்தில் அநாதையாகச் செத்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரக்கிழவன். அவனுக்கு உதவி செய்ய வந்து சிறிது காசு கிடைத்ததும் எடுத்துக்கொண்டு ஓடிவிடும், இளம்பிச்சைக்காரன், வேடிக்கை பார்க்கும் சிறு பெண், சிறுமியின் அப்பா முதலியோரைப் பற்றிய இந்தக் கதையில் பெருநகரமே 'மகா மசானம்' போல் தோற்றமளிக்கிறது.

''என் கதைகளின் பொதுத்தன்மை நம்பிக்கை வறட்சி'' என்று கூறினார் புதுமைப்பித்தன். நம்பிக்கை வறட்சியையே அழுத்த மாகப் பதிவு செய்யும் கதைகள் சிலவற்றை அவர் படைத்துள்ளார். அவற்றில் 'மகா மசானம்' முக்கியமானது.

புதுமைப்பித்தன் தான் எடுத்துக் கொண்ட கதைப் பொருளி லும் (செய்தியிலும்) உணர்வு அழுத்தத்தோடு அதைச் சொல்லும்

முறையிலும் அக்கறை காட்டியதுபோல, கதை நிகழும் சூழலைப் படம் பிடித்துக் காட்டுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அவருடைய கதைகளில் இடம்பெறும் சூழ்நிலை வருணைகள், சுவைக்கு விருந்தாகும் சொல்லோவியங்களாய்ச் சமுதாய விமரிசன மாய்க் காட்சி தருகின்றன. 'மகாமசானம்' கதையின் தொடக்கத்தில் அமைந்துள்ள சூழ்நிலை வருணனையைக் காணலாம்.

''சாயந்திரமாகி விட்டால், நாகரிகம் என்பது இடித்துக் கொண்டும் இடிபட்டுக் கொண்டும் போக வேண்டிய ரஸ்தா என்பதைக் காட்டும்படியாகப் பண்ண பட்டணம் மாறிவிடுகிறது. அதிலும் தேகத்தின் நரம்பு முடிச்சுப் போல, நாலைந்து பெரிய ரஸ்தாக்களும், டிராம் போகும் ரஸ்தாக்களும் சந்திக்கும் இடமாகி விட்டாலோ தொந்தரவு சகிக்கவே முடியாது. ஆபிசிலிருந்து ''எச்சுப்'' போய் வருகிறவர்கள், இருட்டின கோலாகலத்தை அனுபவிக்க வரும் அலங்கார உரை தரித்தவர்கள், மோட்டாரில் செல்லுவதற்கு இயலாத அவ்வளவு செயலற்ற அலங்கார வேஷ வௌவால்கள் எல்லாம் ஏக மேனியாக ''எல்லாம் ஒன்றே'' என்று காட்டும் தன்மை பெற்றவர்கள் போல் இடித்துத் தள்ளிக்கொண்டு அவரவர் பாதையில் போவார்கள். அன்றும் அம்மாதிரியே போய்க் கொண்டிருந்தார்கள்.

''ஒற்றை வழிப் போக்கு வரத்து'' என்ற சஞ்சார நியதி வந்ததிலிருந்து, உயர்ந்த அடுக்குக் கட்டடங்களின் உச்சியின் மேல் நின்று கொண்டு பார்த்தால், அங்கே நாகரிகத்தின் சுழிப்புத் தெரியும். கரையைப் பீறிட்டுக் கொண்டு பாயும் வெள்ளத்தை அணைக்கட்டின் மேல் இருந்து கொண்டு பார்த்தால் எப்படியோ, அப்படி இருக்கும்,

''நான் சொல்ல வந்த இடமும் அதுதான். மவுண்ட ரோட் ரவுண்டானா. மலைப்பழ, மாம்பழக் கூடைக்காரிகளின் வரிசை. அவர்களுக்குப் பின்புறம் எச்சில் மாங்கொட்டையைக் குழப்பித் துப்பிவிட்டுச் சீலையில் கையைத் துடைத்துக் கொள்ளும் '-மெராஸ் பறச்சிங்கோ'', கைத்தடியோடு ''சிலுமன்'' கொடுத்து உலாவிக் கொண்டிருக்கும் காபூலிவாலா, முகமதியப் பிச்சைக்காரன், நொண்டிப்பிச்சைக்காரன், குஷ்டரோகப் பிச்சைக்காரன், ராத்திரித் ''தொழிலுக்கு'' தயாராகும் யுவதி—பாதையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு நிம்மதியாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள். அவள்—அப்புறம் நானாவித, ''என்ன சார் ரொம்ப

நாளாச்சே", "பஸ் வந்துட்டுது" "ஏறு" என்கிற பேர்வழிகள் எல்லாம். அவசரம், அவசரம், அவசரம். அப்போது அவன் ரஸ்தா வின் ஓரத்தில் உள்ள நடை பாதையில் படுத்து சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.

"சாவதற்கு நல்ல இடம், சுகமான மர நிழல். வெக்கை தணிந்து அஸ்தமனமாகி வரும் சூரியன். "ஜே, ஜே" என்ற ஜன இயக்கம். ராஜகோலாகலம், என்றுதான் சொல்ல வேண்டும், அப் பொழுது அவன் செத்துக் கொண்டிருந்தான்; சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்".

"ஜனங்கள் அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வந்து கொண்டிருந்தார்கள், அவர்களுக்குத் தெரியாது; சிலர் தெரிந்து கொள்ள விரும்பவில்லை". நகரத்தின் மனிதத் தன்மையற்ற போக்கை இவ்வாறு விமரிசனம் செய்யும் போக்கில் கதையைத் தொடங்கும் புதுமைப்பித்தன் மேலும் தொடர்கிறார்.

அவன் கிழட்டுத் துருக்கப் பிச்சைக்காரன். அவனுக்குப் பக்கத்தில் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த இன்னொரு பிச்சைக்காரன், தகரக் குவளையில் தண்ணீர் எடுத்து ஊட்ட முயன்றான்; முடியாமையால் வாயை மட்டிலும் நனைத்தான். படுத்துக் கிடந்த கிழவன் அதாவது செத்துக் கொண்டிருந்த கிழவன் தன் பக்கத்திலிருந்த பீப்பாயைப் பிடித்தபடியே தலையை நிமிர்த்த முயன்றான். அவன் கண்களில் ஒளி மங்கிவிட்டது. அவன் உதடு நீலம் பூத்து விட்டது.

அப்போது அங்கு வந்த பெண் குழந்தை ஒன்றும் அதன் தகப் பனாரும் டிராமுக்குக் காத்து கொண்டு நின்றார்கள். சிறிது நேரத்தில்எதிர்ச் சாரியிலுள்ள கூடைக்காரியினிடத்தில் மாம்பழம் வாங்கி வருவதாகவும் அதுவரையில் அங்கேயே நிற்குமாறும், குழந்தையினிடத்தில் கூறிவிட்டுச் சென்றார் பெரியவர்.

அப்போது செத்துக் கொண்டிருக்கும் அக்கிழவனும் அவனு டைய சாவுக்கு உதவி செய்து கொண்டிருக்கும் வேறு ஒருவனும் அந்தக் குழந்தையின் கண்ணில்பட, 'அதென்ன வேடிக்கை' என்று பார்க்கத் தயங்கித் தயங்கி அவர்கள் பக்கம் நெருங்கியது. கிழவனுடைய தலைப்பக்கம் நின்றது. இளைய பிச்சைக்காரன் மீண்டும் கிழவனின் தொண்டையை நனைக்க முயன்று தோற்றுப் போனான். அப்போது "மெதுவா, மெதுவா" என்ற குழந்தையைப்

பார்த்து, "நீ இங்கு நிக்கப்படாது; அப்படிப் போயிரம்மா" என்று கூறினான்.

"இவுரு செத்துப் போறாரு" என்று காரணம் கூறிய பிச்சைக் காரனிடம், "பட்டாணி வாங்கிக் குடேன்" என்றது குழந்தை. "ஒங்கிட்டே துட்டு இருக்கா" என்று அவன் கேட்க, "இந்தா ஒரு புதுத்துட்டு" என்று குழந்தை அவன் வசம் நீட்டியது, குழந்தை கொடுத்த ஒரு புதுத் தம்படியை அவன் வாங்கிக் கொண்டதைப் புதுமைப்பித்தன் விமரிசனம் செய்வதில் அவருடைய சமுதாய நோக்கம் தெற்றெனப் புலனாகின்றது.

"கோடீசுவரர்கள் அன்னதான சமாஜம் கட்டிப் பசிப் பிணியைப் போக்கிவிட முயலுவது போல், கடலில் காயம் கரைத்து வாசனை யேற்றிவிட முயலுவது போல், குழந்தையும் தானம் செய்துவிட்டது". பஞ்சடைந்த கண்ணோடு கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக்கொண்டு செத்துக் கொண்டிருந்தான். ஜனங் கள் போய்க்கொண்டிருந்தார்கள்; வந்து கொண்டிருந்தார்கள்.

அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்த ஒருவரின் கையிலிருந்த ஓரணாச் சிதறிக் கீழே விழுந்தது. உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் அதைக் கவ்வி எடுத்ததும், ஒருவரும் பார்க்கவில்லையேயென்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். "நீ போம்மா" என்று மீண்டும் குழந்தையைப் பார்த்துச் சொல்ல, அது "மாட்டேன்" என்று அங்கேயே நின்று கொண்டது. "பாவா, கொஞ்சம் பாலு வாங்கியாறேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்த பிச்சைக்காரன் எதிர்ச்சாரி ஓட்டலை நோக்கி நடந்தான்.

படுத்துக் கிடந்த கிழவன் கண்கள் விரியத் திறந்திருந்தன. கண்ணின் மணியின் மேல் ஓர் ஈ வந்து உட்கார்ந்தது. அவன் செத்துக் கொண்டிருந்தான், அப்போது இரண்டு மாம்பழங்களை, வாங்கி வந்த அப்பா கூப்பிட, அவரை நோக்கிக் குழந்தை ஓடியது. சிலர் மட்டும் ஏறிட்டுப் பார்த்தார்கள். அப்பா குழந்தையைத் தூக்கிக் கொண்டார்; குழந்தையோ பழத்தைத் தூக்க முடியாமல் தூக்கி மோந்து, "வாசனையா இருக்கே" என்று மூக்கருகில் வைத்துத் தேய்த்துக் கொண்டது.

கண்ணெதிரில் வீதியின் ஓரத்தில் பட்டப்பகலில் செத்துக் கொண்டிருக்கும் சக மனிதனைப் பற்றிச் சற்றும் கவலைப்படா நகரச் சூழலை இவ்வாறு வருணிக்கிறார் புதுமைப்பித்தன். மகா மசானம் என்னும் பெயர் இக்கதைக்குப் பொருத்தம்தானே!

## நாசகாரக் கும்பல்

புதுமைப்பித்தன் கதை எழுதிய அனுபவங்களே தனிக்கதை, சுவையானவை, எப்போதோ ஒரு தலைப்பைக் கொடுத்துவிட்டுப் பத்திரிக்கையிலிருந்து வந்து உட்கார்ந்து நெருக்கியவுடன் எழுதிய கதை 'நாசகாரக் கும்பல்'. "கதை தருவதாக வாக்குக் கொடுத்து விட்டுக் கடைசி நிமிஷம் வரை போக்குக் காட்டிச் சாத்தியமானால் அந்தக் குறிப்பிட்ட இதழுக்குத் தப்பிவிடுவதில் நான் கைதேர்ந்த நிபுணர்" என்று தன்னுடைய கதை படைக்கும் அனுபவம் பற்றிக் கூறுகிறார் புதுமைப்பித்தன். வாழ்க்கையின் அவலங்களையும் சமூகக் கொடுமைகளையும், உயர்நிலையிலிருப்போர் தாழ்ந்த நிலையிலிருப்போரை வாட்டிவதைப்பதையும் அலைக்கழித்து அரற்றச் செய்தலையும் விளக்குவது 'நாசகாரக் கும்பல்' கதையாகும்.

"டாக்டர் விசுவநாத பிள்ளை (வெறும் சென்னை எல்,எம்.பி தான்) முப்பது முப்பத்தைந்து வருஷமாக ஆந்திர ஜில்லா வாசிகளிடை யமன் பட்டியல் தயாரித்துவிட்டு, பென்ஷன் பெற்று, திருச்செந்தூர் ஜில்லா போர்டு ரஸ்தாவில், பாளையங்கோட்டைக்கு எட்டாவது கல்லில் இருக்கும் அழகிய நம்பியாபுரம் என்ற கிராமத்தில் குடியேறினார்.

"ஏறக்குறைய அதே சமயத்தில்தான், குடிமகன் மருதப்பனும் இலங்கைத் தோட்டத்துரைகளுக்கு க்ஷவரகனாக இருந்து, படிப் படியாகக் கொழும்பு கோட்டைத் தெருக்களில் சலூன் வைக்கும் அதிர்ஷ்டமடைந்து அதில் ஒரு பத்து வருஷ லாபத்தாலும் அங்கு சிறிது மனனம் செய்துகொண்ட 'வாகட சாஸ்திரம்', 'போகர் இருநூறு', 'கோரக்கர் மூலிகைச் சிந்தாமணி' இவற்றின் பரிச் சயத்தாலும் உயர் திரு. மருதப்ப மருத்துவனராகி அழகிய நம்பியா புரத்தில் வந்து குடியேறினான்.

"இவ்விருவரும் இவ்வூருக்கு ஓரே சமயத்தில் படையெடுத்தது தற்செயலாக ஏற்பட்ட சம்பவம். ஆனால் அழகிய நம்பியாபுரத்தில் இவர்கள் வருகைக்கப்புறம் ஒரு மறைமுகமான மாறுதல் ஏற்பட்டது". இவ்வாறு கதையைத் தொடங்கும் புதுமைப்பித்தன், கதைப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் முறையிலேயே சமுதாய விமரிசனம் செய்கிறார். ஸ்ரீ விசுவநாதபிள்ளை சாதரண வேளாள வகுப்பில் பிறந்து, வைத்தியத்தொழில் நல்ல லாபம் தரும் என்ற

நம்பிக்கையில், வாலிப காலத்தில் அதில் ஈடுபட்டார். அவர் படித்துத் தேறி பணம் சம்பாதித்தது ஒரு பெரிய வசன காவியம். அவருக்கு 'மெடீரியாமெடிகாவில்' எவ்வளவு அபார நம்பிக்கையோ' அவ்வளவு சைவ சித்தாந்த நூல்களிலும் உண்டு. சிவஞானபோதச் சிற்றுரையும் 'ஸ்டேதாஸ்கோப்' பும், உத்தியோக காலத்தில் அபேதமாக இடம் பெற்றன. விசுவநாத பிள்ளை பொதுவாக நல்ல மனுஷர், நாலு பெயரிடம் சுமுகமாகப் பேசிப்பழகக் கூடியவர். மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தர் என்ற மிடுக்கு என்றும் கிடையாது.

ஸ்ரீமதி விசுவநாத பிள்ளை - அதாவது 'சாலாச்சியம்மா' (விசாலாட்சியம்மாள்) நிரந்தரமாக, பிள்ளையவர்களின் சலித்துப் போன வைத்தியத்திற்கும் மீறிய வயிறு சம்பந்தமான வியாதி உடையவள்.

குடிமகன் மருதப்பன் வாலிபப் பருவத்தில் தூத்துக்குடியில் கொழும்புக்குக் கப்பலேறினான், அங்குச் சலூன் வைத்தான்; சலூன் முயற்சியில் நல்ல பலன் ஏற்பட்டது; திருநெல்வேலிக்கு வந்தபோது, கையில் ரொக்கமாக ரூபாய் ஐயாயிரமும், அழகிய நம்பியாபுரத்தில் மூன்று கோட்டை நன்செய்யும் கொழும்பு சலூனில் வாரிசாகப் புத்திரனும் உண்டு.

சாலையில் உள்ள பலசரக்கு கடைச் சுப்புப்பிள்ளை, பட்டறையில் உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடி, கடைச்சாயப்பின் கீழ் துண்டை விரித்து முழங்காலைக் கட்டி உட்கார்ந்திருக்கும் இரண்டொரு தேவமாரை (மறவர்) மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார். பலவேசத் தேவன், அனுபவமில்லாத இளங்காளை; தலையாரித் தேவனின் மகன். வேலாண்டி என்பவன் ஒரு கொண்டையன் கோட்டையான் (மறவர்களுக்குள் ஒரு கிளை) வயது வேகத்தைக் குறைத்து, நரைத்த தலை அந்தஸ்தைக் கொடுத்தது. ஆனால் உடல்கட்டு அனுபவமற்ற இளங்காளைகளின் கட்டு மாறாமல் இருந்தது. வாரகுத்தகையில் வாழ முயலும் விவசாயி. இடுப்பில் உள்ள வெட்டரிவாளின் உபயோகம், விறகு தறிப்பது மட்டுமல்ல என்று தெரிந்தவர்கள் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் நாணயஸ்தன். பொய் சொல்லுவது மறவர்களுக்கு அடுக்காது என்று நடப்பவன்.

சுப்புப்பிள்ளை, சம்பத்துக் காரணமாக ஜாதி வித்தியாச மனப் பான்மையைச் சிறிது தளர்த்தி, ஒரு விதத்திலும் பட்டுக்கொள்ளா

மல், வைத்தியர்வாள் என்று மருதப்ப மருத்துவனாரை அழைப்பது சமீபத்திய சம்பிரதாயம்.

ii

அப்பொழுது சுமைதாங்கி முன் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து, இவ்வளவு நேரமாக வாமனாவதாரமெடுத்துக் கால்களைச்சுருட்டிக் கிடந்த பிரயாணிகளில் இரண்டொருவர் கீழே இறங்கினார்கள். டிரைவர் பக்கத்திலிருக்கும் 'பஸ் ஒண்ணாங்கிளாசி' லிருந்து தெரஸரய்யா மகன் மகராச பிள்ளை இறங்கியபோது, பெட்டியை இறக்கப் பலவேசம் ஓடினான். 'என்னய்யா சௌக்கியமா'' என்று கடைப்பட்டரையிலிருந்த படியே விசாரித்தார் சுப்புப்பிள்ளை.

''என்ன எசமான் சவுக்கியமா? ஐயா, உடம்பு முந்திப் பார்த்த மாறுதியே இரிக்கியளே'' என்றான் வேலாண்டி. பஸ் புறப்படுகின்ற நேரத்தில் அவசரமாக வந்து ஏறி உட்கார்ந்த மரைக்காயர், ''வைத்தியர்வாள்! வரவேணும். ஒரு அவசரம்'' என்றார். மருதப்ப மருத்துவனார் முகம் மலர்ந்தது. ''எங்கே இப்படி'' என்று சொல்லிக்கொண்டே பஸ் அருகில் ஓடினார். மருத்துவனார் லேகியம் செய்து தருமாறு மரைக்காயர் வேண்ட 'சரி, சரி' என்றார் மருதப்பன்.

மேல்துண்டுச் சும்மாட்டில் படுக்கையையும் தோல்பெட்டி ஒன்றையும் தூக்கிக் கொண்டு வேலாண்டி முன்னே நடக்கப் பின் தொடர்ந்தான் மகராசன். வைத்தியரும் கடைக்காரப் பிள்ளையும் டாக்டர் விசுவநாத பிள்ளை தோட்டத்திற்குள் மறைந்தனர்.

iii

விசுவநாத பிள்ளையின் தோட்டத்துக் கல் தொட்டியில் தண்ணீரை இரைத்து இருவரும் குளிக்கத் தொடங்கினர். மருத்துவர் பேசினார், ''ஐயா, ஒங்ககிட்ட ஒரு சமுசாரமிலா கேக்கணுமின்னு இருக்கேன்... நம்ம கொளத்தடி வயிலிருக்கே முக்குருணி வீசம், அது வெலைக்கு வந்திருக்கதாவப் பேச்சு ஊசலாடுது. அதான் நம்ம பண்ணைப் பிள்ளைவாள் வரப்புக்கு மேக்கே இருக்கே அதான்...நம்ம மூக்கம் பய அண்ணைக்கு வந்தான் ஒரு மாதிரி பேசறான். வாங்கிப் போட்டா நம்மது ஒரு வளைவா போகுதேன்னு நெனைச்சேன்... நீங்க என்ன சொல்லுதிய?''

''வே! ஒமக்கு என்னத்துக்கு இந்த பெரிய எடத்துப் பொல்லாப்பு? அது பெரிய எடத்துக் காரியம், மூக்கம் பய படுத

பாட்டெப்பாக்கலியா? பண்ணையார்வாள் தான் கண்லே வெரலெ விட்டு ஆட்ராகளே! ஒரு வேளை அது மேலே அவுகளுக்குக் கண்ணாருக்கும் - சவத்தெ விட்டுத் தள்ளும்!''

''என்னய்யா, அவுகளுக்குப் பணமிருந்தா அவுஹமட்டோட; அவுக பண்ணையார்ன்னா கொடிகட்டிப் பறக்குதா! அதெத்தான் பார்த்து விட்ரனும்லா! நான் அதுக்கு அஞ்சுனவனில்லெ, நாளெக்கெ முடிக்கேன். என்னதான் வருது பாப்பமே!'' என்று படபடத்தார் மருதப்பனார். ''என்னமோ நாஞ் சொல்லுததெச் சொன்னேன் உம்ம இஷ்டம்'', என்றார் பிள்ளை.

## iv

அன்றுபொழுது மயங்கிய மாலை வேளையில், குளக்கரைக்கு மேல் போகும் ரஸ்தாவில் நடந்து வருகிறார் சுப்புப்பிள்ளை. அப்போது இரட்டை மாட்டு வண்டியில் வந்து கொண்டிருந்த பண்ணையார் சிதம்பரம்பிள்ளையிடம் பேச்சுக் கொடுத்து விசாரித்தார். பண்ணையாரும் வண்டியிலிருந்து கீழே இறங்கி உரையாடினார்.

சுப்புப்பிள்ளை கூறினார்: ''அண்ணாச்சி, ஒங்ககிட்ட ஒரு சமுசாரம்லா சொல்லுணும்'னு நெனைச்சேன். ஏங்காதுலே ஒரு சொல் விழுந்தது. ஒங்களுக்கு அதெத் தெரிவியாமே இருந்தா, ஞாயமில்லை''. ''நம்ம மருதப்பன் இருக்கான் இல்லியா. பய கொழும்புலே ரெண்டு காசு சம்பாரிச்சிட்டான்னு மண்டெக் கருவம் தலை சுத்தியாடுது. இண்ணைக்கிப் புதிய தெரஸர் பிள்ளெ வாள் கெணத்துலே குளிச்சுக்கிட்டிருக்கப்பச் சொல்லுதான், பண்ணயப் பணம்னா அவுக மட்டோட, ஊரெல்லாம் என்ன பாவட்டா கட்டிப் பறக்குதா? என்று உங்களெ ஒரு கை பாத்துப் பிட்டுத்தான் விடுவானாம்; பாருங்க ஊருபோர போக்கை?''

''சவம் கொலைச்சா கொலைச்சுட்டுப் போகுது! அவர் இப்ப மருத்துவர்லா! அப்படித் தான் இருக்கும். எதுக்காம் இவ்வளவும்?'' ''ஒங்க வயக்காட்டுப் பக்கம் முக்குருணி வீசம் இருக்குல்லா. நம்ப மூக்கன் பய நெலம், அதுக்குத்தான் இம்புட்டும். வாங்கப்போ ரென்று வீரியம் பேசுதான்''. ''மூக்கப்பய நெலமா?...எங்கிட்டல்லா கால்லெ விழுந்து கெஞ்சிட்டுப் போனான்; அந்த நன்னி கெட்ட நாய்க்கு ஒதவப்படாதுன்னுதான், வெரட்னேன், அவன் கால்லெ போய் விளுந்தானாக்கும்! அதுலே என்ன வீராப்பு?''

''ஒனக்கு எதுக்குடா அந்த நெலம், அதெ வாங்குததுலெ பிள்ளைவாளுக்குத்தானே சௌகரியம்னேன். அவ்வளவுதான். இந்த வூரு புள்ளெமாரே அப்படித்தானாம்; எப்பவும் அடா பிடியாம்; அவன் கிட்டக் காரியம் நடக்காதாம்!'' ''அப்படியா சேதி ஏலே தொப்ளான், நாங்க நடந்து வருதோம். வண்டியைக் கொண்டுபோய் அவுத்துப் போட்டுப்புட்டு, எந்த ராத்திரியும் மூக்கன் பயலேக் கையோடே புடிச்சா!'' ''நாம வாங்குதாப்லியே காம்பிச்சுக்கப் படாது; தெரஸர் பிள்ளைவாள்தான் வேணும்னா ஹள்யா அவுக பேரச் சொல்லி வைக்கது'' அதெக்கு கூட நாலு காசெ வீசினாப் போகுது. அந்த நாய்கிட்டே பொய்யெதுக்கு?''. ''இல்லெ அண்ணாச்சி, உங்களுக்குத் தெரியாது; நான்சொல்லுதைக் கேளுங்க!'' ''ராத்திரிக் கடையடச்ச பொரவு இப்படி வீட்டுக்குத் தான் வாருங்களேன், பேசிக்கிடலாம்''.

V

வீட்டுக்குச் சென்ற மகராஜன், தன் தாயின் உடல்நிலை கெட்டிருப்பதைப் பார்த்துத் தந்தையார் விசுவநாத பிள்ளையிடம் விசாரிக்கிறான். இயற்கை வைத்தியம் பார்க்க அனுமதி கேட்டான். தந்தையும் 'சரி, பாரேன் என்றார். அப்போது பண்ணையார் வாளும் சுப்புப்பிள்ளையும் அங்கு வந்தார்கள். எழுந்து நின்று அவர்களை வரவேற்றார் விசுவநாதபிள்ளை.

''ஏது மாப்ளெ எப்ப வந்தாப்லெ? ரசாவா?'' என்று மகாராஜனைக் கேட்டார். மகாராஜனை மாப்பிள்ளை என்றழைப்பதில் அவருக்குப் பரம திருப்தி. சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு, பேச்சில் சோர்வு தட்ட பண்ணையார் சுப்புப்பிள்ளையைப் பார்த்தார். ''தெரஸர் பிள்ளைவாள், ஒங்ககிட்ட ஒரு விசயமா கலந்துகிட்டுப் போகலாமுன்னு வந்தேன்—ஐயாவும் வந்தாஹ—ஊர் விசயம்—தலைதெரிச்சுப்போய் அலையரான்கள் சில பயஹ இப்படி வாருங்க...'' என்று விசுவநாதபிள்ளையை வெளியே அழைத்துக் கொண்டு போனார் சுப்புப்பிள்ளை.

''ஆமாம், ஆமாம், சரிதான்...வாங்குறவன்பாடு குடுக்கவன் பாடு, நமக்கென்ன?...அப்படியா! பிள்ளைவாளுக்கு எடைலேயா வந்து விளுந்தான்...அப்பமே எனக்குத் தெரியுமே...காறை வீடு கட்டினா கண்ணவிஞ்சா போகும்?'' என்றார் விசுவநாதபிள்ளை. ''என்ன!...'' என்று சிரித்தவாறே கேட்டார் பண்ணையார். ''இதுக்கு நீங்க எதுக்கு வரணும்? சொல்லி விட்டா நான் வர

மாட்டனா?... மூக்கப் பயலெ எங்கே இன்னும்காணம்?'' என்று கூறினார் விசுவநாதபிள்ளை.

''சவத்துப்பய இப்பம் வருவான்...ராத்திரி பத்திரத்தை எளுதி முடிச்சுக்கிடுவோம், காலெலே டவுனுக்குப் போயி ரிஸ்தர் பண்ணிப்போடுத்து, கூச்சல் ஒஞ்சப்புரம் பத்திரத்தை எம்பேருக்கு மாத்திக்கலாம்...'' ''அது அவாளுக்குத் தெரியாதா?—காரியம் முடிஞ்சாப் போதும் ..'' என்றார் சுப்புப்பிள்ளை.

## VI

நாலைந்து நாள் கழிந்து ஒரு நாள் மத்தியான வெய்யிலில் கை நிறையப் பிடுங்கிய மூலிகைளைக் குளத்திவிட்டு அலசிக்கொண்டிருந்தார் மருத்துவ மருதப்பனார். அப்போது வேலாண்டி கேட்டான். 'வைத்தியரய்யா, என்ன, தெரஸர் பிள்ளைவாள் ராவோட ராவா மூக்கன் நெலத்தைக் கொத்திக்கிட்டுப் போயிட்டாகளாமே''. ''ஊர் வெள்ளாளன்மாரு கூடிக்கிட்டா என்ன? ஆனைக்கு ஒரு காலம்னா பூனைக்கும் ஒரு காலம் வரும். பண்ணையப் பிள்ளைவாளுக்கு அந்த நெலம் வந்துதான் நெரயனுமாக்கும்; வாங்கினா ஒரே வளவாப் போயிடுமேன்னு நெனச்சேன். சவத்துக்குப் பொறந்த பயஹ பேச்செத் தள்ளு;''

''ஆமாம் மூக்கம் பய கொளும்புக்கில்லா போயிட்டானாம்... அந்தப் பயலுக்கு என்ன அவசரம் இப்படி அள்ளிக்கிட்டுப் போவுது...''. ''மூதி தொலஞ்சுட்டுப் போகுது. அன்னெக்கி வந்து மூக்காலெ அளுதான்னேன்னு பார்த்தேன்...ஊர்லெ தேவமாருன்னு பேர் வச்சுகிட்டுப் பூனையாட்டம் ஒண்டிக்கெடந்தா, என்னதான் நடக்காது... புள்ளெமாருக்குன்னுதான் இந்த வூரா... அப்போ நாங்க போயிருதோம்... அதெத்தான் அத்துப் பேசட்டுமே...''

அப்போது தலைதெறிக்க ஓடிவந்த தொப்ளான், ''தெரஸரய்யா சமுசாரத்துக்குத் தடபுடலாக் கெடக்கு. ஒங்களெ சித்த சத்தங்காட்டச் சொன்னாவ'' என்று கூறினான். ''அதுவும் அப்பிடியா! காத்தெக் கட்டிப் போட முடியுமா? நான் அப்பம் ஒரு சேதி சொன்னனே பாத்தியா-பாத்துக்கோ'' என்று வேலாண்டியிடம் கூறிய மருத்துவர், பச்சிலை முடிப்போடு குறுக்குப் பாதை வழியாக ஊரை நோக்கி நடந்தார்.

## VII

நேற்றிரவு 12 மணிக்கு ஸ்ரீமதி விசுவநாதபிள்ளை—சாலாச்சி ஆச்சி இறந்து போனாள். 'மகனுக்குப் பண்ணையப் பிள்ளை மகளை முடிச்சு வைக்கப் பார்க்கக் கொடுத்து வைக்கலியே' என்ற ஏக்கத்தோடு ஆவி பிரிந்தது... இறப்புச் சடங்குகளைச் செய்யும் குடிமகனை நீண்ட நேரமாகக் காணாததனால் பண்ணையார், "நீ போய் இன்னொரு சத்தம் குடு"... என்று தொப்ளானை அதட்டினார்.

"குடிமகன் மாடசாமிதானே, அவன் வைத்யரு வீட்டெப் பாத்துப் போகுறதெக் கண்டேன்" என்றான் பலவேசம். கால் மணி கழித்து ஓடிவந்த பலவேசம் "எசமான், நான் போனேன் வெளியே மருதப்பன் நின்னுக்கிட்டிருந்தான். 'இனிமே, குடிமகன் இந்த வேலைக்கு வரமாட்டான்; அவன் தொழில் இதில்லே; இனிமேச் செய்ய முடியாதாம்னு போய்ச் சொல்லுன்னு சொல்லிப் பிட்டாரு!" என்றான்.

"மாடசாமியா அப்படிச் சொன்னான்?'; என்று சுப்புப்பிள்ளை எழுந்தார். "இல்லெ மருதப்பன்தான் சொன்னான்". "அவன் சொன்னான், இவன் கேட்டுக்கிட்டு வந்தானாம். நீ சாதி மறவனாலே!—அப்படியே அலகிலே ரெண்டு குடுத்துக் கூட்டியாராமே! என்ன வேலாண்டி, நீ என்ன சும்மா நிக்கே? ரெண்டு சிறுக்கி மகன்களையும் பின்கட்டு மாறாகக் கட்டிக் கொண்டா—முதுகுத் தோலியே உறிச்சுப் பிடரேன்" என்று கர்ஜித்தார் சிதம்பரம் பிள்ளை.

"என்னண்ணாச்சி, நாலு காசுக்குப் பால்மார்றான் போலே—விசிறி எறிஞ்சாப்போகுது..." என்று சமாதானம் செய்ய வந்தார் விசுவநாதபிள்ளை. "ஒங்கிளுக்கு ஊரு வழுமே தெரியாது; அம்பட்டப் பயலா காரியமாத் தெரியலியே! எலே, நீ புளிய மிளார் நல்ல பொடுசாப் பாத்துப் பறிச்சுக்கிட்டு வாலே, தொப்ளான்" என்று மறுபடியும் சீறினார் பண்ணையார், கால்மணி நேரத்தில், மேல்துண்டை வைத்துப் பின்கட்டு மாறாத மருதப்பனையும், மாடசாமியையும் கட்டிக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளிக் கொண்டே வந்தான் வேலாண்டி.

"திரும்பினியா, பாளெ யறுவாளெக் கொண்டு தலையைச் சீவிப்புடுவேன் நடலே என்ன முளிக்கே" என்ற அதிகாரத்தொனி கேட்டது. வயிற்றிலடித்துக் கொண்டு ஓலமிட்டு வரும் நாவிதக்

குடும்பத்தின் இரைச்சலும் கேட்டது. ''ரெண்டு பயல்களையும் அந்தத் தூணோடு வச்சுக் கட்டு!'' என்று கூறிய பண்ணையார், 'மிளாரே எங்கடா?'' என்று ஒன்றை வாங்கி முழங்காலிலும் முதுகிலும் மாறி மாறிப் பிரயோகித்தார்.

''பிள்ளைமாருன்னா என்ன கொம்பு மொளச்சிருக்கா— பிரிட்டிஷ் ராச்சியமா என்ன? ரொம்ப உறுக்கிரஹளே! மனிதனைக் கட்டிப்போட்டு அடிக்கதுன்னா நாய அநியாயமில்லையா— இண்ணக்கி சிரிக்கிரவுஹ நாளைக்கி வாரதையும் நினைச்சுப் பார்க் கணும்'' என்றான் மருதப்பன்.

''நாசுவப்பயலா காரியமாத் தெரியலெயே வேலாண்டி, அவன் மொளியைப் (முழங்காலை) பேத்துக் கையிலெ குடு! அவனுக்குக் குடுக்கிற கொடைலே இவன் சங்கெத் தூக்கணும்; என்ன பாத்துக்கிட்டு நிக்கே?'' வேலாண்டி கையிலிருந்த குறுந்தடியை ஓங்கி முழங்காலிலே ஒரு போடு போட்டான். ''ஐயோ, அம்மா! என்னியப் போட்டுக் கொல்ராண்டோ! ஊர்லே நாயமில்லியா! நீதியில்லியா!'' என்று கதறினார் வைத்தியர்.

விசுவநாத பிள்ளை ஓடியே வந்து வேலாண்டியிடமிருந்த குறுந்தடியைப் பிடுங்கிக்கொண்டு ''அண்ணாச்சி, பார்க்கச் சகிக்கலே—காரியத்தைப் பார்த்துச் செய்யணும்'' என்று ஆரம்பித் தார். ''எங்கை எப்படியிருக்குன்னு பார்லே'' என்று மறுபடியும் ஒரு குத்து விட்டான். வேலாண்டி. மருதப்பன் பல்லில் முன்னிரண் டும் விழுந்து விட்டன. ரத்தங்கண்டதும் பீதியடித்துப்போன மாடசாமி, கண்களில் நீர் பெருக, சங்கை எடுத்து ஊத ஆரம்பித் தான். ''சவத்தெ அவுத்து விடுடா! இந்தத் தெசேலே தலைவச்சுப் படுத்தா மாறுகால் மாறுகை வாங்கிப் போடுவேன் ஓடிப்போ நாயே'' என்று கர்ஜித்தார் பண்ணையார்.

மனைவியின் கைத்தாங்கலில் சிறிது தூரம் சென்ற மருதப்பன் ஒரு பிடி மண் எடுத்து வானத்தில் தூற்றினான். ''இப்படி சுட்ட மண்ணாப் போகணும்; என் வயிரெறிராப்லே போகணும்!'' என்று ஏசல் அழுகையுடன் கூவினான். ''போலீசுக்கு எட்டுச்சுன்னா அவன் தலை களுத்திலே இருக்காது!'' என்று மருதப்பனுக்கு வேலாண்டி மூலம் எச்சரிக்கை அனுப்பிய பண்ணையார், விசுவநாத பிள்ளைக்குத் தக்க சமாதானங்கள் சொல்லத் தொடங்கினார்.

இரகசியமாக இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஸ்ரீ வைகுண்டம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பிராது அனுப்பிய

மருதப்பன், மனு ஏற்கப்படாமல் எச்சரித்து விரட்டப்பட்டான். மருதப்பன் வீடு அடைத்துப் பூட்டிக் கிடந்தது. அவனைப் பற்றிய தகவல் ஏதும் இல்லை. இதைக் கேட்டுப் பண்ணையார், ''சவம் தன்னைப் பயந்து கொளும்புக்கு ஓடியிருக்கும்'' என்று திருப்தி கொண்டார். தன் மகளை இரண்டாந்தாரமாக டாக்டர் விசுவநாத பிள்ளைக்கு முடித்துவிட விரும்பிய சுப்புப்பிள்ளை அதற்கேற்பச் செயலாற்றத் தொடங்கினார்.

## VIII

பதினாறு முடிந்து ஐந்தாவது நாள் விடியற்காலை மகராஜன் சென்னைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறியபோது, மரைக்காயர் இறங்கினார். ''பண்ணையாரிவாளெப் பார்க்க வந்தேன், நீங்க மூக்கன் கிட்ட வாங்கினிஹளாமில்லா, அந்த நெலத்தை எனக்கு முன்னாலேயே அடமானம் வச்சிருந்தான் — சமுசாரத்தைச் சொல்லிப்புட்டுப் போகலாமுன்னு வந்தேன். நம்ம வைத்தியர் வாளும் அவுஹ பொஞ்சாதியும் நேத்துத்தான் இஸ்லாத்தைத் தளுவினாஹ! இந்த பஸ்லேதான் நம்ம கடெலே மானேசராயிருக்க கொளும்புக்குப் போராஹ'' என்றார்,

இதைக்கேட்ட சிதம்பரம் பிள்ளை (பண்ணையார்) ''கோர்ட்டு இருக்கே, நடத்திப் பார்ப்போமே'' என்றார். இதோடு கதை முடிகிறது. நாசகாரக்கும்பல் என்பது மேல்சாதியினரின் ஆணவம் பிடித்த, ஈவு இரக்கமற்ற உயர்சாதியினரின் கொடுமைகளைக் காட்டும் தலைப்பு. கதைப் பெயர், கதையில்—கதைப் போக்கில்—எங்கும் இடம் பெறவே இல்லை என்பது எண்ணத்தக்கது.

'பயன் கருதாது தன் மயமாகி லயித்து ஒட்டிப் புளுகுவதுதான் கதை'.

'சிறுகதை வாழ்க்கையின் சிறிய சாளரம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதுதான் கலை. சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பித்தது. சிறுகதைகள் வாழ்வை உண்மையை நேர்நின்று நோக்க ஆரம்பித்தன.' இவ்வாறான தன் கருத்துகளுக்கு ஏற்ப புதுமைப்பித்தன் இந்தக் கதையில் மனித வாழ்வின் உண்மையை நேர்நின்று நோக்கி மனிதர்களின் சிறுமைகளையும் கொடுமைகளையும் அவைகளின் மூலம் அவர்கள் அடைய விரும்பும் வெற்றியையும் நல்ல கலைத்திறமையுடன் படைத்

துள்ளார். அதில் அவர் மாபெரும் வெற்றியும் பெற்றுள்ளார் எனலாம்.

நிகும்பலை

மாணவர் தொடர்ந்து எழுதும் பரீட்சையைப் பற்றிய கதைக்கு "நிகும்பலை" என்று பெயரிட்டுள்ளார் புதுமைப் பித்தன். அது தான் அவருடைய சமுதாயப் பார்வை.

இதில் மாணவர்கள் கல்லூரிகளில் தேர்விற்காகப் படிக்கும் முறை, தேர்வு நோக்கோடு ஆசிரியர்கள் பாடங்களை நடத்தும் முறை, தேர்வெண்களைப் பற்றிய மாணவர்களின் நம்பிக்கை, தேர்வு எழுதும் முறை, அதன் பின் விளைவு என்பவைகளைப் பற்றிப் புதுமைப் பித்தன் தனக்கேயுரிய முறையில் விளக்குகிறார். அவைகளும் இன்றுள்ள கல்விமுறை—தேர்வு முறை—பற்றிய சமுதாய விமரிசனமாக அமைந்துள்ளன என்பதைக் காணலாம்.

தேர்விற்காகச் சேர்ந்து படிக்கும் இரண்டு மாணவர்களுடன் கதை தொடங்குகிறது. அவர்களின் பெயர்களை அறிமுகம் செய்வதிலேயே அந்தக்காலத்துக் கல்லூரி மாணவர்களின் ஆங்கில மோகத்தைப் புதுமைப்பித்தன் நையாண்டி செய்கிறார்.

"எதிரிலிருந்த மங்கிப் புகையடைந்த மண்ணெண்ணெய் விளக் கருகில், ஓர் மாணவன் கையிலிருந்த புத்தகத்தில் ஏகாந்திர சிந்தையாக இருந்தான். "அன்று இரவு அவனுக்குச் சிவராத்திரி. பரீட்சை நெருங்கினால் பின் மாணவர்களுக்குச் சிவராத்திரி ஏன் வராது?

"மிஸ்டர் ராமசாமி! மிஸ்டர் ராமசாமி!" என்று அழைக்கும் அவன் நண்பனின் குரல் கேட்டுக் கதவைத் திறக்கிறான். இருவரும் பி.ஏ. பரீட்சைக்குப் பணம் கட்டியிருக்கிறார்கள். வந்தவன் பெயர் நடேசன். இல்லை. மிஸ்டர் நடேசன்".

'மிஸ்டர்' என்னும் அடைமொழியைச் சேர்த்தே அழைப்பது, சொல்லுவது என்பதை நினைவூட்டுகிறார். 'அடிமை அரசர்களி னால் உண்டான நன்மைகள்' என்னும் பகுதியை ராமசாமி வாசிக்கத்தொடங்கினான். மிஸ்டர் நடேசனும் தமது மூளைக்குப் பக்க பலமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு, இரண்டு மூன்று நிமிஷம் கழித்து, "இதெல்லாம் 'எக்ஸாமினேஷ னுக்கு வராது வே; வந்தாலும் ஜமாய்த்து விடலாம். நம்ப புரொபசர் கொடுத்த நோட்சை எடுத்து நல்ல 'டாபிக்கலா' இரண்டு சப்ஜெக்ட்ஸ் வாசியும்" என்றார்.

'நோட்ஸ்'சின் 'ஆரோக்கிய நிலை' குறித்துப் புதுமைப்பித்தன் வருணிப்பதைப் பார்ப்போம். ''இருவரும் ஐந்து நிமிஷமாகத் தேடினார்கள். அட்டைகள் இரண்டும் அந்தர்த்யானமாகி பக்கங்கள் ஒன்றோடொன்று ஒத்துழையாமை செய்துகொண்டிருந்த ஒரு காகிதக் குப்பையை எடுத்தார்கள். அதை நோட்டுப் புஸ்தகம் என்பது உயர்வு நவிற்சி. எழுத்துக்கள் பிரம்ம லிபி! ஆதியும் அந்தமும் இல்லாத சிவனார் போல் விளங்கியது''. அதில் 'பர்மிய யுத்தங்களின் சுருக்கம்' என்ற பகுதியைப் படிக்க ஆரம்பித்தான் ராமசாமி.

''என்ன மிஸ்டர் இதைப் படிக்கிறீர்? போன செப்டம்பருக்குக் கேட்டாச்சே. மேலும், இந்த 'லெவன்த் அவரில் தரோ ஸ்டடி'' முடியுமா? 'வார்ஸ்' வந்த காரணங்களைப் படியும். 'ஈவண்ட்ஸ்' விட்டு விடும். 'எப்பெக்ட்ஸ்' படியும். 'பிரிப்பேர்' பண்ணவே தெரியலையே'' என்று சுருக்க வழி சொல்லித் தந்தான் மிஸ்டர் நடேசன். பரீட்சைப் பாராயணம் நடந்தது.

மத்தியானம். அகோரமான வெயில்! ''ஸ்! இந்த 'ஹெவிசன்'லே 'சப்ஜெக்ட்'ஸா? ஏதாவது 'லைட்'டா 'நான்டீட்டெயி'லை எடுத்துப்படி'' என்றான் மிஸ்டர் நடேசன். மேல்நாட்டு ஆசிரியர் எழுதிய நாவல் ஒன்றை எடுத்து முதலிலிருந்து ஆரம்பித்தான் மிஸ்டர் ராமசாமி. ''என்ன மிஸ்டர் உமக்குச் சொன்னாலும் தெரியவில்லையே. சட்டர்ஜி 'நோட்ஸ்' எடுத்துப் படியும். இதில் மூன்று 'டாபிக்ஸ்'. அதை அவன் நல்லா 'டீல்' பண்ணியிருக்கிறான்.''

கொஞ்சநேரத்தில் மிஸ்டர் நடேசன் பரிட்சையை மறந்தார் மிஸ்டர் ராமசாமி கையிலிருந்த புத்தகத்தையே மறந்தார் இருவரும் சுவாரஸ்யமாகக் குறட்டைவிட்டார்கள். அப்போது ''ஹால் டிக்கட்ஸ்' வந்து விட்டதாம்'' என்று சொல்லிக்கொண்டே மிஸ்டர் சண்முகம் என்னும் மாணவர் ஓடிவர, மூவரும் கலா சாலையை நெருங்கினார்கள். அப்பொழுதுதான் கலாசாலை ரைட்டர் தனது அறையைச் சாத்திப் பூட்ட எத்தனித்தார்.

''பிரதர், கொஞ்சம் தயவு செய்யணும்!'' என்று சண்முகம் ஓடிப்போய்க் கையைப் பிடித்தார். ''ஏன் சார், 'ஆபீஸ் அவர்'சில் வரக்கூடாது? எனக்குக் கொஞ்சம் 'பிஸினெஸ்' இருக்கிறது. சார்'' என்று பிரமாதப்படுத்திக் கொண்டார் ரைட்டர். சண்முகத்தின் கையிலிருந்து ஏதோ ஒரு சிறிய விஷயம், ரைட்டர் பையில் 'கிளிங்'

என்ற சப்தத்துடன் விழுந்தது. வேதாரண்யத்திலே கதவைத் திறக்கச் செய்யும்படி பாடினார்களாமே, அந்தப் பாட்டைவிடப் பன்மடங்கு சக்தி வாய்ந்தது! "உடனே ரைட்டர் முகம் மலர்ந்து உபசரிக்க, மூவரும் ஹால் டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு வந்தனர்."

1934இல் இந்தக் கதை வெளியானது என்று குறிக்கப்பெற்றுள்ளது. அந்தக் காலத்தில் விடுதலை பெறுவதற்கு முன்—கல்லூரி அலுவலகத்திற்குள்ளேயே இந்தக் கையூட்டு—லஞ்சம்—அன்பளிப்பு முறை இருந்ததை நாசூக்காகப் புதுமைப்பித்தன் இவ்வாறு குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

"எதிரே இவர்களுடைய சரித்திர ஆசிரியர் வந்தார். இவர் மூளையில் இல்லாதது சரித்திரம் சம்பந்தப்பட்ட மட்டில் பரிட்சைக்கு அவசியமில்லாதது என்று சொல்லிவிடலாம். அக்ஷரம் பிசகாமல் அவர் படித்த புத்தகங்களின் கதம்பமாக இருக்கும் அவர் பிரசங்கங்கள், சரித்திரங்களை யூனிவர்சிட்டிக் கேள்விகளின் விடைகளாக மாற்றிக் கற்றுக் கொடுப்பதில் நிபுணர்; பரிட்சையில் மாணவர்கள் தோற்காதபடி பார்த்துக்கொள்வதிலும் நிபுணர்.

"இவர்களைக் கண்டதும், "என்னடே! 'சப்ஜெக்ட்ஸ்' எல்லாம் ஆகிவிட்டதா? 'இண்டியன் ஹிஸ்டரி' முடித்து விட்டீர்களா?" என்று கேட்டார். "ஆம் சார்", என்றான் நடேசன். "இந்த மார்ச்சில், 'டல்ஹௌஸி'யில் ஒரு கேள்வி வருமப்பா. படித்தாகிவிட்டதா?" என்றார். "பாலிசி ஆப் லாப்ஸ்' தான் சார் அதில் முக்கியம்" என்றான் நடேசன். "இதைச் சொல்லு பார்ப்போம்," என்றார் புரொபசர். நடேசன் தனது சொந்த இங்கிலீஷில் சொல்லிக்கொண்டு வந்தான்.

"புரொபசர் இடைமறித்து, "இப்படி எழுதினால் உனக்குச் சுன்னம்தான். நீ என் 'நோட்சை'ப் படித்தையா?" என்று கேட்டுவிட்டு, "ராமசாமி, நீ சொல்லு பார்ப்போம்", என்றார் ராமசாமி பிளேட் வைத்தான் இடையில் ஒரு வார்த்தை திக்கிற்று; புரொபசர் அதைத் தொடர்ந்தே பாராயணம் பண்ணி முடித்தார். "கேர்புல்'லாகப் படியுங்கள். இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது" என்று புரொபசர் விடைபெற்றுக் கொண்டார்".

அந்தக்காலத்தில் வகுப்பறைகளில் கொடுக்கப்படும் நோட்சே கல்வியாய் இருந்ததை இந்தச் சிறிய கதைப் பகுதியின் மூலம் விமரிசனம் செய்கிறார் புதுமைப்பித்தன்.

''ஒரு வாரம் கழித்து. பரீட்சை தினம். கிண்டிக்கும் சர்வ கலாசாலைக்கும் ஒரே விதமான நியாயம், ஒரே விதமான போட்டி ஜயிக்கும் வரை, அல்லது பணம் இருக்கும் வரை. வரையாது கொடுக்கும் வள்ளல்களாக இருக்க வேண்டும். அதுவும் தினம் சராசரி வருமானம் ஓரணா மூன்று தம்பிடிகளாக இருக்கும் இந்தியப் பெற்றோரின் குழந்தைகள்.

''கலாசாலையில் காலை எட்டு மணியிலிருந்தே ஆர்ப்பாட்டம். உள்ளே பரீட்சைப் புலியைப் பத்து மணிக்கு மாணவர்களுக்காகத் தான் திறந்து விடுவதற்காகவோ என்று எண்ணும்படி, கதவுகள் சிக்கென்று அடைக்கப்பட்டிருந்தன. ''இன்றுதான் மாணவர்கள் வெகு கோலாகலமாக உடுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் கத்தைப் புத்தகங்கள். ஒரு கைக்கடியாரம். ஒவ்வொரு வர் வசத்திலும் குறைந்தது இரண்டு பௌண்டன் பேனாக்கள். சிலரிடம் ஒரு பெரிய ஸ்வான் இங்க் புட்டி. பரிட்சையாரம்பமாகி விட்டது!

சாயங்காலம் மணி ஐந்து, கலாசாலை மணியும் ''போ, முடிந்தது. இன்று போய் நாளை வா!'' என்பதுபோல் தொனித்தது. ஒவ்வொரு ஹாலிலும், ''ஸ்டாப் பிளீஸ்'' என்று காவலிருந்த புரொபசர்கள் கூவினார்கள். அதையும் கவனிக்காமல் மாணவர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். நான்கு வார்த்தை அதிகமாக எழுதிவிட்டால் பாசாகிவிடும் என்ற நம்பிக்கை, ஒரு பையனைப் பண்டிதர் இருப்பிற்கும் விடாமல் எழுதச் செய்கிறது.

சிலர் தங்கள் நம்பர்களைப் போட மறந்துவிட்டு வெளியேறி விடுவார்கள். அவர்களைக் கண்டுபிடித்து நம்பரைப் போடச் செய்யுமுன் மூளை கலங்கிவிடும். இப்படி வெளியேறியவர் ஒருவர் இருவர் தாங்களே வந்து போட்டுவிட்டு, தொழிலாளிகளின் வசை மொழி பெற்றுத் திரும்புவார்கள். நடேசன் கோஷ்டியும் வெளியே வந்தார்கள். ஆனால் உற்சாகமில்லை. ''எல்லாம் டவுட்புல்'லாக இருக்கிறது என்று பேசிக்கொண்டார்கள். இப்படித்தான் மற்ற நாட்களும். பரீட்சை ரிசல்ட் வந்துவிட்டது. மூவரும் தேறி விட்டார்கள். ''இப்பொழுது சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுவ தாகத் தீர்மானம். அதிலும் தேறிவிடுவார்கள்''. இவ்வாறு கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன். தேர்வு நிகழும் மண்ட பத்தையும், அங்கே மாணவர்கள் நடந்துகொள்ளும் முறையையும், தேர்வுக் கோட்பாட்டையும் நேர்முக வருணனையைப் போலத் தத்ரூபமாக விளக்கிக் கூறுகிறார்.

'நிகும்பலை' என்னும் கதையின் பொருள் மாணவர்கள் தொடர்ந்து தேர்வுகள் எழுதுவதே. இதற்கு இந்திரஜித் மறைவாக இருந்து யாகம் செய்த நிகும்பலையின் பெயரை ஏன் வைத்தார் என்று எண்ணிப் பார்க்கும்போது அவருடைய மேதைத்தன்மை வெளிப்படுகின்றது.

''சிறுகதையின் உயிர்நாடியாக இருந்து தானும் துடித்து, தன்னைப் படிப்பவர்களையும் துடிக்க வைப்பது அதன் பெயர். சிறுகதைக்குச் சூட்டும் பெயரை வைத்தே ஒருவரின் படைப் பாற்றலை எடைபோட்டுவிட முடியும். பொன்னை உரைத்துப் பார்க்கும் கல்லைப்போல சிறுகதைக்குப் பெயர் உறைகல்'' என்று பாராட்டுவார் இரா. தண்டாயுதம். (பாரதி முதல் சுஜாதா வரையில் - இரா. தண்டாயுதம்-பக். 35).

## 10. கலப்புத்திருமணம்

கலப்புத் திருமணங்களால் ஏற்படும் முரண்பாடுகளைக் கிண்ட லாகச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அதிலீடுபடுவோர் கொள்ள வேண்டிய எச்சரிக்கையை நினைவூட்டுகிறார் புதுமைப்பித்தன் எனலாம். ஏனெனில் அவர் கலப்புத் திருமணத்தின் எதிரியல்லர்.

**கோபாலய்யங்காரின் மனைவி**

காதல்மணமும் கலப்புமணமும் வெற்றி பெறுவதற்குக் கல்வி யறிவும் உணவும் பழக்கமும் வாழ்க்கைப் பண்புகளும் முக்கிய மானவை என்பதை எடுத்துக்காட்டுகிறது கோபாலய்யங்காரின் மனைவி என்னும் சிறுகதை.

''பாரதியார் தமது 'சந்திரிகை' என்ற நாவலிலே, கோபால அய்யங்காருக்கும் வீரேசலிங்கம் பந்துலு வீட்டில் வேலைசெய்து கொண்டிருந்த பெண்ணாகிய மீனாட்சி என்ற இடைக்குலப் பெண்ணுக்கும் பிரம்ம சமாஜத்தில் நடந்த கலப்பு மணத்தை வருணித்திருக்கிறார். கதையின் போக்கு கண்டதும் காதல்; என்ற கோபால அய்யங்காரின் இலட்சியத்துடன் - ஏன், பிரமை என்றும் கூறலாம் - முடிவடைகிறது. முடிவு பெறாத இரண்டாவது பாகத்தில் வருணிப்பாரோ என்னவோ? மனிதன், 'காதல் பெண்ணின் கடைக்கண் பணியிலே, அனலை விழுங்கலாம். புளித்த குழம்பையும், குழைந்த சோற்றையும் உண்ணச் சம்மதிப்பானோ என்னவோ? பின் கதையை என் போக்கில் எழுதுகிறேன். பாரதி

யின் போக்கு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில்லை'' என்னும் முன்னுரையுடன் புதுமைப்பித்தன் இந்தக் கதையை மிகவும் சுவையுடன் தொடங்குகிறார்.

''டெப்டி கலெக்டர் கோபாலய்யங்கார் தமது மனைவி மீனாட்சியை யழைத்துக்கொண்டு தஞ்சைக்கு வந்து ஒரு மாத கால மாகிறது. கோபாலய்யங்கார் இடைச்சியைக் கலியாணம் செய்து கொண்டார் என்று ஊரெல்லாம் கிசுகிசு என்ற பேச்சு! சிலர் போயும் போயும் இடைச்சிதானா அகப்பட்டாள் என்று பேசிக் கொண்டார்கள். படியாதவர்கள், யாரோ இடைச்சியை இழுத்து வந்து வைப்பாக வைத்திருக்கிறார் என்று அபிப்ராயப்பட்டார்கள்.

இவ்வளவும் கோபாலய்யங்காருக்குத் தெரியாது. வீட்டில் மீனாட்சிக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஒரு கிறித்தவ உபாத்தினி வந்ததும், முன்பிருந்த பிராமணப் பரிசாரகன் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டான். ஒருநாள் மீனாட்சி லவங்கப்பட்டை பெருஞ்சீரகம் முதலிய பொருள்களுடன் தன் குலாசாரப்படி சமைத்தாள். கோபாலய்யங்கார் குடிகாரர்தான், ஆனால் மாமிச பட்சணியல்ல. மீனாவின் கண்களைப் பார்த்துக் கொண்டே இரண்டு கவளம் வாயில் போட்டார். உடனே குடலைப் பிடுங்கியது போல் ஓங்கரித்து வாந்தி எடுத்தார். மாமிச உணவின் பாகம் என்ற நினைப்பில் ஏற்பட்டது.

பசி காதலை வென்றது. பதறிப்போய் தன் தலையைத் தாங்கின மீனாவை உதறித் தள்ளிவிட்டு, ஓட்டலிலிருந்து சாப்பாடு தருவித்து உண்ட பிறகு தான் கோபாலய்யங்காருக்குக் காதல் திரும்பியும் வந்தது.

''மீனா'' என்று கூப்பிட்டுக் கொண்டு அவர் உள்ளே வர, ''சாமீ!'' என்று எழுந்தாள் இவள்! அவள் கண்களில் இரண்டு துளிகள், அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் அகழியை எடுத்துக் காண்பித்தது. மீனாட்சி பணிப்பெண். அதிலும் பயந்த பெண். அதனால் கணவன் இஷ்டப்படி நடக்கத் தூண்டியதே யல்லாது, அவரிடத்தில் தன்னை மறந்த பாசம், லயம் பிறந்ததே கிடையாது!

''என்ன மீனா! உனக்கு எத்தனை தரம் அப்படி (சாமி) கூப்பிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன்! கண்ணா, இப்படி வா. என்ன இப்படிக் கறிக்குழம்பு வைத்தாய்?'' என்றார். ''இல்லிங்களே, இப்படித்தான் எங்க வீட்டிலே பருப்புக் கொளம்பு

வைப்பாங்க" என்றாள். "அதை அப்பொழுதே சொல்லி இருக்கக் கூடாதா? ஓட்டலில் சாப்பாடு எடுத்துவரச் சொன்னால் போகிறது. அது கிடக்கட்டும். இப்படி வா!" அவளைத் தழுவி அவர் முத்தமழை பொழிந்தார். அவளோ செயலற்ற பாவை போல இடங்கொடுத்தாள்! அவளையும் இதில் செயல்படுத்த நினைத்த அவர் "என்ன மீனா! ஒரு முத்தமிடு" என்று கேட்டார். நீண்ட தயக்கத்திற்குப் பிறகு ஒரு பயந்த முத்தம் அவர் கன்னத்தை ஸ்பரிசித்தது!

மீனாவின் பயத்தைப் போக்க அவர் ஒரு வழி செய்தார். "என்ன மீனா. உனக்கு இரத்தமே இல்லையே. இந்த மருந்தைக் குடி" என்று ஒரு கிளாசிலே ஒயினை ஊற்றிக் கொடுத்தார். அவளும் வாலிபப் பெண்தானே. அதுவும் ஒயின் உதவியும்கூட இருக்கும்பொழுது அன்று சிறிது பயத்தை மறந்தாள். அன்று கோபாலய்யங்காரின் மீது ஏற்பட்ட பாசம், வாலிபத்தின் கூறு. மீனா தன்னைக் காதலிப்பதாக எண்ணி அவர் மகிழ்ந்தார்.

II

கோபாலய்யங்கார் சிறிது கஷ்டப்பட்டு ஒரு பிராமணப் பரிசாரகனை சுப்புவையரை - நியமித்தார். சமையலறைப் பக்கம் கலெக்டர் அய்யங்காரோ அம்மாளோ வரக்கூடாது. பாத்திரங் களைத் தொடக்கூடாது, இருவருக்கும் பரிமாறுவதும் சமையல் செய்வதும் சுப்புவையரின் வேலை என்றும் திட்டமாயிற்று!

ஒருநாள் சாயங்காலம். கோபாலய்யங்கார் ஆபீசிலிருந்து வந்து தமது ஆங்கில வேஷத்தைக் களைந்து கொண்டிருந்ததை மீனா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் அவளுக்கு ஒரு பிரமை, ஆச்சரியம். மீனாவிடமிருந்து ஒரு முத்தத்தை எதிர் பார்த்திருந்த அவருக்குச் சிறிது ஏமாற்றம். "மீனா, என் பேரில் உனக்குப் பிரியமில்லை போலிருக்கிறது" என்றார். "என்ன சா(மி)...என்னாங்க அப்படிச் சொல்லுறிய? உங்க மேல பிரியமில்லா மலா?" என்று சிரித்தாள் மீனா. "வந்து இவ்வளவு நேரமாக ஒரு முத்தமாவது நீயாகத்தரவில்லையே!?" "எங்க ஜாதியிலே அது ஒண்ணும் கெடையாது. இப்போ!" என்றாள். கோபாலய் யங்காருக்குச் சுருக்கென்று தைத்தது!

"நாட்களும் வெகுவாக ஓடின. கோபாலய்யங்கார் ஒரு பொம்மைக்குக் காதலுயிர் எழுப்பப் பகீரதப் பிரயத்தனம் செய்து

கொண்டிருக்கிறார். இதில் தோல்வி இயல்பாகையால மது எனற மோகனாங்கியின் காதல் அதிகமாக வளர ஆரம்பித்தது'' என்று இந்த இடத்தில் புதுமைப்பித்தன் எழுதுவது ஆழ்ந்து எண்ணுவதற் குரியது.

தான் பணிப்பெண்ணாக இருந்தபொழுது வேளா வேளை களில் கிடைத்த பிராமண உணவு இப்பொழுது வெறுப்பைத் தருவது மீனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது! தகப்பனார் வீட்டில் நடக்கும் சமையலைப் பற்றி ஏங்கவாரம்பித்தாள். ஆபீஸ் பியூன் கோபாலக்கோனார் அனுபவம் உள்ள கிழவன். ஒருநாள் ரகசிய மாக மாமிச உணவு தயாரித்து வந்து மீனாவுக்குக் கொடுத்தான். ரகசியம் பரம கேட்டை விளைவிக்கும் என்று உணர்ந்த கோனார், கோபாலய்யங்கார் போதையிலிருக்கும் பொழுது மாமிச உணவைப் பழக்கப்படுத்த வழி சொல்லிக் கொடுத்தான்.

மீனாட்சி பிராமணத்தி ஆவது போய், கோபாலய்யங்கார் இடையரானார்!

இரண்டு வருஷ காலம் அவர்களுக்குச் சிட்டாகப் பறந்தது. மேல்நாட்டுச் சரக்குகளை உபயோகிப்பதில் தம்பதிகள் இருவரும் ஈடுபட்டதினால் மூப்பு என்பது வயதைக் கவனியாமலே வந்தது' மீனாவின் அழகு மறைந்து அவள் ஸ்தூல சரீரியானாள். கோபாலய்யங்கார் தலைநரைத்து வழுக்கை விழுந்து கிழப்பருவம் எய்தினார்,

இதை மறப்பதற்குக் குடி. ஆபீசிற்குப் போகுமுன் தைரியம் கொடுக்கக் குடி. வந்ததும் மீனாளின் சௌந்தரியத்தை மறக்கக் குடி. இருவருக்கும் பங்களா ஊருக்கு வெளியில் இரவு பத்து மணிக்கு மேல் அந்தப் பக்கம் போவோர், கலெக்டர் தம்பதிகளின் சல்லாப வார்த்தைகளைக் கேட்கலாம்,

''ஏ, பாப்பான்!'' என்று மீனாள் கொஞ்சுவாள். ''என்னடி எடச் சிறுக்கி!'' என்று கோபாலய்யங்கார் காதலுரை பகருவார். இருவரும் சேர்ந்து தெம்மாங்கு பாடுவார்கள். மீனாளின் 'டிரியோ டிரியோ' பாட்டில் கோபாலய்யங்காருக்கு - அந்த. ஸ்தாயிகளில் பிரியம் அதிகம்''.

இவ்வாறு முடிகிறது - கதை. இந்தக் கதையும் 1934 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. கண்டதும் காதல் என்னும் இலட்சியத்துடன் - ஏன், பிரமையுடன் என்றும்

கூறலாம். - தொடங்கி நிறைவேறும் கலப்புத் திருமணத்தில், எளிய உணவுப் பழக்கமும் வலிய பண்பாட்டுப் பழக்கமும் ஆற்றும் பங்கைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார் புதுமைப்பித்தன்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தமிழகத்தின் நிலையை, சாதியக் கட்டுப்பாடுகளின் தன்மையை - பிடிப்புகளின் வலிமையை - இந்தக் கதையின் மூலம் உணருகின்றோம், என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. இன்றைக்கும் இந்தக் குறை ஏற்படுவதற்கு வழி உண்டு - வாய்ப்புகள் உண்டு - என்னும் உணர்வோடு, இந்தக் கதையைக் கலப்புத் திருமணம் செய்து கொள்வோருக்குப் புதுமைப்பித்தன் தரும் எச்சரிக்கை என்று கொள்ளலாம்.

காதல்கூட ஒருவித போதைதான்! மயக்கம் தரும் பொருள் - உணர்ச்சிதான். ஒயின் சாப்பிட்டதும் மீனாள் சிறிது பயத்தை மறந்தாள்! காரணம், மயக்கம்! வெளிநாட்டுச் சரக்கை உபயோகப் படுத்தியபொழுது கோபாலய்யங்காருக்கு மாமிச உணவு தெரிய வில்லை! காரணம், அளவு கடந்த மயக்கம்! 'அதனால் மீனாள் பிராமணத்தி ஆவதுபோய், கோபாலய்யங்கார் இடையரானார்'.

இங்கே நாம் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்று உள்ளது. அது எது? மீனாளின் பயத்தைப் போக்குவதற்கும், அய்யங்காரின் மாமிச உணவை ஏற்றுக்கொள்ளுவதற்கும் காரண மாக இருந்த ஒயின் போதை "ஏ. பாப்பான்" என்பதையும், "எடச்சிறுக்கி" என்பதையும் மாற்றவில்லையே. மறக்கவில்லையே, போக்கவில்லையே, ஏன்? அதுதான் ஒயின் போதையைக் காட்டிலும் வலுவான ஜாதியப் போதையா?

**புதிய கூண்டு**

மதமாற்றம், அதனால் பாதிக்கப்பெற்ற இந்துக் குடும்பத்தின் நிலைமை, அதைச் சேர்ந்த தனியார்களின் போக்குகள் இவற்றை விவரிக்கும் 'புதிய கூண்டு' புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் ஒன்று.

மதம் மாறிச் செய்யப்பெறும் திருமணம் வெற்றி பெறுவதற்கு அடக்கமும், விட்டுக்கொடுக்கும் மனப்பண்பும், உயர்ந்த குண நலனும் அவசியம் என்பதை விளக்குகிறது 'புதிய கூண்டு' என்னும் கதை.

மதமாற்றம் செய்வதற்காகக் கிறிஸ்தவ மதத்தினர் மேற் கொள்ளும் செயல்முறைகளையும், அம்மதத்திற்குள்ளேயே

இருக்கும் கத்தோலிக்கர், புரோட்டஸ்டண்ட் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கிடையே காணப்படும் போட்டியையும், இந்துக்களின் மனித நேயமற்ற - தன்னலமான - போக்கையும், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பியர் மதவேறுபாட்டின் காரணமாக வெறியர்களாய், விரோதிகளாய் மாறி வாழ்வதையும் இந்தக் கதையில் அருமையாக வர்ணிக்கிறார் புதுமைப்பித்தன்.

தாமிரவருணியின் வடகரையில் அருவங்குளம் என்ற நாரணம்மாள்புரம் என்னும் சிறு கிராமம். ஆற்றில் பெயருக்கு மட்டிலும் ஓடிக்கொண்டிருந்த நீர், ஸ்படிகம் போல் களங்கமற்று மனிதனைக் குனிந்து அள்ளிக் குடிக்கும்படி வசீகரித்தது. ஆற்று மணலில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் இரு மாணவர்கள் நடந்து கொண்டிருந்தனர். இருவருக்கும் ஒரு கையில் புத்தகம், மற்றொரு கையில் போஜனப் பாத்திரம் என்ற மாணவச் சின்னங்கள். இருவரும் 'குடுத்துனி' மட்டும் அணிந்து இடையில் ஒரு நாட்டு வேஷ்டி கட்டியிருந்தனர்.

மூத்தவன் அதிதீக்ஷண்ய புத்தியுடையவனாயினும் கறுத்த கண்களும், கூரிய நாசியும், சற்று அகன்ற நெற்றியும் சற்றுத் தடித்த ஆனால் அழகான உதடுகளும் அவன் சிறிதே உணர்ச்சி வசப்படுகிறவன் என்பதைத் தெரிவித்தன. தம்பியின் மெல்லிய உதடுகள் திடசித்தமும், எதையும் தனது அறிவுத் தராசில் போட்டு நிறுக்கும் உறுதியும் உடையவன் என்பதையும் தெரிவித்தன. இருவரும் வேகமாக நதியைக் கடந்தனர்.

அவர்களின் விதவைத் தாய் மீனாட்சியம்மாள் இட்டிலி, முறுக்கு, அப்பளம் இட்டு அவைகளிலே தன் இரண்டு பொறுப்புகளின் சம்ரட்சணையையும் நடத்தி வருகிறாள். பாதிரிகளின் பள்ளிக்கூடத்துப் புண்ணியவான்களின் உதவியால் தன் புத்திரர்களுக்குக் கல்வி என்ற மகத்தான கண் திறக்கப்படுவதற்காகத் தனது பூஜைகளில் அவர்களுக்காகக் குல தெய்வத்தைத் தொழுது வந்தாள். ஆம்! தன் புத்திரர்களுக்குக் கல்வியை இலவசமாகக் கொடுப்பதால் வெள்ளைக்காரன் என்றால் மீனாட்சியம்மாளுக்குத் தெய்வத்திற்கு நிகர்.

மூத்தவன் கிட்டு புத்தகத்தை ஜன்னலில் வைத்துவிட்டு கால் முகம் கழுவி நேரே புறக்கடைக்கு ஓடிவந்தான். தம்பி அம்பியோ சட்டையைக் கழற்றிய பிறகு உள்ளே வந்தான். "என்னடா, தீட்டையும் கீட்டையும் அப்படியே உள்ளுக்குக் கொண்டு வர்றே?

அம்பிக்கு இருக்கிற புத்திகூட, ஏண்டா கிட்டு...'' என்று தாய் தலையில் அடித்துக் கொண்டாள். கிட்டு சிரித்துக் கொண்டே, ''அம்மா, உன்னைத் தொட்டு விடுவேன்; பேசாதே'' என்று நெருங்கினான். ''அடே, கட்டேலே போறவனே, சித்தெ மடியா கிடியா இரு'' என்று பதறினாள் மீனாட்சி.

இருவரும் காலைக் கழுவி விட்டு வெளியே சென்றார்கள். இருவரும் பாளையங்கோட்டையில் இருக்கும் கிறித்தவக் கலாசாலையில் படிக்கிறார்கள். கிட்டு என்னும் கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. பரீட்சைக்கும், அம்பி என்னும் ராமசாமி இண்டர்மீடியட் பரீட்சைக்கும் செல்லவிருக்கிறார்கள்.

II

''பாளையங்கோட்டை கிறிஸ்தவக் கலாசாலை ரோமன் கத்தோலிக்க மதத்தினருடையது. அதாவது இருள் சூழ்ந்த பிரதேசங்களில் கர்த்தருடைய மதத்தைப் பரப்ப ரோமாபுரியிலிருந்து அனுப்பப்படும் கருவி. தன் கையை வைத்தே தன் கண்ணில் குத்திக் கொள்ள வைப்பது போல், பழகிய யானையை வைத்துக்கொண்டு காட்டு யானைக் கூட்டங்களைப் பிடிப்பது போல், இந்தத் தொழில் நடந்து வந்தது.

''ஞானாதிக்கம் என்ற கிறிஸ்தவச் சாமியாருக்குக் கிட்டுவின் மீதும், அம்பியின் மீதும் ஒரு கண். அதாவது ரோமாபுரியில் பேதுரு அப்போஸ்தலர் கட்டிய மகத்தான கோவிலின் சக்தியைப் பரப்ப இந்த இருவரும் ஏற்றவர்கள் என்பது அவர் துணிபு. அதனால் இருவரைப் பற்றியும் மிக்க கவலை கொண்டார். இது மறைமுகமாகவே நடந்தது. ஆனால் நாளடைவில் கிட்டுவை மிக எளிதில் வசப்படுத்தி விடலாம் என்றும், அம்பியிடம் தம் முயற்சி சாயாது என்றும் கண்டுகொண்டார்.

''ஞானாதிக்கம் சாமியார் ஓர் உண்மைக் கத்தோலிக்க பாதிரியார். அவர் தமக்குத் தோன்றிய உண்மைகளுக்குத் தம் முழு வாழ்க்கையையும் அர்ப்பணம் செய்தவர். அம்பியையும் வசப்படுத்துவதற்கு ஒரு புது வழியைத் தேடிக்கொண்டிருந்தார். ஏனெனில் அம்பியிடம் கிறிஸ்தவ தர்மத்தையும் இந்து சமயத்தின் தவறுகளையும் பற்றித் தர்க்கிக்க ஆரம்பித்தால் அதற்கு அவன் இடம் கொடுப்பதே இல்லை. ''தர்க்க சாஸ்திரமும், சமயமும் ஒத்து வராது; வேண்டுமானால் எங்கள் பண்டிதர்களிடம் தர்க்கம் செய்து

கொள்ளுங்கள்'' என்று கூறிவிடுவான். ஆனால் கிட்டுவை உணர்ச்சியில் மயங்கக்கூடிய கிட்டுவைத் தர்க்கத்திற்கு இழுக்காமல் கிறிஸ்தவ நாயன்மார்களின் தியாகத்தையும் தரிசனத்தையும் காண்பிக்கும் இலக்கியங்களினால் பண்படுத்தி வந்தார்.

மேலே கூறிய மூன்று பத்திகளிலும் புதுமைப்பித்தன்' கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கல்வியை இலவசமாகப் பரப்பும் நோக்கில் மறைமுகமாக ஆனால் வலுவாகச் செய்யும் கிறிஸ்தவச் சமயப் பரப்புதலை நாசுக்காகவும் நயமாகவும் எடுத்துக்காட்டு கின்றார். ''தன் கையை வைத்தே தன் கண்ணில் குத்திக்கொள்ள வைப்பதுபோல், பழகிய யானையை வைத்துக்கொண்டு காட்டு யானைக் கூட்டங்களைப் பிடிப்பதுபோல் இந்தத் தொழில் நடந்தது'' என்பது அன்றைய கிறிஸ்தவப் பாதிரியார்களைப் பற்றிய புதுமைப்பித்தனின் வேகமான வலுவான விமரிசனம் எனலாம்.

III

மேலும் கதையைத் தொடர்ந்து எழுதும்போது புதுமைப் பித்தன், திருநெல்வேலி மாவட்டத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள் இந்துக்களை எவ்வாறு கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினார்கள் என்பதை ரசமாகக் கூறுகிறார்.

''ஸ்ரீ ஜான் சகரியாஸ் நாடாரின் முன்னோர்கள் புரோட்டஸ்ண்ட் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது திருநெல்வேலி ஜில்லாவிலே ஒரு ரசமான கதை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், இங்கிலாந்து வியாபாரப் பொருள் உற்பத்தி முறையில் ஒரு நூதன வழியைக் கடைப்பிடித்தது. பொருள்களை ஏக காலத்தில் நூற்றுக்கணக் காகச் செய்து குவிப்பதில் பெரும் நம்பிக்கை வைத்தது; அதே சமயத்தில் பாதிரிகள் இந்தியாவின் தெற்கு மூலைகளில் நூற்றுக் கணக்காக ஞான ஸ்நானம் கொடுப்பதில் நம்பிக்கை வைத்தார்கள். அவர்கள் நாசரேத், மெய்ஞ் ஞானபுரம் முதலிய பிரதேசங்களை அடைந்ததும் தாங்களே கர்த்தர் பெருமான் என நினைத்துக் கொண்டு, அங்கிருந்த நாடார்களை நீரைத்தெளித்து, ''நீங்கள் கிறிஸ்தவர்களாகக் கடவது!'' என்றதன் பயனாக விளைந்த வற்றில் சகரியாஸ் குடும்பமும் ஒன்று''.

அங்கிருந்த புரோட்டஸ்டண்ட் பள்ளிக்கூடத்தின் தலைமை யாசிரியரான ஸ்ரீ ஜான் சகரியாசின் ஒரே மகள் லில்லி அற்புதம் ஜயலக்ஷ்மி. பிரேமையினால் தாய் தந்தையர் இருவரும் அவளுக்கு

அடிமைகள். "தமிழ்க் கவிஞர்களின் கனவுகள் எல்லாம் திரண்டு வடிவெடுத்தது போன்றது அவள் தேக அமைப்பு. கிறிஸ்தவ சமூகத்தின் சுதந்திரமும், சிறுமைப் புத்தியும், அறிவும் படைத்தவள்.

அம்பி, இந்து தர்மம் என்றால் ஏதோ புனிதமான பொருள் என்று அவளை வெறுப்புக் கண்களால் நோக்கினான். அவளைப் பார்க்குந்தோறும் ஒரு பரிதாபம் அவனுக்குத் தோன்றும், இந்துப் பெண்ணாக, நாடாராகவே இருந்துவிட்டாலும் காதலிக்கலாம் என்று கனவில் இருப்பவனுக்கு இது இயற்கைதானே? அற்புதம் ஜெயலக்ஷ்மி அவனை (அம்பியை) அஞ்ஞானி என்ற முறையில்தான் அறிந்திருந்தாள். அதுவும் அல்லாமல் அழகை மறைக்கும் தரித்திரமும், குடுமியும் அவனை அவள் அறிவதற்குப் பெருந்தடையாக இருந்தன. ஆனால் அவன் அறிவுத் திறமையை வியக்காமல் இருக்க முடியவில்லை. ரசாயன அறையில் இருவருக்கும் அடுத்தடுத்த மேஜையானாலும், இருவரும் அந்த இரண்டு வருஷங்களில் இரண்டு முறை பேசியிருப்பார்களோ என்னவோ? அவர்கள் பேசாதது கூச்சத்தினால் அல்ல.

அன்று இருவரும் ரசாயன சோதனையில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஜயலக்ஷ்மியின் பக்கத்தில் ஒரு பாட்டில் டபீர் என்று வெடித்து அவள் உடைகளை நாசமாக்கிவிட்டது. ஜயா பயந்து போய் கூக்குரலிட்டாள். "மிஸ்டர் ராமசாமி! இந்த மாதிரிக் குறும்பு செய்யும் ஒரு கோழை என்று தங்களை நான் நினைக்கவில்லை". "ஒரு இந்து கோழையல்ல" என்றான் அம்பி. அவளுக்கு இது தன் மதத்தினரைக் கேலி செய்த மாதிரிப்பட்டது உடனே கத்தோலிக்கராயினும் கிறித்தவர்தானே என்று நேராக ஞானாதிக்கம் சாமியாரிடம் சென்று விஷயத்தைச் சொல்ல, தன் லட்சியத்திற்கு ஒரு வழி அகப்பட்டதென்று நினைத்தார் அவர். அவ்விருவரையும் தமது மதத்திற்குக்கொண்டுவரும் வழி என்று நினைத்து, அவளைப் பார்த்துச் சிரித்தார். "உனக்கு ஹாஸ்ய உணர்ச்சி போதாது. நான் அவனைக் கண்டிக்கிறேன்' என்றார்.

## IV

ஜயாவிற்கு அம்பியை எப்படியாவது தண்டனை பெறச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. அம்பியினுடைய அண்ணன் கிட்டுவினிடம் முறையிட நினைத்தபோது, அவன் எப்பொழுதும் பெண்களுடன் பேசிப்பழகாததால் நடுங்குவதைக் கண்டாள்,

ஜயலக்ஷ்மிக்கு உள்ளூற நகைப்பு. இந்த அஞ்ஞானிகள் பெண்களுடன் பேசுவதென்றால் என்ன இவ்வளவு கோழையாக இருக்கிறார்கள்! ஒரு கிறிஸ்தவப் பையன் இப்படி இருப்பானா? அவள் அன்று மத்தியானம் நடந்ததை, அம்பி செய்ததைக், கூறினாள்.

''என்னடா அம்பி! இத்தனை நாள் உன்னை மனிதனாக நினைத்திருந்தேன். உனது 'கிளாஸ் மேட்'டினிடம், அதுவும் ஒரு பெண்ணிடம் இந்த மாதிரிக் குறும்புத்தனமாக நடக்கலாமா?'' என்று கோபித்தான் கிட்டு, ''தாங்கள் எத்தனை நாளாக இந்தக் காலேஜில் பிரின்சிபால்'' என்று அம்பி கிட்டுவைக் கேட்டபோது கோபம் கொண்ட கிட்டு, அவனுடைய கன்னத்தில் பளீரென்று அறைந்தான்.

''மிஸ்டர் கிட்டு! நிறுத்துங்கள் இதென்ன? நிறுத்துங்கள்...', என்றாள் ஜயா, ''நீயா அண்ணன்?'' என்று கூறிக்கொண்டே அம்பியும் கிட்டுவுக்கு இரண்டு குத்துவிட்டான். ''அட மிருகமே'' என்று அம்பியைப் பார்த்துக் கத்திவிட்டு கீழே விழ இருந்த கிட்டுவைத் தாங்கினாள். கைக்குட்டையால் அவன் முகத்தைத் துடைத்தாள். சற்று விசிறினாள். ஜயாவின் முகம் அவனுடைய மார்பில் மறைய, அவளை வாரியெடுத்துத் தனக்குச் சொந்தமாக்கினான். அவள் அவனைத் தன்னுள்ளத்தில் சிறைசெய்தாள்!

## V

ஜயா அந்த முதல் உணர்ச்சியில் தன்னை மறந்ததாக நொந்து கொண்டாளாயினும், கிட்டுவை அடிக்கடி சந்தித்தாள்; அதனால் அவள் ஓர் அஞ்ஞானி என்ற எண்ணமும் தோன்றாமல் ஒழிந்தது. ''கிட்டு... நாம் இப்படியே... பிறகு என்ன செய்வது?'' என்று கேட்டாள் கிட்டுவிடம். வருங்காலம் என்பது அந்தகாரம் போல் கிட்டுவின் அறிவை மறைத்தது.

''ஜயா, என்ன செய்வது? நீ சொல். நான் கேட்கிறேன்...'' என்றான். ''நீ எங்கள் மதத்தைத் தழுவி விடு... அப்புறம் கஷ்டமில்லை. எனக்காக நீ செய்வாயோ!''. அவளை இறுக அணைத்துக் கொண்டு, ''ஆ... ஆக... ட்டும்'' என்றான் கிட்டு. இருவரும் சகரியாஸ் நாடாரிடம் சென்றார்கள். முதலில் திடுக்கிட்ட அவர் கடைசியாக அனுமதி தரவேண்டியிருந்தது. அதில் பிறகு அவருக்கு இரட்டிப்புச் சந்தோஷம், ஒன்று தமக்கு ஒரு பிராம்மண மாப்பிள்ளை கிடைப்பது. இன்னொன்று தம்முடைய மகளின்

கலியாணத்தினால், அநியாயமாகச் சாத்தானின் நரகராஜ்ஜியத்திற்குப் போகாது ஓர் ஆவியைக் கர்த்தரின் பரமண்டலத்திற்குச் சேர்க்க முடிந்தது என்பது.

பரீட்சை முடிந்ததும், கிட்டுவிற்கு ஞான ஸ்நானத்துடன் திருமணத்தையும் நடத்திவிடுவது என்றும், அங்கிருந்த ரெவரண்ட் பீட்டர்சன் துரை உதவியால் புரோட்டஸ்டண்ட் கல்லூரியில் ஓர் உபாத்தியாயர் உத்தியோகத்தை வாங்கிக் கொடுப்பது என்றும் பேசி முடிந்தது. கிட்டு, தன் வாழ்க்கைப் பிரச்சனைகள் இவ்வளவு எளிதாக, இனிமையாக நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை. மேலும் எவ்வளவு நாசுக்காக நாகரிகமாக இருக்கிறது என்பதில் மிகுந்த குதூகலம். போகும்போதெல்லாம் காபி அருந்தப் பழகிக் கொண்டான். ஆனால் மாமிச உணவுகளைப் பற்றி வாசனை கூடப் படாமல் ஜாக்கிரதையாக ஐயா இருந்து வந்தாள். தன் வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் அங்கு இருண்டு சிதைந்து கிடக்கும் தரித்திரக் கோலம் கிட்டுவின் மனதில் தாயின்மீதும் ஒரு வெறுப்பைத் தோற்றுவித்தது.

பரீட்சை முடிந்த பிறகு ஒருநாள் மத்தியான்னம் கிட்டு, கிறிஸ்தப்பர் கிருஷ்ணமூர்த்தியாகி, ரெவரஸ்ட் பீட்டர்சனின் முன்பு ஐயாவைத் திருமணம் செய்துகொண்டான். இந்தச் செய்தி மீனாட்சியம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அம்பியைத் திடுக்கிடச் செய்தது. ஞானப்பிரகாசம் சாமியாரை அம்பி சந்தித்தான். அவருக்குக் கிட்டுவின்மீது புரோட்டஸ்ண்ட் மதத்தைத் தழுவியதில் அடங்காத சீற்றம். இந்து மதத்திலே ஓர் அஞ்ஞானியாகக் காலங் கழிக்க முரணி இருந்தாலும் அவ்வளவு கோபம் இருக்காது. ''அந்தச் சைத்தானின் மதத்தினுடன் நீ ஒன்றும் வைத்துக் கொள்ளக்கூடாது'' என்று புத்தி கற்பித்து அம்பியை அனுப்பிவைத்தார்.

நேராகத் தாயிடம் வந்து நடந்ததைக் கூறினான் அம்பி. உடனே அவள் பாளையங்கோட்டையில் சகரியாஸ் நாடாரின் வீட்டின் முன் சென்று ''கிட்டு! கிட்டு!'' என்று பிரலாபித்தாள். தெய்வத்தையும் தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு கிட்டுவை வரும்படி மன்றாடினாள். வந்தால், இந்து சமூகம் சேர்த்துக் கொள்ளுமா? அதுவும் அவளுக்குத் தெரியும்; பெற்ற மனம்.

கிட்டுவிற்கு இது பெரிய அவமானமாக இருந்தது. தன்னுடைய புதிய மாமனாரைப் போலீசுக்கு அனுப்பிவிட்டு,

வெளியே விறுவிறென்று வந்து, "வர முடியாது! கூச்சல் போடாதே, போ" என்று அதட்டிவிட்டு உள்ளே சென்று விட்டான். அம்பி, தன் தாயை ஒரு ஜட்காவில் தூக்கிப் போட்டு வண்டியை வேகமாகவிடச் சொன்னான். கிறிஸ்தவச் சகோதரர்கள் 'ஓ' வென்று கூவிக் கேலி செய்தார்கள். அம்பியின் சாந்தமான முகம், இருதயத்தில் கொட்டும் இரண்டாயிரம் தேள்களின் விஷத்தைச் சகித்துக் கொண்டிருந்தது!

இருவரும் அக்கிரகாரத்தெருவில் இருக்கும் தங்கள் இடிந்த குச்சினுள் சென்றதும் அம்பி விளக்கை ஏற்றினான். எண்பது வயதுக்கு மேலான தீக்ஷிதர் அம்பியை நோக்கி வந்தார். "அம்பி, நான் ஊருக்கு நல்லவன்டாப்பா. நீயும் நல்லவன். ஊரோடு ஒக்க ஓடு. மடப்பயல் கிட்டு செய்ததற்காக உங்களை விலக்கி வைத்திருக்கிறார்கள். ஊரார் என்ன செய்யலாம்? விதி! இங்கிருந்தால் பிரயோஜனம் இல்லை. விலகிண்டுட்டா ஒருவருக்கும் கஷ்டமில்லை...". "அப்படியா! அதற்கென்ன சரிதான்" என்றான் அம்பி.

## VI

கிட்டுவின் மனசில் பேய்கள் சுதந்திர நடனம் புரிந்தன. மனம் குழம்பியது. இருள்! ஒரு பக்கம் தாய்; மறுபுறம் ஜயா! அன்று நெடுநேரம் அவர்களிருந்த அறை மௌனமாக இருந்தது. சாந்தி பிறக்கவில்லை! பயத்தில் பிறந்த ஒரு யோசனையால் ஜயா கீழே சென்று கறிவடையை எடுத்து வந்து அவன் வாயில் ஊட்டினாள், யந்திரம் மாதிரி அதைக் கடித்தலும், ஏதோ கடிபடாமல் ஜவ்வு போல் தட்டுப்பட, "இது என்ன ஜயா?" என்றான். ஒரு புன் சிரிப்புடன் இரகசியமாக "கறிவடை" என்றாள்.

"ஜயா! உன் காதல் எனக்குப் போதாதா! ரப்பரையுமா தின்ன வேண்டும்" என்று மாறிய முகத்துடன் வடைகளைச் சிதறிவிட்டு, "போ! போ!" என்று இரைந்தான். ஜயாவிற்கு நெஞ்சில் வாள் கொண்டு குத்தியதுபோல் இருந்தது. அவனுடைய நிலையைக் கண்டு வெளியே சென்று விட்டாள். அன்று இரவு தலைவிரி கோலமாக தலைவாயிற்படியில் அவள் படுத்துக்கிடந்தாள். அது அவனுக்கும் தெரியாது; வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியாது. அன்றிலிருந்து அவளும் மாமிச உணவைத் தொடுவதில்லை.

## VII

அம்பி கைலாசபுரத்தில் இரண்டு ரூபாய்க்குள் ஒரு குடிசை வாடகைக்கு எடுத்தான். வேளாளத் தெருவில் இருந்துகொண்டு மீனாக்ஷியம்மாள் முறுக்கு, அப்பளம் விற்றுக் காலட்சேபம் செய்ய முயலுவதென்றும், அம்பி ஒரு வேலை தேடிக்கொள்வதென்றும் ஏற்பாடு. நாலைந்து மாதங்கள் சென்றும் அம்பிக்கு வேலை கிடைக்கவில்லை. காலையிலிருந்து பட்டினியோடு வேலை தேடி விட்டுச் சோர்வோடு வீட்டிற்கு வந்தபோது, மீனாக்ஷியம்மாள் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். மருந்திற்கு என்ன செய்வது?

அப்போது கிட்டுவிடமிருந்து மணியார்டர் வந்திருந்தது. அதைத் திருப்பி அனுப்பிவிட்டுக் கோபமாக கிட்டுவிற்கு ஒரு 'கார்டு' எழுதினான். "ஸ்ரீ கிறிஸ்தபர் கிருஷ்ணமூர்த்தி அவர் களுக்கு, தங்கள் மணியார்டர் எங்களுக்கு அநாவசியம். இரத்தத் தையும் வாழ்நாட்களையும் தியாகம் செய்தவருக்குப் பதில் உபகாரமாக, அவளுடைய நினைப்பே இல்லாமல், பொறுப்பை உதறித் தள்ளின ஒருவருடைய போலி அன்பு அல்லது பச்சாதாபம் அவளுக்கு வேண்டாம். இனியாவது தயவு செய்து எங்களைப் புண்படுத்தாதிருந்தால் போதும். மடிந்தாலும் இந்து தர்மத்திற் காக மடிவோம்! இனியாவது அந்த அன்பு மட்டிலும் இருந்தால் போதும்" - இப்படிக்கு ராமசாமி.

இந்தக் கார்டு கிட்டுவின் இருதயத்தைப் பிளந்தது. ஜயாவைப் போல ஒரு சகதர்மிணி அகப்படாள் என்பதோடு வாழ்க்கையின் லட்சியம் முடிவடைந்துவிடுகிறதா? கிறிஸ்தவ மதம், 'நான் சொல் வதை நம்பு; நீயாக ஆலோசிக்க உனக்கு அனுமதி இல்லை, என்கிறது. இந்து மதம், 'நீ என்ன வேண்டுமானாலும் எண்ணு; ஆனால் சமூகக் கட்டுப்பாடு என்ற வேலியைத் தாண்டாதே' என்கிறது. இவற்றில் எது பெரியது? குழப்பம் அடைந்தான் கிட்டு. எப்படியாவது தாயைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டான்.

நாட்கள் கழிந்தன. ஒருநாள் சாயந்தரம் மீனாட்சியம்மாளின் நினைவு தடுமாறியது. கிட்டுவும் துணிந்து தன் மனைவியுடன் வந்திருந்தான். "நான் வெளியில் நிற்கிறேன்; பார்த்துவிட்டு வாருங்கள்" என்றாள் அவள். கிட்டு உள்ளே சென்றதும், தாயின் சாயை படுக்கையில் கிடந்ததைக் கண்டு, திடுக்கிட்டான். "இது தான் உன் வேலை, பார்த்தாயா? என்றான், அம்பி. கோபம்

அடைந்த கிட்டு, "நான் எனது லட்சியத்தை அடைந்தேன். அதற்கு யார் தடை?" என்றான். "ஒரு பெண்ணுக்காக அசட்டுத் தனமான மதந்தான் உனது லட்சியமோ? தனது தர்மத்தைப் பற்றிக் கேட்டாவது இருக்க வேண்டும். லட்சியம் என்ன குட்டிச் சுவர்?" என்றான்.

இருவருக்கும் வாக்குவாதம் வலுத்தபோது, மீனாட்சியம்மாள் விழித்தாள். 'தெய்வமே! நீ இருக்கிறாயா? என் இரத்தமாகிய குழந்தைகள் இரண்டிற்கும் சண்டையை உண்டுபண்ணி விட்டதே, தர்மமா?' என்று பேசிய பின் களைப்படைந்து சாய்ந்தாள். அவள் ஆவியும் விடுதலை பெற்றது! "போ! வெளியே" என்ற அம்பியைப் பார்த்து, "என் தாய்" என்றான் கிட்டு. அப்போது தைரியமாக உள்ளே நுழைந்த ஜயா, "இந்த இடத்திலா சண்டை? நீங்கள் ஆண் பிள்ளைகளா?" என்று கேட்டாள்.

ஓடிச்சென்று மீனாட்சியம்மாளை மடிமீது எடுத்துக் கிடத்திக் கொண்டு கதறினாள். இவள் செய்கை, இருவர் மனசிலும் ஒரு சாந்தியைத் தந்தது. அம்பிக்கு அவள் செய்கை அவன் முன் அவளைப் பெரிய புனிதவதியாக்கியது. சரீரத்தைக் கிடத்திவிட்டு அவள் "போய் வருகிறோம்" என்றாள். "நீ ஒரு இந்துப் பெண்" என்ற அம்பியிடம், "நான் கிட்டுவின் மனைவி" என்றாள் ஜயா. இருவரும் பின் சென்றுவிட்டார்கள். அம்பி அந்த அறையில் இருந்து, அந்தப் புனிதவதியான தாயின் சரீரத்திற்குச் சாந்தியைக் கொடுக்க மனித உலகால் முடியாது போனதைப் பற்றிக் குமுறினான். 'அதுதான் வாழ்க்கை!' என்று கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன்.

இந்தக் கதையின் தொடக்கத்தில், பிராமணக் குடும்பங்களில் நிலவி வந்த 'பிராமணரல்லாதாரைத் தொட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளே கைகால்களைக் கழுவாமல் வரக்கூடாது' என்னும் உடல் தீட்டுக் கொள்கையை நாசுக்காக நையாண்டி செய்கிறார்; மேலும் படித்த இளைஞர்கள் இடையில், அதுவும் இந்து மதப்பற்றுச் சற்றுக் குறைவாக இருக்கும் இளைஞர்கள் இடையில் அந்த எண்ணம் அவ்வளவு வலுவாக இடம்பெறவில்லை என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார் புதுமைப்பித்தன். 'உடல் தீண்டாமையை வற்புறுத்தும் மடி பற்றிய விமரிசனமாக இதைக் கொள்ளலாம்.

'இந்து மாணவர்கள் அறிவுக் குறைவானவர்கள், கோழைகள் என்னும் எண்ணம் கிறித்தவ மாணவர் மத்தியிலும், 'கிறித்தவ

மாணவர்கள் என்னதான் அறிவும் சுதந்திர உணர்வும் பெற்றிருந் தாலும், சிறுமைப் புத்தி படைத்தவர்கள், பரிதாபத்துக்கு உரியவர் கள்' என்னும் எண்ணம் இந்து மாணவர் மத்தியிலும் நிலவி வந்ததை நயமாக எடுத்துக் காட்டுகிறார். (சான்று ஐயாவின் பண்புநல வருணனை)

இந்து மதத்திற்கும் கிறிஸ்தவ (கத்தோலிக்க) மதத்திற்கும் இருக்கும் வேறுபாட்டையும் வெறுப்பையும் விட, கிறிஸ்தவ மதத்திலேயே கத்தோலிக்க மதப்பிரிவிற்கும் புரோட்டஸ்டண்ட் பிரிவுக்கும் உள்ள வேறுபாடும் வெறுப்பும் மிகுதியாக இருப்பதை யும் அருமையாக எடுத்துக்காட்டுகிறார்.

சான்று : 'அந்தச் சைத்தானின் மதத்தினுடன் நீ ஒன்றும் வைத்துக் கொள்ளக்கூடாது' என்று ஞானப்பிரகாச சாமியார் அம்பியிடம் கூறியது.

ஒருமுறை கிறிஸ்தவராக மாறிய இந்துவை மீண்டும் இந்து மதம் ஏற்றுக்கொள்ளுமா என்னும் கேள்வியைக் கேட்பதன் மூலம் மதம் மாறுவதில் இருக்கிற இறுகிய தன்மையைத் தெளிவுபடுத்து கிறார். மதம் மாறியவர்கள் உள்ள குடும்ப உறுப்பினர்களை யெல்லாம் சாதியை விட்டு—ஊரைவிட்டு விலக்கி வைக்கும் கொடுமை; அதனால் அம்பியும் மீனாட்சியும் கைலாசபுரத்தில் வேளாளத் தெருவில் குடியிருக்க வேண்டிய நெருக்கடி ஆகியவைகள் சுட்டப்பெறுகின்றன.

ஐயா போன்ற ஒரு சகதர்மிணி என்றாலும் தனக்குப் பிடிக்காத—தன் உணவுப் பழக்கமாயில்லாத—கறிவடையை அவள் வாயில் ஊட்டியபோது, மாறிய முகத்துடன் வடைகளைச் சிதறி விட்டு 'போ, போ' என்று கிட்டு கதறியதற்குக் காரணம் என்ன? மதம் மாறிய காதல் மணமானாலும் கலப்பு மணமானாலும் அதன் வெற்றிக்குக் கல்வியறிவோடு உணவுப் பழக்கமும் இன்றியமை யாதது என்பதை இது காட்டுகிறது. 'அன்றிலிருந்து அவளும் மாமிச உணவைத் தொடுவதில்லை' என்கிறது கதை.

மடிந்தாலும் இந்து தர்மத்திற்காக மடிவோம் என்று முழக்க மிட்ட அம்பி, அசட்டுத்தனமான மதந்தான் உனது லட்சியமோ என்று கிட்டுவைப் பார்த்துக் கேட்ட அம்பி, ஐயாவைப் பார்த்து "நீ ஒரு இந்துப் பெண்" என்று கூறியபோது, அவள் "நான் கிட்டுவின் மனைவி" என்றாள். கிறிஸ்தவனாக மாறிய கிட்டுவின் உணவுப் பழக்கத்தை—மாமிச உணவைத் தொடுவதில்லை என்னும்

உணவுப் பழக்கத்தை—மேற்கொண்டதாலேயே ஜயாவினால் கிட்டுவின் மனைவியாக வாழ முடிந்தது.

மதம் மாறிய கலப்புத் திருமணத்தில் உணவுப் பழக்கத்தின் பங்கு பற்றிய விமரிசனமே 'புதிய கூண்டு' சிறுகதை எனலாம். இங்கே 'கோபாலய்யங்காரின் மனைவி' கதையில் வரும் மீனாட்சி யையும், 'புதிய கூண்டு' கதையில் வரும் ஜயாவையும் ஒப்பிட்டுக் காணலாம்,

'கோபாலய்யங்காரின் மனைவி' கதையில் வரும் மீனாட்சி கல்வியறிவில்லாத கிராமத்துப் பணிப்பெண். அவளால் மாமிசக் குழம்பையும் கருவாட்டுச் சாப்பாட்டையும் மறக்க முடியவில்லை. ஆகவே அவள் திருட்டுத்தனமாகத் தனது உணவுத் தேவையை ஈடுகட்ட முயற்சி செய்தாள். கணவனுக்கும் மாமிச உணவுப் பழக்கத்தை உண்டாக்கிவிட்டாள். ஆகவே ஐயங்கார் இடைய ரானார்! அதாவது கணவன், மனைவி சாதியானார்!

'புதிய கூண்டு' கதையில் வரும் ஜயா, கல்லூரிக்கல்வி பெற்ற கிறித்தவப் பெண். அறிவுள்ளவள். தன்னை மணந்துகொள்வ தற்காகக் கிறிஸ்தவ மதத்திலே சேர்ந்ததோடு மட்டுமில்லாமல் தன் வீட்டுக்கே வந்துவிட்ட பார்ப்பன இளைஞன் கிட்டுவிற்குப் பிடிக்காத மாமிச உணவைத் தானும் தொடுவதில்லை; மறந்து விட்டாள். ஆம். பார்ப்பன இந்து இளைஞன் கிறித்தவனாக மாறி னதைப் போலவே கிறித்தவப் பெண் ஜயாவும் உணவுப் பழக்கத்தில் இந்துவாக மாறிவிட்டாள்!

## 11. கயிற்றரவு

பொருளாதார வசதியில்லாத ஒருவர் தனக்கு விரைவில் வரவிருக்கும் கணிசமான தொகையில் கார் வாங்கத் திட்டமிட் டுள்ளதாகக் கூறியபோது, எரிச்சல் அடைந்த புதுமைப்பித்தன் "வேஷ்டியை அவிழ்த்துத் தலைப்பாக் கட்டாதீர்" என்று சுருக் கென்று சொன்னாராம். இந்தக் கேலியும் கிண்டலும் குத்தலும் தான் புதுமைப்பித்தன் என்று சுருக்கமாகக் கூறலாம்.

கதைப் பாத்திரங்கள் படைப்பிலிருந்து கதை கூறும் முறை, நிகழ்ச்சிகளை அமைத்தல் முதலிய அனைத்திலும் இந்தக் கேலியை யும் கிண்டலையும் குத்தலையும் மிக எளிதாகவும் சர்வ சாதாரண மாகவும் காணலாம்.

சிறுகதைக்கு இன்றியமையாத உண்மை போன்ற மயக்கத்தை இவை மிக எளிதில் தந்துவிடுகின்றன. ''எடுத்தாளும் விவகாரங்கள் மட்டுமல்லாமல் அவற்றைத் தரும்முறையிலும் ஒரு தனி வேகமும் சக்தியும் காட்டியவர். அப்போதுதான் பிறந்து தத்தித் தவழ்ந்து கொண்டிருந்த சிறுகதை உலகில் புயலெனப் புகுந்தார். கதைப்பொருள், சொல்லும் முறை, உத்திகளைக் கையாளும் லாவகம், வடிவம், நடை முதலிய எல்லாக் கூறுகளிலும் சோதனைக்கு மேல் சோதனையாக அவர் செய்தவை தமிழ் வாசகனையும் விமர்சகனையும் திணறடித்து விட்டன''. ''நேற்றுக் குழந்தையாக இருந்தவன் இன்று திடீரெனப் பீமனாக வளர்ந்து கணமொரு சோதனையும் பொழுதொரு சாயலுமாகக் காட்டினால் யார்தான் மருளமாட்டார்கள்'' என்னும் இரா. தண்டாயுதத்தின் கருத்து முழு உண்மையாகும்!

அதற்குச் சரியான சிறந்த சான்றாய் அமைந்துள்ளது முற்றிலும் நனவோட்ட முறையில் எழுதப்பட்ட கயிற்றரவு என்னும் கதையாகும். 'புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் ஒன்றான இது தமிழில் வெளிவந்துள்ள சிறந்த படைப்புகளில் முக்கியமான ஒன்று; மேலும் அவருடைய நடை வேகத்துக்கும், தமிழ்ச் சிறுகதையில் ''பரிசோதனை ரீதியான எழுத்து'' என்பதற்கும் இது நல்ல எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது'' என்பார் வல்லிக்கண்ணன் (56).

கைலாசபுரம் ஆற்றங்கரை ஓரத்தில், உச்சிப்போதில், பனை மூட்டின் அடியில் குந்தி உட்கரர்ந்திருந்த பரமசிவம் பிள்ளையின் நனவோட்டத்தை அருமையாகப் படம்பிடித்துக்காட்டுகிறார் புதுமைப்பித்தன். காலம், பிரபஞ்சம், படைப்பு ரகசியம், பொதுவான வாழ்வு, தன்னுடைய வாழ்க்கை, கைலாசபுரம் சுற்றுப்புறம் முதலிய அனைத்துச் செய்திகள் பற்றிய நினைப்புகளும் பரமசிவம் பிள்ளையின் மனத்திற்குள் வலிய சிந்தனைகளாக ஓடிமறைகின்றன. கதையின் தொடக்கமே இவ்வாறு அமைந்துள்ளது.

''கள்ளிப்பட்டியானால் என்ன? நாகரிக விலாசமிட்டுத் தொடங்கும் கைலாசபுரம் ஆனால் என்ன? கங்கையின் வெள்ளம் போல, காலம் என்ற ஜீவநதி இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கிறது... ஓடிக்கொண்டேயிருக்கும். தயிர்க்காரி சுவரில் புள்ளி போடுகிற மாதிரி, நாமாகக் கற்பனை பண்ணிச் சொல்லிக் கொள்ளும் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகள் எல்லாம் அடிப்படையில் ஒன்றுதானே? பிளவு—பின்னம் விழாமல் இழுக்கப்

பட்டு வரும் ஒரே கம்பி இழையின் தன்மைதானே பெற்றிருக்கின்றது? இல்லை, இல்லை. சிலந்திப் பூச்சி தனது வயிற்றிலிருந்து விடும் இழைபோல நீண்டுகொண்டே வருகிறது. இன்று—நேற்று—நாளை என்பதெல்லாம் நம்மை ஓர் ஆதார எண்ணாக வைத்துக் கொண்டு கட்டிவைத்துப் பேசிக்கொள்ளும் சவுகரியக் கற்பனை தானே?

"நான் என்ற ஒரு கருத்து, அதனடியாகப் பிறந்த தானல்லாத பல என்ற பேத உணர்ச்சி, எனக்குமுன், எனக்குப் பின் என்று நாமாக வக்கணையிட்டுப் பேசிக் கொண்ட வரிகள்... இவையெல்லாம் எத்தனை தூரம் நிலைத்து நிற்கும்... நான் என நினைத்த, நினைக்கும், நினைக்கப்போகும் பல தனித்துளிகளின் கோவை செய்த நினைப்புதானே இந்த நாகரிகம்... மகாகாலம் என்ற சிலந்தியின் அடிவயிற்றிலிருந்து பிறக்கும் ஜீவத் துளியின் ஓரத்தில் கட்டி வைத்த மணற் சிற்றில்... என்ன அழகான கற்பனை என்று பரமசிவம் பிள்ளை நினைக்கலானார்.

"...மனம் என்ற ஒன்று உடம்பை விட்டுத் தனியாக, அதன் அவசியம் இல்லாமலே இயங்கக்கூடிய ஒன்றா அல்லது நாதத்துக்கு வீணை என்ற சாதனம் அவசியமாக இருப்பது போலத்தானா... நான் பிறப்பதற்கு முன்... என்னைப் பற்றி எனக்குப் பிரக்ஞையுண்டா? என்னைப் பற்றி, இப்பொழுது என்னைப் பற்றியுள்ள சூழ்நிலைக்குத்தான் பிரக்ஞையுண்டா?"

கைலாசபுரத்து ஆற்றங்கரைப் பனை முட்டடியிலே உட்கார்ந்திருந்த பரமசிவம் பிள்ளையின் மனம் 'தான்' இல்லாத ஒரு காலத்தைச் சற்றுச் சிரமத்துடன் கற்பனை பண்ணத் தொடங்கியது.

## 1

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் கைலாசபுரத்திலும் சூரியோதயம், சூரியாஸ்தமனம் தெரிந்து கொண்டுதானிருந்தது... ஆற்றங்கரைப் படிக்கல்லில் அழகிய நம்பியா பிள்ளை வேட்டி துவைப்பார்... ஆற்றில் மூழ்கிக் குளிப்பார், நின்று திருநீறு அணிவார். அனுஷ்டானாதிகள் செய்வார்...

அன்று ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் கருவூரிலே வீரிய வெள்ளம் பிரவகித்தது. அதிலே விளைந்த அனந்தகோடி பீஜங்களிலே ஒன்று நிலைத்தது... உருவம் பெற்றது—மீனாயிற்று.

தவளையாயிற்று. வாலிழந்தது. குரங்காயிற்று. சிசுவாகிக் காத்திருந்தது....

கருவூருக்கு வடக்கே உதரபுரியிலேயிருந்து ஹீங்காரம் போன்ற அலறல் பிறந்தது. தலைகுப்புற வந்து விழுந்தது ஒரு பிண்டம்.—ஒரு ஜன்மம். கருவூர்க் கயிற்றைக் கத்தரித்து விட்டார்கள். தனி ஜன்மமாயிற்று... முலை சுவைத்தது... உறங்கியது... அழுதது...

II

நிலாவொளியிலே நிலா முற்றத்திலே அழகியநம்பியா பிள்ளை குழந்தையொன்றை வைத்துக் கொஞ்சுகிறார். குழந்தை கொஞ்சு கிறது... குழந்தையும் பரமசிவமாக நான்—நீ—அவன் என்ற பேதா பேதப் பிரக்ஞையுடன் வாழையடி வாழையாக இருந்துவரும் விளையாட்டைக் கற்றுக்கொள்கிறது... படிப்படியாக வளர்ந்தது... அவசியமான பிரியமான ஞானச்சரக்குகளை அங்காடிகளிலும் பரமசிவம் பெற்றார்.

...அழகியநம்பியா பிள்ளையின் வேலைகளை மேற் கொள்ளும் கட்டம் வந்தது. பரமசிவம், பரமசிவம் பிள்ளை யானார். உடம்பில் வலு, நெஞ்சிலே உரம். மனசில் நம்பிக்கை, தைரியம். வீட்டிலே சமைத்துப்போட... பிறகு வம்ச விருத்திக் களமாக்கிக் கொள்ள ஒரு யுவதி... சுகம்... போகம்... இப்பொழுது கிழமைக்கும் வாரத்துக்கும் மாதத்துக்கும் ஓடும் வேகந்தான் என்ன? கஷ்டம்—வருத்தம்—கசப்பு—ஏமாற்றம், பெட்டியடிக் கணக்கு இடுப்பொடிக்கும் உழைப்பு... முதுகிலே கூன் விழுந்து விட்டது...வீட்டிலே பொய்ம்மை நடமாடும்... வறுமையும் பெற்றெடுத்த பிள்ளையுடன் கைகோர்த்து விளையாடும்... மனை யாளுக்குக் கண்ணிலே இருந்த அழகு—ஆளைத் தூண்டிவிட்டு இழுக்கும் அந்த அழகு எங்கே போயிற்று. கையில் ஏன் இந்த வரட்சி? வீடோ யோக சாதனம் செய்கிறது. விட்டமற்றுப் போனால் வீடும் வெளியாகும்.... அப்பொழுது அழகியநம்பியா பிள்ளை எங்கே? அவர் மகன் பரமசிவம் எங்கே? எல்லாம் பரம ஒடுக்கத்திலே மறைந்துவிடும்.

எத்தனை துன்பம்... எத்தனை நம்பிக்கைக்காக எத்தனை ஏமாற்று...எத்தனை கடவுள்...நான் தோன்றியபின் எனக்கு என்று எத்தனை கடவுள்கள் தோன்றினார்கள்... ஆற்று மணலைக்கூட எண்ணிவிடலாம் இந்தக் கடவுளர்களை?—பரமசிவம், பரமசிவம்!

உனக்கு ஏதுக்கடா இந்தச் சள்ளை! அதோ காலடியில் பாம்புடா பாம்பு.... கயிற்றரவு!

III

இவ்வாறு காலம், கடவுள், பிறப்பு, 'நான்'' பற்றி எல்லாம் ஆழமாக நினைவை ஓடவிட்டபடி இருந்த பரமசிவம்பிள்ளையைப் பாம்பு கடித்துவிட்டது. பாம்பு கடித்தால் பிழைக்க முடியுமா? பரமசிவம்பிள்ளையைக் கட்டிலிலிருந்து எடுத்துத் தரையில் கிடத்தி விட்டார்கள். யாரோ தலைமாட்டில் உட்கார்ந்து தேவாரம் படித்தார்கள்.

தூரத்திலே தேவாரம் தண்ணீரடியில் முங்கி உட்கார்ந்திருக்கும்போது கேட்கும் தூரத்து ரீங்காரம் மாதிரி சுகமாக இருந்தது... ஸ்மரணையில் கால் இருக்கிற மாதிரி தெரியவில்லையே... அதோ அந்தப் புஸ்தகம்... அதில் என்ன எழுதியிருக்கிறேன்... அழகிய நம்பியைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டும்? நாம் செத்துப்போனால் இந்தக் கால் கட்டை விரல் சாம்பலாகத்தானோ... உறக்கம் வருகிறதோ... நிம்மதியாகக் கண்ணை மூடினால்... அப்பா! என்ன சுகம்... மூச்சு நின்றது... நான் சுழன்றது... ஸ்மரணை சுழன்றது... உயிர்—ஆமாம், உயிரும் அகன்றது... அன்று கருவூரிலே உருவற்று நிலைத்த பிண்டம் இன்று உருவுடன் வதங்கிக் கிடந்தது.

மரணநிலையில் கிடக்கும் அவரது நனவோட்டத்தைப் புதுமைப்பித்தன் கதையின் முடிவில் 'சுழி' என்னும் தலைப்பில் விவரிக்கிறார். ''சாம்பல் காற்றோடு போச்சு; பெயர் பெயரோடு போச்சு. மனித மனம் இம்மாதிரி அனந்தகோடி கூடுகளைக் கட்டிக்கட்டி விளையாடியது. கைலாசபுரத்து மருதமரம் நிழல் கொடுத்தது. மரம் பூத்துக் காய்த்தது. பழுத்தது. ஆற்றில் தண்ணீர். தண்ணீர் மணலிலும் படியிலும் தவழ்ந்து ஓடியது. கள்ளிப்பட்டியானால் என்ன, கைலாசபுரமானால் என்ன?—கால வெள்ளம் தேக்கற்று ஓடிக்கொண்டேயிருந்தது. அதிலே வரையில்லை. வரம்பில்லை. கோடுகூடத் தெரியவில்லை. கருவூரிலானால் என்ன? காட்டூரிலானால் என்ன? சமாதியோ-பிரக்ஞையோ-எதுவானால் என்ன?

''நான் ஓடினால் காலம் ஓடும். நான் அற்றால் காலம் அற்றுப் போகும். காலம் ஓடுகிறதா? ஞாயிறு—திங்கள்—செவ்வாய். நான் இருக்கும் வரைதான் காலமும். அது அற்றுப்போனால் காலமும்

அற்றுப்போகும். வெறும் கயிற்றரவு பரமசிவம் பிள்ளை எங்கே?'' இவ்வாறு கதை முடிகிறது.

படிக்கப் படிக்கச் சிந்தனை ஆழம் நெஞ்சிலே தோன்றி நினைவிலே இனிக்கிறது! பெரும்பான்மையும் இதுதான் புதுமைப் பித்தன் படைத்தவைகளில் கடைசிக்கதை என்று கருதப்படுகிறது (வல்லிக் கண்ணன், பக். 57). இந்தக் கதையில் காலம், கடவுள், பிறப்பு, நான் பற்றியெல்லாம் ஓடும் நினைவுக் கூறுகள் பட்டினத்தடிகள் பாடல் கருத்தை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளன.

கருவூரிலே தோன்றிய வீரிய வெள்ளம், உதரபுரியிலேயிருந்து பிறந்து, மூலை சுவைத்துச் சிறுகுழந்தையாய் வாலிபனாய் யுவதி சுகம் கண்டு, உடலிளைத்து, முதுமை யடைந்து முடியும் வாழ்க்கையைப் புதுமைப்பித்தன் விவரிக்கும் அழகே அழகு! மரணநிலையில் கூறும் நினைவோட்டம் அழகின் சிகரம். இந்தக் கதை முழுவதும் 'காலம், கடவுள், பிறப்பு, நான்' பற்றிய கொள்கையின் விமரிசனம் எனலாம்.

## 12. கதை மாந்தர் வருணனை

கதை மாந்தரைத் தனித்தன்மையோடு புதுமைப்பித்தன் விவரிக்கும் வருணனையிலும் சில இடங்களில் சமுதாய விமரிசனத்தைக் காண்கின்றோம்.

**'நிசமும் நினைப்பும்'**

"ராமபத்மா பிரசுரகர்த்தாக்கள் லிமிடெட் என இலக்கிய சேவைக்கெனவே உதயமான கம்பெனியின் நடையை விட்டு இறங்கி, இருட்டுக்குள் தான் என்ற பேதம் அற்று லயித்துப் போன வி.பி. யை யார் என்ன சொன்னாலும் அவர் பிறவி எழுத்தாளர் தான். இந்த இலக்கிய சிங்காதனம் கிடைக்குமுன்பே, தம்முடைய பெயரின்மேல் அவருக்கு வெறுப்பு உண்டு. இலக்கிய சிங்காதனம் தம்முடைய மானசிக நிச்சயத்தைப் பொறுத்தவரையாவது இடைத்துவிட்ட பிற்பாடு, தம்முடைய தகப்பனார்வழிப் பாட்டன் பேரில் இந்தப் பெயரை முன்னிட்டு வெறுப்பு ஸ்திரப்பட்டது.

"மாட்டுக்குப் பருத்தி விதை வச்சியா, வண்டியை இழுத்துக் குறட்டு ஓரமாக விட்டு விட்டு வா'' என்று அதிகாரம் செய்வோரிடம், இடுப்பில் துண்டை வரிந்துகொண்டு கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொள்ள முயலும் ஜீவன்களுக்குப் பலவேசம்

என்ற பெயர் இருந்தால் முழுவதும் பொருத்தமாக இருக்கும். அன்று சென்ற யுகம் என மனக்குறளி கால நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு காலத்தில், தகப்பனாருடைய சுண்டுவிரலைப் பிடித்துக் கொண்டு அம்பாசமுத்திரம் உயர்தரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் முன்பு, சிவப்பு உல்லன் குல்லாவுக்கு வெளியில் நாய்வால் மாதிரி நீட்டிக்கொண்டிருந்த வாழைநார் முடிப்புச் சடையும், எண்ணெய்க் கசடு வழியும் நெற்றியில் சாந்துப் பொட்டும், காதில் தட்டும், பச்சைக் கோட்டும், பிறந்த நாளுக்கு ஆச்சி வாங்கித் தந்த ஜரிகைக் கரை நீளப்பட்டு வேட்டியும் சிலேட்டும் கையுமாக நின்று நாமகள் கோட்டை வாசல் திறக்க வரங்கிடந்த போது, ''என்னடா, பேருக்கு ஏற்றாற்போலப் பலவேசமாக இருக்கிறாயே; பின்னாளிலே புலிவேசம் போடப்போறே, கையில் என்ன இருக்கு தெரியுமா?'' என்று பிரம்பைக் காட்டி அவர் வரவேற்றது, மனசில் சிலாசாசனம் போலப் பதிந்து கிடந்தது. அதிலிருந்து தொடங்கிய இந்த நாமாவளி ஆத்ம சோதனை இன்றுவரை தீர்ந்தபாடில்லை'' (நிசமும் நினைப்பும், பக். 454).

'நிசமும் நினைப்பும்' என்னும் கதையில் வெளியுலகத்திற்குப் புகழ்பெற்ற எழுத்தாளர் விக்கிரமசிங்கபுரம் பலவேசம்பிள்ளையின் அவல வாழ்வை இவ்வாறு விவரிக்கிறார். ஒரு ஐந்து ரூபாய் பெற முடியாமல், எட்டணாவை வெகு சிரமத்துடன் புத்தக வெளியீட்டாளரிடம் பெற்றுத் திரும்பும் எழுத்தாளர் வி.பி.க்குத் தன்னுடைய பெயரிலேயே வெறுப்புக் கொள்ளும் அளவுக்கு வாழ்வு கசந்துள்ளதை இவ்வாறு விளக்குவது சமுதாயத்தில் எழுத்தாளரின் நிலையை விமரிசனம் செய்வதைப் போல் உள்ளது.

**'செல்லம்மாள்'**

கதை மாந்தரின் மனநிலைகளை வருணிக்கும் முறையிலும் சமுதாய விமரிசனம் சில இடங்களில் இடம் பெறுவதுண்டு.

தாம் வேலை செய்யும் கடையின் முதலாளியிடத்தில் சம்பளம் பெறுவதிலிருக்கும் தொல்லையை — அவலத்தை — விளக்குவதன் மூலம், முதலாளி—தொழிலாளி உறவு முறையுள்ள சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டுவார் புதுமைப்பித்தன். முதல் தேதி அல்லது சம்பளத்தேதி வரும்போது பெறுவதல்ல சம்பளம், முதலாளியின் தயவும் தொழிலாளியின் தேவையும் ஒன்றாய் இணையும் அவ்வப் போது பெறுவதற்குப் பெயரே சம்பளம் என்பதைச் சுட்டிக்காட்டு கிறார் 'செல்லம்மாள்' கதையில்.

''பிரமநாயகம் பிள்ளைக்கு மனசில் எழும் தொல்லைகள், முதலில் ரணம் கட்டி, பிறகு ஆறி மரத்துப்போன வடுவாகி விட்டன. சம்பளத் தேதி என்று ஒன்று இல்லை. தேவையான போது வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதும் சம்பிரதாயம் அதாவது தேவையை முன்கூட்டி எதிர்பார்த்து அதற்காக முதலாளி யின் மனசைப் பக்குவமடையச் செய்து, பிறகு தினசரி இடை விடாமல் சேட்டுக்கேட்டு, வழக்கம்போல, இன்றும் கிடைக்காது என்ற மன ஒய்ச்சலுடன் கேட்டபோது, நிதானத்தைக் குலைக்கும் படியாக அவர் கொடுத்துவிடுவதைப் 'பெற்றுக்கொண்டு' வீடு திரும்புவதே அவர் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தின் வளமுறை. இப்படியாக, மாதம் முழுவதும் தவணைவாரியாகத் தேவைகளைப் பிரித்து, ஒரு காரியத்துக்காக எதிர்பார்த்த தொகையை அத்தியா வசியமாக முளைத்த வேறு ஒன்றுக்காகச் செலவழித்துவிட்டு, பாம்பு தன் வாலைத் தானே விழுங்க முயலும் சாதுரியத்துடன், பிரமநாயகம்பிள்ளை தமது வாழ்வின் ஜீவனோபாய வசதிகளைத் தேவை என்ற எல்லை காண முடியாத பாலைவனத்தைப் பாசனம் செய்ய, தவணை என்ற வடிகால்களை உபயோகிக்கிறார்'' (செல்லம்மாள், பக் 84).

'ஒருநாள் கழிந்ததும்' என்னும் கதையில் எழுத்தாளரின் 'ஒட்டுக் குடித்தன' வாழ்க்கைச் சூழலை வர்ணிப்பதன் மூலம் எழுத்தாளரின் ஏழ்மை நிலையை விமரிசனம் செய்கிறார்.

''கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜால வித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ, எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும். முருகதாசரைப் பொறுத்தவரையில் அது இரண்டு பேர் செய்ய வேண்டிய காரியம்....

''...பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.... சமையல்

அறைவாசலில் ஒரே புகை மயம். ''கமலம்'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக் கொண்டே, உள்ளே நுழைந்தார். உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, ''வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக்கொண்டு வந்தியளே! ஒங்களுக்கின்னு தண்ணிலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லை! இங்கே என்ன இப்போ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்ய ளாக்கும்!'' என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

எழுத்தாளரின் 'அறையின் நிலை' இதுவென்றால், 'அம்பலத்து நிலை'யைப் புதுமைப்பித்தன் கதை மாந்தரின் உரையாடல் வருணனை மூலம் விளக்குகிறார்.

''தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, ''சுப்பிர மணியம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!'' என்றார் முருகதாசர்.

''அதற்கென்ன.... பர்சை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!'' என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

''இது போதாதே!'' என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

...... ...... ...... ......

''அங்கு என்ன செய்யறீங்க?'' என்று மனைவியின் குரல்.

''நீதான் இங்கே வாயேன்!''

கமலம் உள்ளே வந்து, ''அப்பாடா!'' என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, ''இதேது'' என்றாள்.

''சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!''

''உங்களுக்கும்... வேலையில்லையா?'' என்று முகத்தை சிணுக்கினாள், கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக் கொண்டு, ''ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப்பொடியில்லை. அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!'' என்றாள்.

''அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்து விட்டால்?''

''திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!''

"அதற்கென்ன இப்பொழுது?"

"போய் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!"

"திங்கட் கிழமைக்கு"

"திங்கட்கிழமைக்குப் பார்த்துக் கொள்கிறது!"

(ஒருநாள் கழிந்தது, பக். 269-270)

'நியாயம்தான்' என்னும் கதையின் முடிவில் சில சிந்தனை அடுக்குகளை எழுப்புவதன் மூலம் சமூகத்திற்கும் நாணயஸ்தருக்கும் இருக்கும் உறவை—நெருக்கடியை—உள்ளது உள்ளவாறே விளக்கு வார் புதுமைப்பித்தன்.

வடலூர் குமாருபிள்ளை, கடன்காரர்களிடமிருந்து தப்பிவிடுவ தற்காக ஐ பி. கொடுத்துவிட்டு கொழும்பு சென்றார். அங்கே பல தொல்லைகளுக்கு இடையில், ஒரு கடையில் வேலையாளாகச் சேர்ந்து பொருள் ஈட்டிப் பிறகு தானே சொந்தக் கடை வைத்து முன்னேற்றம் அடைந்தார். விதி யாரை விட்டது? அங்கும் பண நெருக்கடி ஏற்பட மூளை வேலை செய்தது. நடைமுறைத் தந்திரம் செய்து, நம்பியவர்களை ஏமாற்றிப் பெரும் செல்வந்தர் ஆனார். இந்தக் கதையின் முடிவில் சில சிக்கல்களை எழுப்பிச் சிந்திக்க வைக்கும் பகுதி சமுதாயத்திற்குக் கொடுக்கும் சாட்டை யடியாய் அமைந்துள்ளது!

"மூலதனம் பெறுவதற்கு வடலூர்ப் பிள்ளை செய்தது சரியா, தப்பா? சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டார். அப்புறம் நாணயஸ்தனாக இருந்தாரே? முதலில் அவரது கை ஒய்ந்து கிடக்கும்பொழுது அவரை நசுக்கிப் போடவேண்டுமென்று, சமூகம் என்ற தனித்தன்மையற்ற ஒன்று, நினைத்ததே! அவர் செய்தது தவறானால், முதலில் அவர் ஐ.பி. போட வேண்டிய நிலைமையை ஏற்பட வைத்தது மட்டும் சரியா? ஒய்ந்து சள்ளுச் சள்ளென்று இருமும் காலத்திலும் வடலூர்ப் பிள்ளைக்கு ஓயாத வேதாந்தமாகி விட்டது இந்த மாதிரிப்பேச்சு". (நியாயந்தான், பக். 68).

"புதுமைப்பித்தன் திருட்டை ஏற்றுக்கொள்ளாத நிலையில், சூழலின் கட்டாயத்தால் ஒருமுறை தந்திரம் செய்துவிட்டுப் பிறகு நாணயத்துடன் நடந்துகொள்வதை எதிர்க்கவில்லை. அச்செயலில் ஏதேனும் தவறிருக்குமானால் அத்தவறு சமுதாயத்தினுடையதே என்று கருதுகிறார் எனலாம்".

''வறுமை பற்றிய கதைகளில்—வறுமைப் படப்பிடிப்பு—சுரண்டலே காரணம்—விடுபட ஒழுக்கம், சட்டம் மீற முற்படுதல்—மீறலைத் தொழிலாகக் கொள்வதைப் புதுமைப்பித்தன் வரவேற்க வில்லை—சூழலின் கட்டாயத்தால் ஒருமுறை மீறலைக் கண்டிக் காமல் சமுதாயத்தையே சாடுகிறார்—பிறர் வறுமை போக்கத் திருடுவதை நியாயப்படுத்துகிறார்'' என்பார் கரு. முத்தய்யா (பக்-93-94 புதுமைப்பித்தன் கதை மாந்தர்).

'சணப்பன் கோழி' கதையின் முன்னுரைப் பகுதியில் பென்ஷன் வாங்கும் அரசு உத்யோகத் தமிழர்களின் மனநிலையை அருமை யாக விமரிசனம் செய்கிறார்.

''மனிதனுடைய வாழ்க்கையில்—தென்னிந்தியத் தமிழ னுடைய வாழ்க்கையில்—வேலையை எதிர்பார்த்துக் காலத்தைக் கலாசாலையில் கழித்துப் படிக்க வைக்கும் முதல் முக்கியத்திற்குப் பிறகு, பெரிய இடத்துப் பெண்ணை—கை நிறையப் பணம் கொண்டுவரும் பெண்ணை — கலியாணம் செய்து வைப்பது இரண்டாவது முக்கியமான விஷயம். தான் பென்ஷனாவதற்குள், தன் மகனுக்கு வேலை பார்த்துக் கொடுத்துவிட்டு, தன் அந்திமக் கிரியைகளைப் பையன் சரியாக நடத்தும் நிலையில் கொண்டுவந்து வைப்பது மூன்றாவது வேலை'',

புதுமைப்பித்தன் கதை மாந்தர்களாக உள்ளோர்களில் பல வகையினர் உண்டு. உலக வாழ்வில் நம்பிக்கை இழந்தவர்கள், நண்பரை நம்பி மோசம் போனவர்கள், காதலில் தோல்வி அடைந்தவர்கள். சனாதன தர்மத்தை நிலைநாட்டியவர்கள், வாயில்லாப் பூச்சிகள், சமூகத்தை எதிர்க்கத் துணிந்தவர்கள், எதிர்த்துத் தோல்வியடைந்தவர்கள், எதிர்க்கத் தெம்பில்லாமல் வெம்பிப் போனவர்கள், சமயப் போர்வையில் உலவும் சாத்தான் கள், பிள்ளைக்கனிபமுதங்கள், எழுத்துலக வேந்தர்கள் எனப் பல வகையினரையும் தம் படைப்புகளில் படம்பிடித்துக் காட்டி யுள்ளார்; விமரிசனம் செய்துள்ளார், என்று கருதுவர் கி. இராசா.

'தமிழ் இலக்கியச் சவத்திற்கு உயிரூட்டியவர்' என்றும், 'புதைமணலில் நின்று கோட்டை கட்டியவர்' என்றும் புதுமைப் பித்தனைப் புகழ்ந்து கூறும் எழுத்தாளர் சமுத்திரம், புதுமைப் பித்தனின் சமுதாய விமரிசனங்களில் உள்ள ''உண்மை நயங்களை உணர வேண்டுமானால் அவரது ஒவ்வொரு வரியையும் படிக்க வேண்டும். வெப்புக் கதிர் வீச்சு போல் என்றுமில்லாதது போல்

தோன்றும் ஒவ்வொரு வரியும் ஒட்டுமொத்தமாக வரும்போது, ஏதோ ஒருவித ரசவாத சேர்க்கைபோலத் தோன்றும்'' என்றும், ''ஒரு சில கதைகளில் புதுமைப்பித்தனின் ஆன்மாவே வரிவடிவம் எடுத்ததுபோல் தோன்றுகிறது.... ஆயிரக்கணக்கான பக்கங்களை விழுங்கும் நாவல்கள் ஏற்படுத்தாத சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தியது...'' என்றும் கூறுவது ஆழ்ந்து எண்ணுதற்குரியது. (மு.கு. நூல் பக்-66)

புதுமைப்பித்தன் படைத்துள்ள 98 கதைகளை எட்டு வகையாகப் பிரிப்பர்.

1. தனி மனித உளவியலை அடிப்படையாகக் கொண்டு மூட நம்பிக்கை, சபலம், பிடிவாதம், அச்சம், துயரம், சோதனை, ஐயம், ஆர்வம், தன்னலம் என்ற பல்வேறு செய்திகளைப் பற்றிய கதைகள்-21.
2. எளிதில் புரிந்து கொள்ளத்தக்க அல்லது புரிந்துகொள்ள இயலாத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள்-15.
3. கலை, இலக்கியம், பாலுறவு. பொருந்தாமணம், கற்பு, மைத்துனம், தீண்டாமை போன்ற சமுதாயச் சிக்கல்களை மையமிட்ட கதைகள்-16.
4. காதலைக் கருப்பொருளாகக் கொண்டவை-10.
5. நகர வாழ்க்கையின் போலித்தன்மையை எடுத்துக்காட்டுபவை-9.
6. கேலி, கிண்டல், குத்தலைக் கருப்பொருளாகக் கொண்ட கதைகள்-8,
7. பேய், பிசாசு, வேதாளம் போன்ற கருப்பொருளைக் கொண்டவை-4.
8. வறுமையைக் கருப்பொருளாகக் கொண்ட கதைகள்-15,

(மு.கு.நூ. பக். 87-88).

## முடிவுரை

இவைகளில் காலமும் இடமும் கருதி சில கதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, அவைகளில் உள்ள சமுதாய விமரிசனங்களைப் பார்த்தோம்.

புதுமைப்பித்தன் தோன்றிய காலத்தில் பார்ப்பனர்—பார்ப்பன வாழ்க்கை, பார்ப்பனச் சமூகச் சூழல்கள், பற்றியே

கதைகள் எழுதப்பட்டன. அதை மாற்றித் திருநெல்வேலி—சைவ வேளாளர், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், நெல்லை மாவட்டத்தின் ஊர்—தாமிருவருணி ஆறு, வட்டார வழக்கு—நெல்லைத் தமிழ் என்று கதைகளில் புகுத்தினார்.

அவருடைய கதைகளில் அவரே கூறியிருப்பதுபோல், நம்பிக்கை வறட்சி இருக்கிறது. ரா. ஸ்ரீ. தேசிகன் குறிப்பது போல வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்துகின்ற ஒரு சோக உள்ளத்தின் வேதனை கலந்திருக்கிறது.

வாழ்க்கைச் சுழிப்பின் கரையோரத்தில் விலகி நின்று வேடிக்கை பார்க்கும் கலைஞனின் தனித்த நோக்கும் விளையாட்டு மனோபாவமும் ரசஞானமும் சேர்ந்துள்ளன.

ஓர் அனுபவ ஞானியின் வேதாந்தமும் தத்துவ தரிசனமும் சிந்தனை வீச்சும் கனம் சேர்க்கின்றன.

ஆற்றல் மிக்க ஒரு படைப்பாளியின் கற்பனை வளமும் உணர்ச்சி வேகமும் புதுமைத் துடிப்பும் காணப்படுகின்றன. கிண்டல் செய்கிற, பிரமிக்க வைக்கிற, பயம் காட்டுகிற போக்கும் இணைந்து கிடக்கிறது. மனித நேயமும் சமுதாயப் பார்வையும் இடைக்கிடை கலந்து கிடப்பதையும் காண முடியும்.

மனப்போக்கிலும், பக்குவத்திலும் வெவ்வேறு உலகில் சஞ்சரிக்க முயன்ற ஒரு உள்ளத்தின் கலைப் பிரதிபலிப்புகளே 'புதுமைப்பித்தன் கதைகள்' என்று வல்லிக்கண்ணன் சரியாகப் புகழ்கிறார்!

## துணை நூற் பட்டியல்


1. அகிலன், கதைக்கலை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1972.
2. ஆறுமுகம் நா., மானுடம் போற்றும் பாவேந்தர், கன்னி பதிப்பகம், காஞ்சிபுரம், 1991.
3. ஆறுமுகம், பூவை எஸ்., கல்கி முதல் அகிலன் வரை, தொல் காப்பியர் நூலகம், சிதம்பரம், 1964.
4. இராசா, கி., புதுமைப்பித்தன் கதை மாந்தர், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972.
5. இராமலிங்கம், மா., புனைகதை வளம், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1973.
6. ,, . இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், 1973.
7. கைலாசபதி, க., இலக்கியச் சிந்தனைகள், கொழும்பு, 1983 (முதற் பதிப்பு)
8. சாலை இளந்திரையன், புதுத்தமிழ் முன்னோடிகள், சேகர் பதிப்பகம், சென்னை, 1969.
9. சிவத்தம்பி, கா., தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சி யும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1980.
10. சுப்பிரமணியம், க. நா., விமரிசனக் கலை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1959.
11. சுப்பிரமணியம், ச. வே & ச. சிவகாமி, (பதி), தமிழ் இலக்கியக் கொள்கை (தொ. 9), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
12. சோமசுந்தரம், மீ. ப. (பதி), புதுமைப்பித்தன் சிறுகதைகள், நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, 1976.
13. தண்டாயுதம், இரா., தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1973.
14. ,, , தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1972.
15. ,, , பாரதி முதல் சுஜாதா வரையில், தமிழ்ப் புத்தகாலயம். சென்னை, 1974.
16. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பூம்புகார் வெளியீடு சென்னை, 1982 (மூன்றாம் பதிப்பு).

17. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை, 1980 (24வது பதிப்பு).

18. புதுமைப்பித்தன், காஞ்சனை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1967.

19. ,, , சித்தி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1980.

20. ,, புதுமைப்பித்தன் படைப்புகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.

21. ,, புதுமைப்பித்தன் கதைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1977 (ஆறாம் பதிப்பு)

22. ,, முல்லை முத்தையா, புதுமைப்பித்தன், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1976.

23. மீனாட்சி முருகரத்தனம், மேலை இலக்கியத் திறனாய்வு—அறிமுகம், என்னெஸ் வெளியீடு, மதுரை, 1987.

24. முருகரத்தனம், தி., புதுமைப்பித்தன் சிறுகதைக் கலை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.

25. மோகன், இரா., புனைகதைத் திறன், ஏரக வெளியீடு, மதுரை, 1980.

27. வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதமி, புதுதில்லி, 1972.

28. வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன், சாகித்திய அகாதமி, புதுதில்லி, 1987.

29. வானமாமலை, நா., மார்க்சிய சமூக இயல் கொள்கை, பாளையங்கோட்டை, 1974.


## செய்தி இதழ்


தினமணி—12-12-1992.


## ஆங்கிலம்


1. Hayakawa, **Language in Thought and Action**, George Alien & Unwin Ltd, London, 1973.

2. Howard Fast, **Literature and Reality**, people's Publishing House, New Delhi, 1955.

3. Meenashisundaram, T. P., The History of Tamil Literature, Annamalai University, 1965,

4. ,, **The pageant of Tamil Literature**, Sekar Pathippakam, Madras 1966,

# சிறப்புச் சொல்லகராதி

(எண்—பக்க எண்)


அப்டன் சிங்களேர் 22
அபிநவக் கதைகள் 6
அம்மணியம்மாள் 8
அழகிரி சாமி, கு. 16
ஆசையின் முடிவு 8
ஆறுமுகம், எஸ். 42
ஆனந்த போதினி 12
ஆனந்த விகடன் 12
இப்சன் 23
இராகவன், எம். எஸ். 8
இராமாநுஜலு நாயுடு 8
இராமையா, பி.எஸ். 14, 18, 19
இராஜகோபாலன், கு. ப. 14, 15, 20
இராஜம் ஐயர் 6
ஊழியன் 18
எட்கர் ஆலன் போ 3
எழில் முதல்வன் 29
ஐங்கதைக் கொத்து 8
ஐயர், வ. வே. சு. 9, 11 12
ஃபிராங்க் ஓகானர் 42
கதா சிந்தாமணி 6
கதா மஞ்சரி 8
கந்தசாமிக் கவிராயர், வே. 21
க, நா. சு. 47
கபாலி 21
கமலாம்பாள் சரித்திரம் 6
கல்கி கிருஷ்ணமூர்த்தி 13, 25
கலைமகள் 12
காந்தி 12, 13
கால்ஸ் வொர்த்தி 22
குசிகர் குட்டிக்கதைகள் 10, 12
குளத்தங்கரை அரசமரம் 9
கூத்தன் 21
சங்கத் தனிப்பாடல் 5
சங்கு கணேசன் 12
சந்திர வர்ணம் பிள்ளை 6
சபாபதி முதலியார் 8
சிலப்பதிகாரம் 5
சிவசங்கரன், தி. க. 28, 42
சிவத்தம்பி, கா. 5, 8, 10, 13
சிவபாத சுந்தரம், சோ. 5, 7, 10
சீனிவாசன், கே. 12, 14
சுக்ராச்சாரி 21
சுகுண சுந்தரி கதை 6
சுதந்திரச் சங்கு 12, 13
சுதேச மித்திரன் 12
சுந்தர ராஜன், பெ. கோ. 14
சுப்பிரமணியம், க. நா. 15, 26
செல்வக் கேசவராயர் 6
செல்லப்பா சி.சு. 26
சொக்கலிங்கம், டி. எஸ். 12, 18
சொக்கலிங்கம், ராய. 18
சொவி 21
தண்டாயுதம், இரா. 24, 68, 74, 95
தமிழ் நாடு 12
தனிப்பாடல்கள் 5
தாண்டவராய முதலியார் 6, 8
திரவியம், கா. 10
திராவிடப் பூர்வ காலக் கதைகள் 7
திருஞானசம்பந்தம், ஆர். 26
திரு. வி. க. 12
தினமணி 18, 20
துரைக்கண்ணன், நாரண 27
தேசபக்தன் 12
தேசிகன், ரா. ஸ்ரீ. 22
தொல்காப்பியர் 5
நந்தி 21
நல்ல சிறுகதையின் முதல் தொகுப்பு 10
நவசக்தி 12
நவயுகப் பிரசுராலயம் 19
நெதானியல் ஹாதார்ன் 3
ப்ராங்க் ஹாரிஸ் 23
பகவந்தரா, வி. 8
பஞ்சதந்திரக் கதைகள் 6
பரமார்த்த குருகதை 6
பன்னிரு நீதிக்கதை 8
பாரத தேவி 12
பாரத மணி 12

பிச்சமூர்த்தி, நா, 14
பிரசண்ட விகடன் 13
பிரதாப முதலியார் சரித்திரம் 6
பிரஜானுகூலன் 13
பிரசண்டோ மேத்தியூஸ் 3
புபி 21
புலவர் வறுமையும்
தக்காணத்துப் பூர்வ கதை
களும் 8
பூலோக விநோதக் கதைகள் 7
பெர்னார்டு ஷா 23
மஞ்சேரி, எஸ். ஈஸ்வரன் 27
மணிக்கொடி 12, 13, 15, 18
மாப்பசான் 10
மாயூரம் வேதநாயகம்
பிள்ளை 6
மாதவய்யா 10, 12
மீனாட்சி சுந்தரம், தெ.பொ. 16
முத்தையா 40
முருக ரத்தனம் 40
மௌனி 14
ரகுநாதன் 17, 24, 29
ரசமட்டம் 21
ராசா, கி. 41
ராமசாமி, நா. சு. 26
வரதராசன், மு. 28
வரதராஜுலு நாயுடு 12
வ. ரா. 18
வல்லிக்கண்ணன் 22, 25
விநோத ரச மஞ்சரி 7
விநோத விகட சிந்தாமணி 8
வில்லியம் ஃபாக்னர் 1, 2
வீரமாமுனிவர் 6
வீராசாமிச் செட்டியார் 7
வெங்கட்ராமையர், டி. எஸ் 8
வைத்தியநாதய்யர், கே. எஸ். 8
வையாபுரிப் பிள்ளை, எஸ். 25
ஜகந்நாதன், கி. வா. 27
ஜேம்ஸ் கூபர் லாரன்ஸ் 4
ஸ்ரீனிவாசன், கே. 27
ஹனுமான் 12
ஹிப்போலைட் தெயின் 32

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி. ஐ. டி. வளாகம், தரமணி, சென்னை-600113
தொலைபேசி : 2350992

## முனைவர். மு. வரதராசனார் அறக்கட்டளை வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் மதிப்புறு இயக்குநரும் தமிழறிஞருமான முனைவர் மு. வரதராசனாரைச் சிறப்பிக்குமுகமாகத் தமிழன்பர் பலரால் 1983 இல் நிறுவப் பட்டது. இவ் அறக்கட்டளைக்குப் படைப்பிலக்கிய ஆய்வு சொற் பொழிவுப் பொருளாய் அமைகின்றது.

### மு. வ. புதினங்களில் தமிழ்—தமிழினம்

முனைவர் பொன். சௌரிராசன், சன 1990; viii+130; ரூ. 20.

முற்றிலும் புதிய கோணங்களில் மு. வ. புதினங்களை இனங் காட்டுவதாக, அவரின் தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றிய எண்ணங்களைச் சிறப்புற வடித்துத் தந்துள்ளது.

### தமிழும் பிராகிருதமும்

பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாதராஜா; சூலை 1992; vii+75; ரூ. 12.

தமிழருக்குப் பிராகிருத இலக்கண, இலக்கியங்களை அறிமுகப் படுத்தியும் ஆங்காங்கே தமிழோடு ஒப்பிட்டும் நூலமைகிறது.

### தமிழும் குறியியலும்

தமிழவன் (முனைவர் எஸ். கார்லோஸ்); நவம்பர் 1992; viii+100; ரூ. 17.

மேலைநாட்டுக் 'குறியியல்' ஆய்வு முறையைத் தமிழுக்கு அறிமுகம் செய்வித்தலாகவும் தமிழில் அறிமுகம் செய்தலாகவும் நூல் அமைந்துள்ளது.

### எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்

முனைவர் சு. வெங்கடராமன்; சூன் 1993; xii+108; ரூ. 18.

இன்று பலராலும் பேசப்பட்டு வரும் பெண்ணியச் சிந்தனை கள் தமிழ்ப்புனைகதைகளில் எங்ஙனம் அமைந்துள்ளன; எண்பது களில் பெற்றுள்ள வளர்ச்சி என்பனவற்றை விளக்குகிறது.